உ

கடவுள் துணை.

ஜம்புநாதீயரால் செய்யப்பட்ட

# ஜாதக ஜம்புநாதீயம்.

ராமஜெயம்
ஸ்ரீ ஷண்முக விலாஸ் [illegible] சாலை,
M. S. வெங்கடசுப்ரமண்ய ஜோஸ்யர்.
மன்னார்குடி.

இது சென்னை முத்தியாலுப்பேட்டை ஐ ஸ்கூலில் சைன்ஸ் உபாத்தியாயராயிருந்தவரும், கணித சாஸ்திரத்தில் பி. ஏ. பட்டம் வகித்தவரும், சிரோன்மனி சுத்த திருக்கணித, வாக்கிய பஞ்சாங்ககணிதரும், இராஜஜோதிட கணிதம் என்ற நவக்கிரக ஸ்புட கணிதம், ஜாதக கணிதம் ஓராம் பாகம் என்ற ஜோதிட கிரகசட்பலம் ஆயுள் கணிதம், ஜாதக கணிதம் இரண்டாம் பாகம் என்ற ஜாதக பலாபலன்கள் நிர்ணயம், பல பாகக் கிரந்தங்களாகிய ஜாதக ராஜ மனோரஞ்சிதம் மலர் ஒன்றும், இரண்டும், ஜாதக லக்கின ஸ்புட பாவ ஸ்புட கணனம், ஜாதக ராஜ பாவ இருவாக்ஷி ஆயுள்பாவம் களத்திரபாவம் இவைகளின் ஆசிரியரும், சர்வார்த்த சிந்தாமணி, பிருஹத் ஜாதகம் இவைகளின் பொழிப்புரை ஆசிரியருமாகிய,

**C. G. ராஜன், B. A., (Mathematics)**

அவர்களால் பார்வையிடப்பட்டு

B. A., (Honours) வகுப்பில் வாசிக்கும்

அவர் குமாரர்

Cl. 50688
1997

**C. சுப்பிரமணியம்** அவர்களால்

மொழி பெயர்புரை செய்யப்பட்டது.

கிடைக்கும் இடம்:—விஸ்வநாதம் அண்டு கோ,
நெ. 7 வெங்கடேச மேஸ்திரி தெரு
சௌகார்ப்பேட்டை போஸ்டு சென்னை.

*All Rights Reserved.*] 1941 [விலை ரூ. 0-12-0.

Printed at "SIRONMANI" PRESS, No. 10, Sundara Mudaly St.,
3rd Lane, Sowcarpet Post, Madras.

# முன்னுரை.

ஜ்யோதிஷம் என்பது ஆகாயத்தில் ஜோதியாய் நமக்குப் புலப்படுகின்ற அண்டங்களால் உண்டாகின்ற நன்மை துன்மைகளைப் பற்றி முந்தியாகவே தெரிவிக்கின்ற ஒரு சாஸ்திரமாகும். இது ஒரு புராதீனமான சாஸ்திரம். துன்மையை நீக்கி நன்மையைக் கோருவது மனிதருடைய இயல்பாதலாலும், மனிதருடைய வாழ்நாளில் இனிமேல் வரப்போகின்ற நன்மை துன்மைகளைப்பற்றி முன்னமே அறிவது அவசியமாதலாலும், இயற்கையாதலாலும், இந்த சாஸ்திரம் எக்காலத்திலும் எல்லோராலும் நன்குமதிக்கப்படும் சாஸ்திரமாகும். இந்த சாஸ்திரம் இந்தியர்களால் மிகவும் பெருமையாகப் பாராட்டப்பட்டு வருகின்ற வேதத்தில் ஒரு அங்கமாகப் பாவிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் இந்த சாஸ்திரம் மிகவும் பெருமை வாய்ந்தது என்று கருதுவதற்கு யாதொரு ஐயமுமில்லை. இதை அநேக நிபுண இந்திய வான சாஸ்திரிகளும் ஜோதிடர்களும் படித்துக் கையாண்டுகொண்டு வந்திருப்பதாக நம்முடையதேசத்து வானசாஸ்திர நூல்களாலும், சோதிட நூல்களாலும் இன்னம் இதர சாஸ்திரங்களாலும் புலப்படுகின்றது.

ஜோதிட சாஸ்திரமானது கணித பாகம், பல பாகம், பிரச்சினை பாகம், முகூர்த்த பாகம் என்ற பெரிய வகுப்புகளாகப் பிரிக்கப்படும். இந்தப் பல பாகத்தைப்பற்றி அநேக ரிஷிகள் அநேக கிரந்தங்களைச் செய்திருக்கிறார்கள். இக் கிரந்தங்களில் கிடைக்கக் கூடியவைகளை நன்றாக வாசித்தறிந்து ஜோதிட சாஸ்திர பல பாகத்தில் வல்லவராயிருந்த ஸ்ரீ ஜம்புநாதீயர் என்றவர் ஜனங்களுடைய நன்மைக்காகச் "ஜம்புநாதீயம்" என்ற ஒரு சிறந்த கிரந்தத்தைச் சமஸ்கிருத பாஷையில் எழுதி இருக்கின்றார். இப்புத்தகத்தில் அவர் அநேக அபூர்வமான விஷயங்களை ஒன்றாகத் திரட்டி ஜோதிடர்கள் சுலபமாக அறியும்படியாய்க் கொடுத்திருக்கின்றார். தமிழ் பாஷை தெரிந்தவர்கள்கூட இப்புத்தகத்தைப் படித்து பிரயோஜனம் அடையும் பொருட்டாக இப்புத்தகம் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு விஷயத்தைக் குறிக்கின்ற பதமாகிய "ஜாதக" என்ற பதம் சேர்த்து "ஜாதக ஜம்புநாதீயம்" என்னும் பெயர் கொடுக்கப்பட்டது. இப்புத்தகத்தைத் தயார் செய்து வெளிப்படுத்துவதில் உதவி செய்தவர்களுக்கு வந்தனம்



# C. G. ராஜன், B. A. (Mathematics)

இவர் (1) "சிரோன்மணி" திருக்கணித பஞ்சாங்கம்

(2) "சிரோன்மணி" வாக்கிய பஞ்சாங்கம்

ஆகிய இவ்விரண்டு பஞ்சாங்கங்களுக்கும் ஆசிரியர்.

இவர் சென்ற துன்மதிவூ (1921–22) முதல் சென்ற விஷுவூ (1941–42 வரையில் ஆனந்த போதினி திருக்கணித பஞ்சாங்கம் ஆசிரியர்.

(30–8–42)

அளிக்கப்படுகிறது. எழுத்துப்பிழை, சொற்பிழை முதலியவைக ளிருந்தால் அவைகளை மன்னித்து இப்புத்தகத்திலுள்ள சாராம் சத்தை ஏற்றுக்கொண்டு இப்புத்தகத்தை ஆமோதிக்கும்படியாய் இதை வாசிக்கும் பெரியோர்களையும் சிறியோர்களையும் வணக்கத் துடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் இப்புத்தகத்தை இன்னும் விருத்தி செய்வதற்காக யாராகிலும் தெரியப்படுத்தும் அபிப்பிராயங்களை வந்தனத்துடன் அங்கீகாரஞ் செய்வதுடன் அவ்வபிப்பிராயங்களுக் கிணங்க விருத்திகள் அடுத்த பதிப்பில் செய்யப்படும். மேலும் இப்பொழுது நடந்து வருகின்ற சண்டை யால் இப் புத்தகத்தை அச்சிட உபயோகப்படுத்தின காகிதத்தை அதிக விலை கொடுத்து வாங்கினதால் இப் புத்தகத்தின் விலையைக் கொஞ்சம் அதிகப்படுத்தி விலை 0-12-0 அணு ஏற்படுத்தியிருக்கிற தென்று அறிக.

7, வெங்கடேச மேஸ்திரி தெருவு,
கிருஷ்ணப்ப நாய்க்கன் குளம் அருகாமை,
சௌகார்பேட்டை போஸ்ட்டு, மதராஸ்.
19-10-1941. A. D.

C. G. ராஜன் B.A.

---

# விஷய அட்டவணை.

:(*):


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| (1) | 1-வது அத்தியாயம், ஓராம் பாவம் | 1 |
| (2) | 2-வது அத்தியாயம், இரண்டாம் பாவம் | 8 |
| (3) | 3-வது அத்தியாயம், மூன்றும் பாவம் | 17 |
| (4) | 4-வது அத்தியாயம், நான்காம் பாவம் | 21 |
| (5) | 5-வது அத்தியாயம், ஐந்தாம் பாவம் | 42 |
| (6) | 6-வது அத்தியாயம், ஆறும் பாவம் | 58 |
| (7) | 7-வது அத்தியாயம், ஏழாம் பாவம் | 64 |
| (8) | 8-வது அத்தியாயம், எட்டாம் பாவம் | 79 |
| (9) | 9-வது அத்தியாயம், ஒன்பதாம் பாவம் | 88 |
| (10) | 10-வது அத்தியாயம், பத்தாம் பாவம் | 94 |
| (11) | 11-வது அத்தியாயம், பதினோராம் பாவம் | 99 |
| (12) | 12-வது அத்தியாயம், பன்னிரண்டாம் பாவம் | 103 |
| (13 | கடினமான பதங்களின் விளக்கமும், குறிப்புகளும் | 104 |

# பிழை திருத்தம்.

குறிப்பு:—வரிகளை எண்ணுவதில் தலைப்பு எட்டிங்கை விட்டு விட்டு எண்ணவும்.

| பக்கம். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 24 | 32 | நிதானமடைடவன் | வீடு (நிதனம்) நாசம் அடையும். |
| 29 | 8 | ராகுக்களால் வீடும் | ராகுக்களால் கல் வீடும் |
| 31 | 3 | கிரகஸ்தானம் எந்த விஷயத்தில் பொருத்தமோ அந்த வீட்டின் பலனை அறிந்து சொல்லப்படுகிறது (சொல்லவும்) | கிரகஸ்தானமானால் ஜாதகனுடைய வீடு தெருவிற்குக் கோடியிலிருக்கும். |
| 37 | 18 | வீடும் தேக சுகமும் | வீடும்நசிக்கும். கடைசியில் |
| 38 | 31 | இருப்பு இரட்டை ராசியால் | இருப்பு ராசியால் |
| 39 | 1 | இம்மூன்றில் மத்தியில் ஒன்று | இம்மூன்றில் ஒன்று |
| 39 | 7 | அந்த கிராமம் | அவனுக்குக் கிராமத்திற்கு |
| 39 | 9 | ஸ்தலம் ஆகும் | ஸ்தலம் ஏற்படும் |
| 39 | 13 | மிச்ரமானல் | மத்தியானல் |
| 41 | 24 | பாவத்தல் | பாவத்தில் |
| 47 | 17 | ஜாதகன் பிறந்தவனும் | ஜாதகனுக்குப் பிறந்தவனும் |
| 58 | 16 | உச்ச சத்துரு | உச்ச மித்துரு |

உ

கடவுள் துணை.

# ஜாதக ஜம்புநாதீயம்.

## துவாதச பாவ பலன்கள்.

### 1-வது அத்தியாயம்.

ஒராவது பாவம்.

---

(1) ஜாதகனுடைய ஜென்ம லக்கினத்தில் சுபக் கிரகங்கள் இருந்தால் ஜாதகன் தீர்க்காயுளும், தனமும், அறிவுமடைவான். பாபக் கிரகங்களும் அப்படியே தன் உச்ச, மித்திர, சொட்க்ஷேத்திர ராசிகளில் இருந்தால் ஜாதகன் மேற்படி பலனையே யடைவன்.

(2) ஜென்ம லக்கினம் மேஷ லக்கினமாகி அதில் சூரியனிருக்கப் பிறந்தவன் தனமுடையவன் ஆவான்.

(3) ஜென்ம லக்கினம் ரிஷபம் ஆகி அதில் சூரியனிருந்தால் ஜாதகன் இருண்ட கண்களுடையவன் ஆவான்.

(4) ஜென்ம லக்கினம் மிதுனம் ஆகி அதில் சூரியன் இருந்தால் ஜாதகன் மலர்ந்த கண்களுடையவன், மூர்க்கனும் ஆவான்.

(5) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி அதில் சூரியனிருந்தால் ஜாதகன் கால் பார்வையுடைய கண்களையுடையவனுவன்.

(6) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி அதில் சூரியனிருக்கப் பிறந்த ஜாதகன் இராக் குருடன், பலிஷ்டன் ஆவான்.

(7) ஜென்ம லக்கினம் துலாமாகி அதில் சூரியனிருந்தால் ஜாதகன் பெற்றோரால் விடப்பட்டவன், மரிக்கப்பட்ட குழந்தையை அடைவான், இருதய நோயுடையவன்.

(8) ஜென்ம லக்கினம் மகரமாகி அதில் சூரியனிருந்தால் ஜாதகன் லோபியாவன், தனுதிகமுடையவன்.

(9) ஜென்ம லக்கினம் மீனமாகி அதில் சூரியனிருந்தால் ஜாதகன் ஸ்திரீ பிரஜைகளை உடையவனுவன்.

(10) ஜென்ம லக்கினத்தில் சூரியன் பாபருடன் கூடியல்லது ராகுவுடன் கூடி லக்கினத்திலிருந்து சந்திரன் அஷ்டமத்திலிருந்தால் ஜாதகன் பிறக்கும்போதே ஆயுதங்களால் மரணமடைவன்.

(11) ஜென்ம லக்கினத்தில் குரூராருடன் கூடிய லக்கினதிபதியிருந்தாலும், ஆறு, எட்டுப் பன்னிரண்டா மிடங்களில் லக்கின பாவாதிபதி குரூரர்களுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் ரோக தேகமடைவான்.

(12) ஜென்ம லக்கினேசன் பாபியாகி லக்கினத்தில் பலஹீனனாகியிருந்தாலும் ஜாதகன் ரோகியாவான், கோபியாவ்ன்.

(13) ஜென்ம லக்கினதிபதி கேந்திர திரிகோணங்களிலிருந்தால் ஜாதகன் வியாதி யில்லாதவனுவன்.

(14) ஜென்ம லக்கின பாவாதிபதி யிருக்கும் பாவனுதன் எட்டாமிடத்திலிருந்தால் ஜாதகன் தூர்ப்பலனுவன். மேற்படி பாவாதிபதியாலடையப்பட்ட ராசினுதன் ஆறு, எட்டாமிடங்களிலிருந்தால் ஜாதகனுடைய அந்த பாவங்களும், பலவீனமாகி அந்த பாவங்களுக்குச் சொல்லப்பட்ட பலன்களும் குறைந்துவிடும்.

(15) ஜென்ம லக்கினத்திற்கு ஐந்து, ஒன்பது ஆகிய பாவங்களில் சனியிருந்து ராகு கேதுக்களுடன் கூடியிருந்தாலும், வேறு பாவர்களுடனும் கூடியிருந்தாலும், அல்லது ஜாதகனுடைய ஜென்ம லக்கினத்தில் ராகு இருந்து மேற்படி ராகு பாபர்களுடன் கூடியிருந்தாலும், திரிகோணங்களில் அதாவது ஐந்து; ஒன்பதாவது பாவங்களில் குளிகனிருந்தாலும்,

(16) ஜென்ம லக்கினத்திலேயே ராகு இருந்து குளிகனுடன் மேற்படி ராகு கூடியிருந்தாலும், அல்லது ஜென்ம லக்கினத்தில் பாபருடனேயே லக்கினதிபதி கூடி இருந்தாலும், ராகு ஜென்ம லக்கினத்திலிருந்தாலும் ஜாதகன் சர்ப்பம், திருடன், வஞ்சகன் முதலியவர்களால் நிச்சயமாய் பயமடைவன்.

(17) ஜென்ம லக்கினத்தில் சூரியனுடன் சனி கூடியிருந்தாலும், பார்த்தாலும் ஜாதகனுக்கு திருடனுல் பயம் நிச்சயமாயுண்டாகும்.

(18) ஜென்ம லக்கினத்தில் சனியும், ராகுவும் கூடியிருந்தால் ஜாதகனுக்கு பிரகத் பீஜம் உண்டாகும்.

(19) ஜென்ம லக்கினத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகனுக்கு தொப்புள், (குல்மம்) விருஷணம் பெருத்திருத்தல் முதலியன உண்டாகும்.

(20) ஜென்ம லக்கினத்தைச் சூரியன் பார்த்தால் ஜாதகன் பிதுரு தனமுடையவன், ராஜ சேவையுடையவன், ஜல வஸ்துவால் மகா தனமடைவன், தர்மமுமடைவன்.

(21) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாமிடத்தைச் சூரியன் பார்த்தால் ஜாதகன் ஸ்தூல சிசினமும், வியாதியுமுடையவன், சொற்ப புகழுடையவன், ராஜ பூஜிதன், விரதமுடையவன், வேசி ஸ்திரீகளுடன் சேர்பவன், தனமுடையவன், சுகி.

(22) ஜென்ம லக்கினத்தைச் சனி பார்த்தால் வயதான ஸ்திரீ, சுந்தரமான மிருதுவான கெட்ட ஸ்திரீகளின் சேர்க்கையடைவான்.

(23) ஜென்ம லக்கினத்தைச் சூரியன் பார்த்தால் ஜாதகன் பராக்கிரமம், சௌரியம் முதலியன உடையவன், தகப்பனுக்குப் பிரியன், பிதுரு காரியங்களைச் செய்து ஜீவிப்பான்.

(24) ஜென்ம லக்கினத்தைச் சந்திரன் பார்த்தால் ஜாதகன் புகழுடையவன், அறிவுடையவன்.

(25) ஜென்ம லக்கினத்தைச் செவ்வாய் பார்த்தால் ஜாதகன் ஸ்ரீமான், யுத்தப் பிரியன், சாகஸமுடையவன்.

(26) ஜென்ம லக்கினத்தைப் புதன் பார்த்தால் ஜாதகன் எழுதுபவன், சிற்பியாவன்.

(27) ஜென்ம லக்கினத்தைக் குரு பார்த்தால் ஜாதகன் நியமமுடையவன், அரசனுக்குப் பிரியன், கொண்டாடப்பட்ட புகழுடையவன் ஆவான்.

(28) ஜென்ம லக்கினத்தைச் சுக்கிரன் பார்த்தால் ஜாதகன் வேசியிடம் பற்றுடையவன், நல்ல போகமுடையவன், தனமுடையவன்.

(29) ஜென்ம லக்கினத்தைச் சனி பார்த்தால் ஜாதகன் தரித்திரமடைவன், மூர்க்கன், மரண காரணமுமுடையவன்.

30. ஜென்ம லக்கினத்தைச் சுப சந்திர, சுக்கிரர்கள் பார்த்தால் ஜாதகன் தனமுடையவன், கீர்த்தி யுடையவன், (ஸ்திரீயாயின் கணவனுக்கினியவள்.) எஜமானனுக்கு இஷ்டமானவள்

31. ஜென்ம லக்கினத்தைச் சந்திரன், குரு இவர்கள் பார்த்தால் ஜாதகன் வணக்கமுடையவன், ஸ்ரீமான் ஆவான்.

32. ஜென்ம லக்கினத்தை புதனும் சந்திரனும் பார்த்தால் ஜாதகன் தனமடைவன், எழுத்து எழுதுபவன்.

33. ஜென்ம லக்கினத்தை புதன், குரு இவர்கள் பார்த்தால் சேனாதிபதியாவன்.

34. ஜென்ம லக்கினத்தை புதன், சுக்கிரரிவர்கள் பார்த்தால் ஜாதகன் தனமடைவான், எழுத்து எழுதுபவன், அரசாளுபவன், ஸ்ரீமான் ஆவான்.

35. ஜென்ம லக்கினத்தை குருவும், சுக்கிரனும் பார்த்தால் ஜாதகன் மந்திரியாவன்.

36. ஜென்ம லக்கினம் மித்திரர்களாலும், பாபர்களாலும் அடையப்பட்டு பாபர்களால் மேற்படி லக்கினம் பார்க்கவும்பட்டால் ஜாதகன் சண்டியாவன், சூரன், கோபமுடையவன், பிரசண்ட சூரன்.

37. ஜென்ம லக்கினத்தை சுபர்களான கிரகங்களில் மூன்று சுபர்கள் பார்த்தால் ஜாதகன் விசேஷ தனமுடையவன், அல்லது அரசனாவன்.

38. ஜென்ம லக்கினத்தை சத்துரு, மித்திரக் கிரகங்கள் பார்த்தால் ஜாதகன் ரோகமும், தனமும் உடையவன் ஆவான்.

39. ஜென்ம லக்கினத்தைக் குரு பார்த்தால் ஜாதகன் மந்திரியாவன், அல்லது அரசனுக்குச் சம தனமும், சுகமும் உடையவன் ஆவான்.

40. ஜென்ம லக்கினத்தைச் சுபர், அசுபர் இவர்கள் பார்த்தால் ஒரே பலன்தானுண்டாகும்.

41. ஜென்ம லக்கினம் யாராலும் பார்க்கப்படாமலிருந்தால் ஜாதகன் சமஸ்த குணங்களாலும் விடப்பட்டவன்.

42. ஜென்ம லக்கினமும், நான்காம் பாவமும் மேற்சொன்ன கிரகங்களால் பார்க்கப்பட்டாலும், எல்லாக் கிரகங்களும், லக்கினம் நான்கு இந்த பாவங்களைப் பார்த்தாலும் ஜாதகன் அரசன் ஆவன்.

43. ஜென்ம லக்கினத்தை மூன்று சுபர்கள் பார்த்தாலும், மூன்று சுபர் அடைந்திருந்தாலும் அரசர்களுடைய ஜனனமானது உண்டாகும்.

44. ஜென்ம லக்கினத்திற்கு ஏழு, ஆறு, எட்டு இந்த பாவங்களில் பாபர்களின்றி சுபர்கள் மட்டுமிருந்தால் அதியோகம் என்கிற யோகமுண்டாகும். மேற்படி யோகத்திற் பிறந்தவர்கள் அரசர்களும், மந்திரிகளும் ஆவார்கள்.

45. ஜென்ம லக்கினத்தில் பூர்ண சந்திரன் இருந்தால் ஜாதகன் மணி, ரத்ன, தனாதிகளுடையவன், ஜென்மலக்கினத்தில் க்ஷீண சந்திரனிருந்தால் ஜாதகன் தாமசமுடையவன், கோபிஷ்டன், துஷ்டன், துரோக புத்தியுடையவன்.

46. கடகம், மேஷம் இவைகள் ஜன்ம லக்கினமாகி க்ஷீண சந்திரன் அதில் இருந்தால் ஜாதகன் தனமுடையவன், குணமுடையவன், துவிபாத, சதுஷ்பாத, பகுபாத ராசி வர்க்கங்களில் சந்திரனிருந்தால் ஜாதகன் தூர்த்தன், செவிடன், மூடவன், ஊமை, அல்லது தெத்துவாயனவன்.

47. ஜென்ம லக்கினத்தைச் சுபர்கள் பார்த்தால் ஜாதகன் நற்பலனும், கீர்த்தியுமடைவன், தனமுமடைவன், நல்ல ரூபம், மந்திரித்துவம், சுகம் நோயில்லாமை முதலியன உடையவன்.

48. ஜென்ம லக்கினத்தைச் சுபர் பார்த்தால் நல்ல யோக பலன்களும், சுபருடன் சந்திரன் கூடிப் பார்த்தால் வேடனயிருந்தாலும், காட்டுமிராண்டியா யிருந்தாலும் ராஜாவாகவும் ஆவான். மேலும் சுய க்ஷேத்திரத்தில் அல்லது அதிமித்திர ராசிகளில் அல்லது உச்ச ராசிகளில் இருந்தாலும் மேற்சொல்லிய பலனே நடக்கும். இவர்கள் தன்னுடைய நீச்ச, சத்துரு ராசிகளிலிருந்தாலும், அல்லது இந்த ராசிகளில் குரு இருந்து சந்திரன் பார்த்தாலும் ஜாதகனுக்கு துக்கமுண்டாகும். அப்போது மேற்படி சந்திரன் நின்ற ராசி நாதனைச் சந்திரன் பார்க்காமலிருந்தால், ஜாதகனுக்குச் சகல அரிஷ்டங்களும் நிவாரணமாய் விடும்.

49. ஜாதகன் ஜெனிக்கும்போது நவ கிரகங்கள் சந்திர ஒரையிலிருந்து சந்திரன் தன் ஒரையில் இருந்தாலும், தன் ஒரையிலுள்ள சந்திரனை சந்திர ஒரையிலிருக்கும் கிரகங்கள் பார்த்தாலும் ஜாதகன் அரசனவன்.

50. ஜென்ம காலத்தில் சூரியனுடைய ஓரையில் கிரகங்களிருந்து சந்திரனும் சூரிய ஓரையை அடைந்திருந்து சந்திரன் மேற்படி கிரகங்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தன் பிரதாபத்தினுல் சம்பாதிக்கப்பட்ட தனத்தை உடையவன்.

(51) ஜென்ம காலத்தில் சந்திரன் எந்தக் கிரகத்தால் பார்க்கப்படுகின்ருனே அந்தக் கிரகத்தினுடைய திரேக்காணத்தையுமடைந்திருந்தால் ஜாதகன் அரசனுவன், நித்திய கல்யாணமுடையவனுவன்.

(52) ஜென்ம காலத்தில் செவ்வாய், புதன், குரு, சுக்கிரன் சனி, சூரியன்,சந்திரன் இவர்கள் மேஷாதி ராசியைப் பார்த்தால் ஜாதகன் அரசனுவன்.

(53) ஜென்ம காலத்தில் மேஷ ராசியை புதன் பார்த்தால் ஜாதகன் மந்திரியாவன், சற்குணவான், தனமுடையவன், திருடன் ஆவான்.

(54) ஜென்ம காலத்தில் புதன் ரிஷப ராசியிலிருந்தால் ஜாதகன் புளிப்பில் வெறுப்புடையவன், தனமுடையவன், அரசனுவன், ஸ்ரீமான், இரக்கமுடையவன்.

(55) ஜென்ம காலத்தில் புதன் ஏழாம் பாவத்தில் மிதுனத்தில் இருந்தால் தீரமுடையவன், ஜாதகன் நூல்களே நெய்பவன், தனமுடையவன்.

(56) மேற்படி புதன் சுய க்ஷேத்திரத்தில் கன்னியில் இருந்தால் ஜாதகன் கவி, ஞானமுடையவன், அரசனைப் போல் தனமுடையவன், ஜோதிஷன், பூமி ஆளுகையுடையவன், ஸ்திரீ நாசமுடையவன், குரூரமுடையவன், சேனுதிபதியாவன், யாகம் செய்பவன், மந்த சுபாவமுடையவன், தீன ஜனங்களாலடையப்படுபவன்.

(57) ஜென்ம காலத்தில் துலாராசியில் புதனிருந்தால் ஜாதகன் குரூர செய்கையுடைய அரசன், தட்டார் வேலே செய்பவன், அதாவது சொர்ண வேலே செய்பவன், வைசியர்களில் முதல்வன், துஷ்டர்களுக்கு முதல்வன்.

(58) ஜென்ம லக்கினம் கடகமாகி ஐந்தாம் பாவமான விருச்சிகம் புத்திர ஸ்தானம் ஆகி அங்கு புதனிருந்தால் ஜாதகன்

இரண்டு புத்திரனுடையவன், மூடவன் ஆவன், துணிகளை வெளுப்பவன், தனமில்லாதவன் ஆவான்.

(59) ஜென்ம காலத்தில் தனுசு ராசியில் புதனிருந்தால் ஜாதகன் சூரன், சிரேஷ்டன், அரசனானவன், உதாரமுடையவன், தர்மக் கொடியுடையவன்.

(60) ஜென்ம காலத்தில் மகரத்தில் புதனிருந்தால் ஜாதகன் அரசர்களுக்கரசனாவன், ஒருபோதும் தனமில்லாமலிரான்.

(61) ஜென்மகாலத்தில் கும்ப ராசியில் புதனிருந்தால் ஜாதகன் ஸ்திரீ லோலனான அரசனாவன், அரச மந்திரியாவன், ராஜ மோகன், பாபியாவன்.

(62) ஜென்ம காலத்தில் மீன ராசியில் புதனிருந்தால் ஜாதகன் பாபி, ஆஸ்பமறிந்தவன், அரசனாவன், கிழத் தன்மையுடையவன், குரூரம் அதிகமுடையவன்.

(63) ஜென்ம லக்கினத்திற்காவது, சந்திர லக்கினத்திற்காவது, லக்கினாதிபதிக்காவது இந்த பலன் சமமாகும்.

(64) ஜென்ம லக்கினத்தில் பூர்ண சந்திரனிருந்தால் ஜாதகன் நற்குணமும், தனமும் உடையவன்.

(65) ஜென்ம லக்கினத்தில் க்ஷீண சந்திரன் இருந்தால் ஜாதகன் தாமத குணமுடையவன். துஷ்டன், கோபமுடையவன்.

(66) ஜென்ம லக்கினமாக கடகம், மேஷம், ரிஷபம் இவைகளாகி அதில் சந்திரன் க்ஷீண சந்திரனாகி யிருந்தாலும், இருகால் ராசிகளிலிருந்தாலும், நாற்கால் ராசிகளிலிருந்தாலும், நாற்கால் ராசி வர்க்கங்களிலிருந்தாலும் ஜாதகன் தனம், குணம் இவைகளையுடையவனாகியும் தூர்த்தத் தன்மை, செவிட்டுத் தன்மை, ஊமைத் தன்மை, குறைந்த புத்தி இவைகளையடைவான்.

(67) ஜென்ம காலத்தில் தனுசு, மீனம், துலாம், கும்பம், மகரம் இவைகள் ஜாதகனுக்கு ஜெனனலக்கினமாகி அதில் சனியிருந்தால் அழகான அங்கங்களுடைய அரசனாவன், வித்துவானாவன், பட்டணம், கிராமம் இவற்றிற்குத் தலைவனாவன்.

# 2-வது அத்தியாயம்

## இரண்டாம் பாவம்.

——:(*):——

(1) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் பாபக்கிரகங்களிருந்தால் ஜாதகன் முக ரோகமடைவன். ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் சுபக்கிரகங்களிருந்தால் ஜாதகன் தனவான், வெகு தனம் தானியம் இவைகளை உடையவன்.

(2) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டில் சூரியன் இருந்தால் ஜாதகன் ரோகமுடையவன்.

(3) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் சந்திரனிருந்தால் ஜாதகன் சற்குடும்பவான்.

(4) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாவது பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் கெட்ட உணவுடையவன்.

(5) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாவது பாவத்தில் புதனிருந்தால் ஜாதகன் தனவான்.

(6) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாவது பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் சுகமுடையவன்.

(7) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாவது பாவத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் போக உற்சாகமுடையவன்.

(8) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாவது பாவத்தில் சனி இருந்தால் ஜாதகன் அபகீர்த்தியுடையவன்.

(9) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் சுபர், பாபரிருவர் கூடியிருந்தால் சொற்ப வரவும், சொற்ப சிலவும் ஏற்படும்.

(10) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் சூரியன் பலவானாயிருந்தால் ரத்தினம், தாம்மிரம், பலமான திரவியம் முதலானவற்றை யடைவன், மேலும் மேற்படி சூரியனை துவிபாத சதுஷ்பாத வர்க்கங்களில் மேற்படி சூரியனிருந்தால் ஜாதகனுடைய தனத்தை அரசனும், திருடரும் கொண்டுபோய் விடுவார்கள்.

(11) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் பூர்ண சந்திரனிருந்தால் ஜாதகன் பூர்ண சுகி, மணி ரத்னம் முதலிய தன விருத்தியுடையவன். கற்பூரம், சந்தணம், சந்தோஷம், முத்து, கீர்த்தி இவற்ருலும் தனமடைவான்.

(12) ஜென்ம லக்கினத்திற்கு செவ்வாய் இரண்டாம் பாவத்தில் பலாட்டியனுயிருந்தால் ஜாதகன் பயிர், பசு முதலியவற்ருல் தனமடைவான்.

(13) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் குரு இருந்தாலும், புதனிருந்தாலும், சுக்கிரனிருந்தாலும் ஜாதகன் சொர்ணம், வெள்ளி இவற்ருல் தனமடைவான்.

(14) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் சனி இருந்தால் ஜாதகன் சேர்த்து வைத்த திரவியத்தை நாசமாக்கி விட்டு வெளி தேசத்தில் வெகு லாபமடைவன், மேலும் சத்துரு ராசியில் மேற்படி சனி இரண்டாம் பாவத்தில் இருந்தால் பற்பல வழிகளிலும் ஆபத்து தரும் யுக்தியுடையவன், பற்பல வழிகளில் காமாதுரனுக சிலவும் செய்பவன்.

(15) ஜென்ம லக்கினத்திற்கு ராகு இரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் பொய் பேசுபவன், மானக்கேடான வேலே செய்பவன், மேலும் பாபர்கள் இரண்டாம் பாவத்தைப் பார்த்தா லும் ஜாதகனே ஆயுள் குறைவுடையவனுகச் செய்வார்கள்.

(16) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் சூரிய சந்திராளின் இருப்பு நேர்ந்தாலும், பார்வை நேர்ந்தாலும் ஜாத கனே பணமில்லாதவனுக செய்வார்கள்.

(17) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவத்தில் செவ்வாயும், சுக்கிரனும் இருந்தால் ஜாதகனுக்கு சூரிய, சந்திரருக்குச் சொன்ன பலனுடன் கூட தரித்திரத்தையும் கொடுப்பார்கள்.

(18) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் சூரியன், சனியுடன் கூடியிருந்தால் ஜாதகர் கஷ்டத்தால் தனத்தை அடைவான்.

(19) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் செவ்வாயுடன் சனி கூடி இருந்தால் ஜாதகன் ஞானத்தை விற்று தனம் சம்பாதிப்பவன்.

(20) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தை க்ஷீண சந்திரனும், புதனும் பார்த்தால் ஜாதகன் தனத்தை நாசம் செய்பவன், இவர்களில் புதன் இரண்டாம் பாவத்திலிருந்து க்ஷீண சந்திரன் பார்த்தாலுமிப்படியே நேரிடும்.

(21) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் புதனிருந்து சந்திரனால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் சகல சொத்து, தனம் இவற்றை நாசமாக்குவன்.

(22) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவத்தில் குரு இருந்து புதனால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் தனத்தை யழித்துவிட்டு தனமில்லாதவனாவான்.

(23) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் சூரிய, சுக்கிரரிருந்து சந்திரனலிவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தனத்தையடைவன்.

(24) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் சுபரிருந்து புதனால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு மேற்சொன்னபடி சுப பலனே நடக்கும், எப்பொழுதும் தனமடைவன்.

(25) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவத்தில் குருவும், சுக்கிரனும் கூடியிருந்தால் ஜாதகன் பூமி பாலனாகி வமிசத்திற்கு ஓர் ஆபரணம் போன்றவனாக விளங்குவன்.

(26) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவத்தில் சுபர்களின் பார்வையிருந்தால் ஜாதகன் விசேஷ லாபமுடையவன்.

(27) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவத்தில் சூரியனும், மித்திரக் கிரகமும், சனியும் கூடிப் பார்த்தால் ஜாதகனுடைய தனம் போய்விடும்.

(28) ஜென்ம லக்கினத்திற்கு நான்கு பாவங்கள் நான்கிலும் அதாவது பலமுள்ள (கிரகங்கள்) இரண்டு, ஒன்பது, பத்து, பதினொன்று முதலிய பாவங்களில் இருந்தால் ஜாதகன் நிறைந்த தனமுடையவனாக எப்போதும் குபேரனைப் போலிருப்பான்.

(29) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவத்தினால் சேர்க்கப்பட்ட திரவியத்தையும், ஒன்பதாம் பாவத்தினால் உண்டாகும் தனத்தையும், அதிருஷ்டத்தையும் தொழிலில் லாபத்தை பதினோராம் பாவத்தாலும், பத்தாம் பாவத்தால் சுய ஜாதிக்குரிய வழியை

யும், அதாவது கிரக ஜாதிக்குரிய தொழிலேயும் ஜாதக்ருக்கு ஜோதி டர்கள் சொல்லவும்.

(30) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவத்தின் அதிபதிக் குடைய தேசத்திலாவது அவனுடைய திக்கிலாவது ஜாதகனுக்கு திரவிய விருத்தியுண்டாகும். இவற்றை ராசி சக்கிரத்தின் வழி யால் சர்வ திக்குகளேயும் யோசிக்கவும்.

(31) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவாதிபதி பதினோ ராம் பாவத்தில் அல்லது தன் உச்சத்தில் இருந்தாலும், மித்திர ராசியிலிருந்தாலும், லக்கினத்திற்குக் கேந்திர திரிகோணங்களிலி ருந்தாலும், சுய க்ஷேத்திரத்திலிருந்தாலும் ஜாதகன் தன லாப மடைவன்.

(32) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவாதிபதி கேந்தி ரத்தில் இருந்தாலும், தனகாரகன் தன் உச்சத்திலிருந்தாலும் ஜாதகன் ஆயிரம் நிஷ்கமுடையவனுகி அழியாத புகழுடைவான்.

(33) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவாதிபதி பதினோ ராம் பாவத்திலிருந்தாலும், பதினோராம் பாவாதிபதி இரண்டாம் பாவத்திலிருந்தாலும், அல்லது ஒன்பதாம் பாவாதிபதியாவதிரண் டாம் பாவத்திலிருந்தாலும் ஜாதகன் தன லக்ஷ்மீ பதியாவன்.

(34) ஜென்ம லக்கினத்திற்கு நான்கு கேந்திரங்களிலும் சுப ரிருந்தால் ஜாதகன் இரண்டு லக்ஷம் தனமடைவான்.

(35) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவாதிபதி சிம்மாச நாம்சத்திலிருந்தாலும், பாராவதாம்சத்தில் இருந்தாலும், இரண் டாம் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் தன் உச்ச ராசியில் இருந்தாலும், பதினோராம் பாவாதிபதி நான்காம் பாவத்திலிருந் தாலும் இப்படி இருந்து இத்துடன்,

(36) ஜென்ம லக்கினம் தனுசு ஆகி அதில் குருவிருந்தாலும் ஜாதகன் கோடீசுவரனுவன். இதில் சந்தேகமேயில்லை.

(37) ஜென்ம லக்கினத்திற்குப் பதினோராம் பாவாதிபதி நான்காம் பாவத்திலிருந்து நான்காம் பாவாதிபதியும், லக்கின பாவாதிபதியும் நான்காம் பாவத்தைப் பார்த்தால் ஜாதகன் புதை யல் தனமடைவான், இப்படியிருந்து ராஜயோகத்தில் பிறந்தவர்க

ளும் விசேஷ தனமடைவார்கள், அப்படியல்லாத மற்றவர்கள் வெகு சம்பத்தடைவார்கள்.

(38) சர்வாஷ்டகவர்கத்தில் பரல்கள் எந்த ராசி திக்கில் அதிகமுள்ளதோ ஜாதகனுக்கு அந்த தேசத்தில் திரவிய விருத்தி சந்தேகமின்றி உண்டாகும்.

(39) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்திற்குறிய கிரக பாவ குணங்களாலும் அந்த ஸ்தானத்திலுள்ள கிரகங்களுடைய குணங்களாலும் அந்த திக்குக் கிரகங்களுக்குரிய குணங்களாலும் ஜாதகனுடைய அம்சாதிகளாலாவது பலன் சொல்லவும்.

(40) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் ஆயுளுடையவன்.

(41) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் புதனிருந்தால் ஜாதகன் சுகமுடையவன்.

(42) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாவது பாவத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் ஸௌபாக்கியமுடையவன்.

(43) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாவது பாவத்தில் சந்திரனிருந்தால் ஜாதகன் பசுவிருத்தி முதலிய சகல சுகங்களையும் அடைவான்.

(44) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் செவ்வாய், சூரியன், சனி, ராகு இவர்களிருந்தால் ஜாதகனுக்கு தனமின்மை கட்டுப்படல், ஹானி, ரோகம் இவைகளுண்டாகும்.

(45) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்திற்கதிபதி சுக்கிரனுடன் கூடி ஆறு எட்டுப் பன்னிரண்டாமிடங்களிலிருந்தால் ஜாதகனுடைய கண் பார்வை, அங்கம் இவற்றில் குறைவுண்டாகும்.

(46) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவாதி சுக்கிரனுடன் கூடி ஆறு, எட்டு, பன்னிரண்டாம் பாவங்களில் இருந்தால் ஜாதகன் நேத்திர பங்கமுடையவன்.

(47) ஜென்ம லக்கினாதிபதி சூரியனுடன் கூடி ஆறு எட்டுப் பன்னிரண்டாமிடங்களில் இருந்தால் அப்போது பிறக்கும் ஜாதகன் ஜாதிக் குருடனவன்.

(48) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவாதிபதி குருவுடன் கூடி எட்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் ஊமையாவான், எவ்விடத்தும் கிரகங்கள் உச்ச சொட்க்ஷேத்திர ஸ்தானங்களிருந்தால் மேற்சொல்லிய தோஷமுண்டாகாது.

(49) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்திற்கதிபதியான கிரகம் பாபருடன் கூடி யிருந்தாலும், இரண்டாமதிபதி பாவருடன் கூடி துஸ்தானங்களிலிருந்தாலும் ஜாதகனுக்கு ஸ்திரீ நாசமுண்டாகும், சுக்கிரனும் அங்கு கூட யிருந்தாலும், ஏழாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தாலும் அந்தக் கிரகங்களெத்தனையோ அத்தனை மனைவி நாசமடைவார்கள்.

(50) ஜென்ம லக்கினத்திற்கு கேந்திர திரிகோணங்களை சுக்கிரன் அடைந்திருந்தாலும் இரண்டு ஏழுக்குடையவர்களுடன் எத்தனை கிரகங்கள் கூடியிருக்கிறார்களோ அத்தனை தாரங்கள் ஜாதகனுக்குண்டாவார்கள்.

(51) விவாககாரகனாக குரு அல்லது சந்திரன் அல்லது ஜென்ம லக்கினத்திற்கு நான்காம்பாவாதிபதியும், புத சுக்கிரரும், குருவும், புதனும் கூடி எட்டாமிடத்திலிருந்தால் ஜாதகன் கல்வி குறைவுடையவன், விவாகமில்லாதவனாவன்

(52) மேற்படி கிரகங்கள் ஜென்ம லக்கினத்திற்கு கேந்திரங்களில் அல்லது அதன் திரிகோணங்களில் அல்லது சுயக்ஷேத்திரத்திலாவது இருந்தால் ஜாதகன் கல்வி யுடையவனாவன்.

(53) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவத்திற்கதிபதியும் குருவும் துர்ஸ்தானங்களில் அதாவது ஆறு, எட்டு, பன்னிரண்டாம் பாவங்களிலல்லது இரண்டாம் பாவத்திலேயே அல்லது கேந்திர திரிகோணங்களில் இருந்தாலும், சத்துரு நீச்ச மூடத்தானங்களிலிருந்தாலும் இந்த பாவாதிபதிகள் துர்ப்பெலனாயிருந்தாலும் மேற்படி பாவங்கள் விருத்தியாகாது.

(54) ஜென்மலக்கினத்திற் கிரண்டாம் பாவத்தில் ராகுவாவது சூரியனாவது அல்லது ராகுவிருந்த ராசியதிபதியாவது கூடியிருந்து இரண்டாம் பாவாதிபதியின் திசை புக்தி இவைகள் வந்தால் அதில் தந்த ரோகமுண்டாகும்.

(55) மேற்சொல்லியபடி இரண்டாம் பாவாதிபதியிருந்திருந்தால் ஜாதகன் மேல்வாயில் ரோகமடைவான்.

(56) ஜென்ம லக்கினத்திற்குப் பத்தாம் பாவாதிபதியும் ஆறும்பாவாதிபதியும் லக்கின பாவத்திலிருந்து இரண்டாம் பாவாதியும் சுக்கிரனும் கூடியிருந்தால் அரசகோபத்தால் ஜாதகன் கண்ணையிழப்பான்.

(57) ஜென்ம லக்கினத்தில் சனியும், ஆறும் பாவாதிபதியும், இரண்டாம் பாவாதிபதியுடன் கூடி இருந்தால் ஜாதகன் காது அறுபடும்; அப்படியில்லையேல் காதில் நோயுண்டாகும். இவர்கள் ஒன்று நான்கு, ஏழு, பத்து இந்த பாவங்களில் எங்காவது இருந்தால் மேற்படி பலன் களுண்டாகாது.

(58) ஜென்ம லக்கினத்தின் இரண்டாம் பாவாதிபதியும் சந்திரனும் கேந்திரத்தில் இருந்தால் ஜாதகன் வெள்ளிப் பாத்திரத்தில் போஜனம் செய்வான்.

(59) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவாதிபதி கேந்திரங்களிலிருந்து சந்திரனுடன் சுக்கிரன், குரு இவர்களும் கூடியிருந்தாலும் ஜாதகன் தங்கப்பாத்திரங்களடைவான்.

(60) ஜென்ம லக்கினம் ஏழு, இரண்டு, எட்டு இந்த பாவங்களில் சூரியனிருந்து செவ்வாய் தவிர்த்த மற்றவர்களால் பார்க்கப் பட்டால் ஜாதகன் கொதிக்கும் (நெய்யினாலும்) நெய்யைத் தொடுவதாலும், நெருப்பாலும் பய முடையவன், அல்லது அம்மையாலாவது பயமுடையவன் ஆவான், சகலபயமும் நேரிடலாம்.

(61) ஜென்மலக்கினத்திற்கு இரண்டாம் பாவாதியும் சனியும் லக்கினாதிபதியும் கூடி இருந்தால் ஜாதகன் இரும்பு பாத்திரங்களையடைவான்.

(62) ஜென்ம லக்கினம் எதுவானாலும் ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய துர்ஸ்தானங்களில் சனி இருந்து பாபர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு சர்ப்பம் காரணமாக மரண முண்டாகும்.

(63) ஜென்ம லக்கினத்திற்கு செவ்வாய் துர்ஸ்தானங்களிலிருந்து பாபர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் கெட்ட சாரமற்ற உணவை உண்பான்.

(64) ஜென்ம லக்கினாதிபதி இரண்டாம் பாவத்திலிருந்தால் தனம், புத்தி இவற்றை யடைவன்.

(65) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவத்தில் சுபர் துர்ப் பெலமாயிருந்தாலும், யுத்தகெதி யிலிருந்தாலும் குருவும் மேற் சொல்லிய இரண்டாம்பாவாதிபதியும், துர்ப்பலனாகியிருந்தால் வாயுவியாதி பீடையும், துர்ப்பெலத்தையும் ஜாதகன் அடைவான்.

(66) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவத்தில் பாபர்களி ருந்து பாபர்களால் பார்க்கப்பட்டாலும் வெகு பாவர்களுடன் கூடியிருந்தாலும் சனியுடன் புதன் கூடி இரண்டாம் பாவத்திலி ருந்தாலும் ஜாதகன் தந்தரோகமடைவன், இவர்கள் நவாம்சத்தில் இரண்டாம் அம்சத்தில் இருந்தால் தந்த பங்கமுண்டாகும்.

(67) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் சூரிய னிருந்தால் ஜாதகன் மனைவி ஆராய்ச்சியாலும் தியானத்தாலும் மரணத்தை யடைவாள்.

(68) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவத்தில் சந்திர னிருந்தால் கிணற்றில் விழுவதால் மனைவிக்கு மரணமுண்டாகும்.

(69) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவத்தில் செவ்வா யிருந்தால் ஜாதகருக்கு ஆயுதத்தாலும் நெருப்பால் சுடப்பட்டும் அதாவது கொளுத்தப்பட்டும், தகிக்கப்பட்டும், மரணமுண்டா கும்.

(70) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகன் தூக்கிட்டுக் கொண்டு தொங்கிச் சாவான்; சுபர் பார்த்தால் அற்பதோஷம் மட்டும் உண்டாகும் தூக்கிலிடப் படமாட்டான்.

(71) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் பாப ரிருந்தாலும், இரண்டாம் பாவத்தைப் பாபர் பார்த்தாலும் ஜாத கனுக்கு திரவிய நாசமேற்படும்.

(72) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் சுபரின் பார்வையிருந்தாலும், சுபரின் இருப்பு நேர்ந்தாலும் ஜாதகனுக்கு தனலாப முண்டாகும்.

(73) ஜென்ம லக்கினத்திற்கிரண்டாம் பாவத்தில் சூரியனும் செவ்வாயும் இருந்தால் ஜாதகன் ஒழுங்கற்றவன், தனமற்றவன்.

(74) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் தூம னிருந்தால் ஜாதகனுக்கு கண் நாசமாவது கண்டமாலையாவது உண்டாகும்.

(75) ஜென்மலக்கினத்திற் கிரண்டா மிடம் சூரியன் சந்திரன் சனி இவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு குல்மரோகத் தால் பீடையுண்டாம்; வேறு சிலர் சனியாலும், சூரியனாலும் சகல ரோகங்களும் உண்டாகுமென்று எண்ணுகின்றனர்.

(76) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவத்திலிருக்கும் கேது, ராகு இவர்கள் மூலம் குஷ்டநோயும், தூமாதிகளால் நேத்திர ரோகமும் உடையவனாகி ஜாதகன் தனமில்லாதவனு மாவான்.

(77) புதனும், குருவும் சேர்ந்து இரண்டைப் பார்த்தால் ஜாத கன் ரோகியாவன், சனியும் கூடியிருந்தால் யாகத்தின் பொருட்டு பசு வதை செய்வான்.

(78) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் சூரிய னிருந்து'ஷி சூரியனை மாந்தி என்கிற கிரகம் பார்த்தால் ஜாத கன் தன ஹீனனாவன்.

(79) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவம் உச்சக் கிர கங்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தனமடைவான்.

(80) ஜென்ம லக்கினத்திற் கிரண்டாம் பாவத்தில் புதனி ருந்து க்ஷீண சந்திரனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அன்னையின் தனத்தையடைவான்.

(81) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாமிடத்தில் சுக்கிரன் இருந்து சந்திரனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தனிகனாவன்.

(82) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாமிடத்தில் சுபரிருந்து, சுபரும் பார்த்தால் ஜாதகன் எப்போதும் தனத்தை யடைந்த படியிருப்பான்.

(83) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தைப் பாபர் கள் பார்த்தாலும் பாபர்கள் இரண்டா மிடத்திலிருந்தாலும் ஜாதகன் தனமில்லாத புருஷனாவன்.

---

# 3-வது அத்தியாயம்.

## மூன்றும் பாவம்.

—:(*):—

(1) தீரம், சூரத்துவம், குரூர புத்தி, வெளிவாசம், லோபம், கெட்டத்தன்மை, பலம், குலச்சிரேஷ்டம் முதலியவைகளைச் சூரியன் முதலான கிரகங்களாலும் மூன்ருவது பாவத்திலிருக்கும் கிரகங்களாலும் அறியவும்.

(2) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தைப் பாபர் அடைந்திருந்தால் ஜாதகன் தனம், புத்தி இவைகளை அடைவான். சகோதர நாசமு மடைவன்.

(3) ஜென்ம லக்கினத்திற்கு மூன்ருவது பாவத்தில் சூரியனிருந்தால் ஜாதகன் தீரமுடையவன்.

(4) ஜென்ம லக்கினத்திற்கு மூன்ருவது பாவத்தில் சந்திரனிருந்தால் ஜாதகன் சூரத்தன்மை உடையவன்.

(5) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றுமிடத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் அதிக குரூரமுடையவன்.

(6) ஜென்ம லக்கினத்திற்கு மூன்ருவது பாவத்தில் புதனிருந்தால் ஜாதகன் வெளிதேச வாச முடையவன்.

(7) ஜென்ம லக்கினத்திற்கு மூன்ருவது பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் கிருபணனுவன்.

(8) ஜென்ம லக்கினத்திற்கு மூன்ருவது பாவத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் கெட்ட செய்கையுடையவன்.

(9) ஜென்ம லக்கினத்திற்கு மூன்ருவது பாவத்தில் சனியிருந்தால் ஜாதகன் குலத்தில் முக்கியமானவனுவன்.

(10) ஜென்ம லக்கினத்திற்கு மூன்று, ஆறு, பதினொன்று இந்த பாவங்களில் அனேக கிரகங்களிருந்தாலும், பார்த்தாலும், சூரியன் மூன்றும் பாவத்தில் பலாட்டியனுயிருந்தாலும் ஜாதகன் அரசனுவன், தைரிய முடையவன், சற்குணமுடையவன்.

(11) ஜென்ம லக்கினத்திற்கு சந்திரன் மூன்றும் பாவத்தில் பலிஷ்டனுயிருந்தால் ஜாதகன் சகோதர ஜனங்களாலடையப்படு

பவன், வெகு சகோதரிகளுண்டாவார்கள், தனமுடையவன், பற்பல குணமுடையவன், மேற்படி சந்திரனே பாபராசியில் இருந்தால் சகோதரிகள் நாசமாய் விடுவார்கள். மேலும் மேற்படி சந்திரனே இரட்டை ராசியில் (தனும்சத்தில் இருந்தால்) நராம்சத்தில் இருந்தால் ஜாதகனுக்குப்பின் புருஷ சகோதர முண்டாகும்.

(12) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் சந்திரன் கன்னியா ராசியில் அம்சத்தில் க்ஷீண சந்திரனுகி யிருந்தால் சகோதர நாசமுண்டாகும்.

(13) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் செவ்வாய் இரட்டை ராசியில் இருந்தால் (மூன்று) சகோதரிகளுண்டாவார்கள்.

(14) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் மேற்படி செவ்வாயே ஒற்றைப்பட்ட ராசியில் இருந்தால் புருஷ சகோதரம் நாச மடையும், ஒரு சமயம் சகோதரம் அப்படித் தப்பி ஜீவித்திருந்தாலும் சில நாள் தான் ஜீவித்திருக்கும்.

(15) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றும் பாவத்திலுள்ள புதன் மித்திரக் கிரகத்தால் பார்க்கப்பட்டால் ஜாதகன் நன்மையுடைய சகோதரனுடையவன், மேற்படி புதன் நீச்ச அஸ்தமனங்களிலிருந்தால் ஜாதகனுடைய உடன் பிறப்பு உற்பத்தியே நாசமடையும், உண்டானும், பிறந்தாலும் நாசமடையும். மேற்படி புதன் சுயக்ஷேத்திரத்திலிருந்தாலும், கன்னியா நவாம்சத்திலிருந்தாலும் ஜாதகனுடைய சகோதரன் ஸ்ரீமானுவன்.

(16) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தைக் குரு அடைந்திருந்தால் ஜாதகன் ஸ்திரீகளாலும் தன் சகோதரர்களாலும் ஜயிக்கப்படுபவன், மேற்படி குருவுடன் கூடி,

(17) ஜென்ம லக்கினத்திற்கு சுக்கிரன் மூன்றும் பாவத்திலிருந்தால் ஜாதகனுடைய சகோதரிகள் ரம்மியமாயிருப்பார்கள்.

(18) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றும் பாவம் சர ராசியாகி அந்த மூன்றும் பாவத்தில் தனிச் சுக்கிரன் மட்டுமிருந்தால் ஜாதகன் எப்போதும் துக்கமடைவான், சரராசியல்லாத மற்ற ராசிகள் மூன்றும் பாவமாகி சுக்கிரன் இருந்தால் எப்போதும் சுபமடைவன், ஜாதகன் பின் சகோதரனு முடையவனுவான்.

(19) ஜென்ம லக்கினத்திற்கு மூன்ருமிடத்தில் சனியிருந்து மேற்படி சனி நின்ற ராசி நீச்ச சத்துரு ஸ்தானங்களாகி அந்த பாவங்கள் மூன்ரும் பாவமுமானுல் ஜாதகன் பின் சகோதரனில்லாதவனுவன், பின் சகோதர நாசமு மடைவன்.

(20) குருவால் சுக்கிரன் பார்க்கப்பட்டால் ஜாதகன் சகோதரனுடையவன், அவர்களால் இவன் காப்பாற்றப்படுபவன்.

(21) ஜென்ம லக்கினத்திற்கு மூன்ரும் பாவத்தில் சனியிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால் ஜாதகன் சகோதரன் நாசமுடையவனுவான்.

(22) ஜென்ம லக்கினத்திற்கு மூன்ரும் பாவத்தில் ராகு இருந்தால் ஆயுளும், ஜபமும் அடைவான், சகோதரனுக்கு துக்கத்தைத் தருவன்.

(23) ஜென்ம லக்கினத்திற்கு மூன்ரும் பாவத்தில் ஒன்பதாம் பாவாதியாவது சுபராவது சுபருடன் கூடி யிருந்தாலும், மூன்ரும் பாவம் பார்க்கப்பட்டாலும் தன் உச்ச, மித்திர, சொட்க்ஷேத்திரங்களி லிருந்தாலும் அந்த கிரகங்கள் ஜாதகனுக்கு சுகத்தைக் கொடுக்கும்.

(24) ஜென்ம லக்கினத்திற்கு மூன்ரும் பாவத்தில் பாபர்கள் கூடியிருந்தால் ஜாதகன் பாபாத்துமா, பாபம் செய்பவன், அவர்களுள் புதன் நற்குணமுடையவன், எல்லாக் கிரகங்களிலும் நற்குணமுடையவன், அந்தந்த நவாம்சாதி பதிகளிலுமிப்படியே, ஜென்ம லக்கினத்திற்கு மூன்ரும் பாவத்தில் உள்ள சனி நவாம்சத்திலாவது சகோதரர்களே சொல்லவும், இருக்கிற, பார்க்கிற கிரகங்களின் எண்ணிக்கையும் அவர்களின் ஆயுளேயும் அறியவும், சுபர் பார்த்தால் சகோதர எண்ணே ரட்டித்தும் கொள்ளவும்.

(25) ஜென்ம லக்கினத்திற்கு மூன்ரும் பாவத்தில் குரு, சுக்கிரன், சந்திரன், புதனிவர்கள் இருந்தால் ஜாதகன் எப்போதும் போகமும், சம்பத்தும் வெகு ஆயுளும் கிரமமாக உண்டாகி ஜீவிப்பான்.

(26) ஜென்ம லக்கினத்திற்கு மூன்ரும் பாவத்தில் சூரியன், செவ்வாய், கேது, சனி, ராகு, யிவர்கள் இருந்தால் ஜாதகன் தீர்க்காயுளும், போகமும், சம்பத்தும், புத்திரனும், நித்திய யோகமுமடைவான்.

(27) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றும் பாவாதிபதியும் செவ்வாயும் கூடி எட்டாமிடத்தில் இருந்தால் ஜாதகனுடைய சகோதரர்கள் மரித்து விடுவார்கள்.

(28) பாபர்களும் மூன்றும் பாவாதியும் பாப ராசியிலிருந்தால் சகோதர உற்பத்தியே நாசம் அடையும்.

(29) ஜென்ம லக்கினத்திற்கு மூன்ருவது பாவாதிபதியும், செவ்வாயும் ஸ்திரீ ராசியில் இருந்தால் ஜாதகனுக்கு ஸ்திரீ சகோதரிகளும், கிரகங்கள் புருஷ ராசிகளில் இருந்தால் ஜாதகனுக்கு புருஷ சகோதரரும் உண்டாகும்.

(30) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றும் பாவாதிபதியும் குருவும் லக்கினத்தில் இருந்தால் ஜாதகன் சகோதர லாபமுடையவன்.

(31) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் புதன் மூன்றும் பாவாதியுடன் கூடியிருந்தால் தொண்டையில் ரோகமுடையவனுவன்.

(32) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் பாபர்கள் நீச்சத்தில் அல்லது தன் உச்சத்திலிருந்து ராகுவும் இவர்களுடன் கூடினுல் ஜாதகன் விஷங்கலந்த பக்ஷணம் முதலியவைகளை யுண்பான்.

(33) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் சுக்கிரன் பலமுள்ளச் சந்திரனிவர்கள் கூடியிருந்தால் ஜாதகன் நல்ல சுகமான போசனுதிகளுடையவன்.

(34) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றுமிடத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் குஷ்ட நோயுடையவன்.

(35) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் சனியிருந்தால் ஜாதகனுக்குச் சத்துரு நாசமுண்டாகும்.

(36) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் சுக்கிரனிருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தன் சகோதரர்களைக் காப்பாற்றுவான்.

(37) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் புதன் சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகனுடைய சினேகிதர்கள் நாசமடைவார்கள்.

# 4-வது அத்தியாயம்.

## நான்காம் பாவம்.

——:(*):——

(1) சுகம், ஞானம், பண்டிதத்துவம், பிரபுத்துவம், பீடை, சம்பத்து, பந்து இவைகளை நான்காம் பாவத்திலுள்ள சூரியாதி கிரகங்களால் அறியவேணும்.

(2) சத்துரு க்ஷேத்திரத்தை யடைந்த பாபர்களால் பந்துக்களிருந்தாலும் ஜாதகன் தன் பந்துக்களால் விட்டு விடப்படுவான், மகா குரூரத்தையும் மகா துக்கத்தையும் வெகுகாலம்வரை அவர்களால் ஜாதகன் அடைவான்.

(3) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் குரூர கிரகங்களிருந்தாலும் அயிட்டம் 2-ல் சொல்லிய பலனே யுண்டாகும்.

(4) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம்பாவம் பாவக்ஷேத்திரமாகி அப்படிப்பட்ட நான்காம்பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் இருதய நோயடைவன். ஸ்திரீ நாசமும், பந்துக்கள் கலஹமும் உடையவன், பந்துக்களான ஜனங்களதிகமிருந்தாலும் மூடத்துவ முள்ளவர்களை யுடையவன், மேலும் சௌரியம், உதாரம் முதலியன உடையவன், விரோதமும், பந்துத் துவேஷமும் உடையவன், மேற்படி செவ்வாய் சுபருடைய க்ஷேத்திரத்திலிருந்தால் வெளிதேசம் போதலும் நேரிடும்.

(5) ஜென்ம லக்கினத்திற்கு நான்காவது பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் காட்டிலிருந்தாலும் அழகிய ஸ்திரீபோக முடையவன், மித்திர சம்பன்னன், யானை குதிரைகளுடன் விளையாடுபவன், மிஷ்டான்ன போஜனமுடையவன், விநயமுடையவன், அனேக வாகனமுடையவன், ஸ்திரீலோலன்.

(6) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் சம்பூர்ண சந்திரனிருந்தாலும், சுக்கிரன் இருந்தாலும் இவர்கள் தன் உச்ச, அதிமித்திர ராசிகளிருந்தாலும் ஜாதகன் வாகனம், க்ஷேத்திரம் முதலியவற்றை யுடையவனுவன்.

(7) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் ஒருவருகவே இவர்களில் மேற்சொன்னவர்களில் ஒருவர் எவரிருந்தாலும், தன் சத்துரு நீச ராசிகளிலிருந்தாலும்,

(8) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் சூரிய சந்திரர் கூடியிருந்தாலும் ஜாதகன் சுகம், பந்து முதலான நாச முடையவன்.

(9) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் செவ்வா யிருந்தால் ஜாதகனுக்கு க்ஷுத்ர அற்பமான துர்பலமுள்ள தேவதை உபாசனையும், அதனால் ஸ்திரீ விநாசமும் உண்டாகும், தேகமும் துர்ப்பெலமடைவான்.

(10) ஜென்ம லக்கினத்திற்கு நான்காமிடத்தில் சுபர்களும் சூரியனுமிருந்தால் ஜாதகன் நல்ல புத்தியையும், ஸ்தூல முகமும், ஸ்தூல மூக்கும். உடையவன், அரசனுக்குச் சமமானவன்.

(11) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் குரு சூரியன் அவ்விருவர்களுமிருந்தால் ஜாதகன் சுருதி நீதி யறிவான்.

(12) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் சூரியன் சுக்கிரனிவர்களிருந்தால் ஜாதகன் தாஸீய துக்கமடைவான்.

(13) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் சனியும் சூரியனும் இருந்தால் ஜாதகன் அதிக கார்ப்பண்ணிய முடையவன்.

(14) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் செவ்வாயும் சந்திரனுமிருந்தால் ஜாதகன் தாய்க்குப் பிரியமில்லாதவன், தாய்க்கு நன்மையும் செய்யாதவன்.

(15) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் புதனும் சந்திரனும் இருந்தால் புத்திரன், மித்திரன், ரத்தினம், சொர்ணம், சுகமிவற்றுடன் கூடியவன்.

(16) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் குருவும் சந்திரனும் இருந்தால் வெகு சாஸ்திர மறிவான். அதிக குண வானும் ராஜபூஜிதனுமாவான்.

(17) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் சுக்கிரனும் சந்திரனுமிருந்தால் நிலையான அதிஷ்டமும், சதிபதிபற்றும், மங்களமும், சௌந்தரியமும், நல்ல கோரிக்கையு முடையவன், அனேக (ஸ்திரீ) தனம், வாகனம், முதலியவைகளை யுடையவனவன்.

(18) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் சனியும் சந்திரனும் இருந்தால் மணி, காந்தக்கல், நகை, ரத்னம் முதலான வெகு வியாபாரமும், அதனால் ஜீவனமும், உடையவன், தூற்றப் பட்டவனும், வஞ்சகனும், கபடனும், சடனும் ஆவான். பிணத் திற்குச் சமமானவன், ஆசை காட்டுபவன், மூர்க்கன், மோசக் காரன், மூடன், சமயம்போல் நடுநிலமை யுடையவன், ஏமாற்று பவன்.

(19) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் செவ் வாயும் புதனுமிருந்தால் ஜாதகன் எப்போதும் ஒரு சீராயிருப் பவன், எழுத்து எழுதல், தூதுசெல்லுதல் முதலியன அடைவன்.

(20) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் குருவும் செவ்வாயும் இருந்தால் ஜாதகன் க்ஷேத்ரம், வித்தை, கீர்த்தி, தனம் முதலியன உடையவனுவான்.

(21) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் சுக்கிர னும் செவ்வாயும் இருந்தால் துக்கமும், தாபமும் உண்டாகும்.

(22) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் சனியும் செவ்வாயுமிருந்தால் ரோகமடைவன்.

(23) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் குருவும் புதனும் இருந்தால் ஜாதகன் பாட்டு, நாட்டியம், நல்ல அழகிய ஸ்திரீ சுகம், நல்ல நண்பர், உறவு, தனம் முதலியன உடையவனு வன்.

(24) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் சுக்கிர னும் புதனுமிருந்தால் ஜாதகன் நித்ய கல்யாணமும், புத்திரன், பந்து முதலியனவும் உடையவன், பிரபு ஆவான்.

(25) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் சனியும் புதனுமிருந்தால் நீசவர்ணத்தாலும், நீதியாலும், மாயோபாய கிருத் தியங்களுடையவன்.

(26) ஜென்ம லக்கினத்திற்கு நான்காமிடத்தில் சுக்கிரனும் குருவும் இருந்தால் நல்ல வித்தையையும், ஸ்திரீயால் தனமும், குணமும் அடைவான், பிரபு ஆவன்.

(27) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் சனியும் குருவும் இருந்தால் ஜாதகன் பஞ்சு மூலம் தனமடைவான், சிலர்

எள்ளு, மூலம் அடைவானென்று என்னுகின்றனர், அரசன் மந்திரி யிவர்களால் அதிக விரய முடையவன்.

(28) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் சனியும் சுக்கிரனும் இருந்து குருவுடனும் கூடியிருந்தால் எழுத்து எழுது வதால் ஜீவனமும் உடையவன், மேலும் ஸ்திரீ, உறவு இஷ்ட சித்தி, அனேகதனம், அரசனுடைய அன்பு, ராஜனுக்கிஷ்டமான ஸ்திரீயின் இஷ்டப்ராப்தி, அனேக தன பூஷணாதிகள், சம்பத்து ஆகிய சகலமும் அடைவன்.

(29) ஜென்ம லக்கினத்திற்கு நான்காவது பாவத்தில் சுக்கிர னிருந்தால் ஜாதகன் சூரனாவன்.

(30) ஜென்ம லக்கினத்திற்கு நான்காவது பாவத்தில் சந்தி ரனின் பிள்ளையாகிய புதனிருந்தால் ஜாதகன் சுகமுடையவன்.

(31) ஜென்ம லக்கினத்திற்கு நான்காவது பாவத்தில் சந்திர னிருந்தால் ஜாதகன் தரித்திரமுடையவனாவன்.

(32) ஜென்ம லக்கினத்திற்கு நான்காவது பாவத்தில் குரு இருந்தால் சுபமுடையவனாவன்.

(33) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் சூரிய னிருந்தால் ஜாதகன் பயமுடையவனாவன்.

(34) ஜென்ம லக்கினத்திற்கு நான்காவது பாவத்தில் சனி யிருந்தால் ஜாதகன் சோகமுடையவனாவான்.

(35) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் கேது விருந்தால் ஜாதகன் ரோகமுடையவனாவன்.

(36) ஜென்ம லக்கினத்திற்கு நான்காவது பாவத்தில் செவ் வாயிருந்தாலும் ஜாதகன் ரோகத்தையே யுடைவானாவான்.

(37) ஜென்ம லக்கினத்திற்கு நான்காவது பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகன் மரணத்தை யடைவான்.

(38) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதியும் லக்கின பாவாதிபதியும் கூடியிருந்தால் ஜாதகனுக்கு வீடு உண் டாகும்.

(39) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி நாசஸ் தானமான எட்டாம் பாவத்தை அடைந்திருந்தால், ஜாதகன் வீடு உடையவனாயினும் அதை யடையான், அல்லது நிதான மடைவன்.

(40) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதியும் இரண்டாம் பாவாதிபதியும், பன்னிரண்டாம் பாவாதியும் இவர்கள் லக்கினத்திற்கு எட்டாம் பாவத்தை யடைந்திருந்தாலும், இவர்களே பாவர்களைக்கூடி யிருந்தாலும், எவ்வளவு பாபர்களுடன் கூடியிருக்கிறார்களோ அவ்வளவு அசுபத்தை ஜாதகனுக்குத் தருவார்கள்.

(41) ஜென்ம லக்கினத்திற்கு கேந்திர, திரிகோணங்களில் எவ்வளவு சுபர்களிருக்கிறார்களோ அவ்வளவு வீடுகளை ஜாதகன் அடைவன், அவ்வளவும் சுபமுண்டாகும், இவ்விதமாக நான்கு பத்து இந்த பாவங்களாலும், செவ்வாயாலும், பூமி க்ஷேத்திரம் முதலியவற்றை ஊகிக்கவும்.

(42) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவம் சந்திரன் குரு இவர்களால் ஜாதகனுக்கு சுகம், தாய் இவையும், சுக்கிரனால் வாசனை வஸ்திரம், வீடு, பூஷணம் இவையும், அறியத்தக்கது.

(43) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் பாபரிருந்தாலும் பாபர்கள் பார்த்தாலும் ஜாதகனுக்கு சுகம், தனம், வீடு இவைகள் நாசமடையும்.

(44) ஜென்ம லக்கினத்திற்கு நான்காவது பாவத்தில் நீச்சமடைந்த குரு செவ்வாய் சூரியன் இவர்கள் இருந்தால் ஜாதகன் வீடில்லாதவன் ஆவான்.

(45) ஜென்ம லக்கினத்திற்கு நான்காவது பாவத்தில் பத்தாவது பாவாதிபதி நீச்சமடைந்திருந்தால் ஜாதகன் கிணற்றில் விழுவான்.

(46) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் பாபரிருந்தால் ஜாதகன் பாபத்தையடைவன்.

(47) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் சனியிருந்தால் ஜாதகனுக்கு சுகம் குறையும்.

(48) ஜென்ம லக்கினத்திற்கு சந்திரனாவது சுக்கிரனாவது கேந்திரத்திலிருந்து பாபர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குத் தன விரய முண்டாகும்.

(49) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் குரூரக்கிரகங்களிருந்தால் ஜாதகன் (பெற்ற) தாயைப்புணர்வன். அல்லது குரு பத்தினியைப் புணர்வான்.

(50) ஜென்ம லக்கினத்திற் நான்காம் பாவத்தில் சனியும் ஆறும் பாவாதிபதியுமிருந்து சந்திரனுமிருந்தால் ஜாதகன் தாய் வேறொருவனைப் புணர்வாள்.

(51) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி சந்திரனும் ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் தாய் விபசாரம் செய்வாள், இவ்விதமாக சந்திரன் ராகு கேதுவுடன் கூடியிருந்தால் ஜாதகன் தாய் நீச்சனுடன் சேர்வாள்.

(52) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதியும் சனியும் சந்திரனும் கூடி யிருந்தால் ஜாதகன் தாய் சூத்திரனுடன் புணர்வாள், விபசாரம் செய்வாள்.

(53) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி சந்திரன் இவர்கள் ராகு கேது அல்லது மாந்தி இவர்களுடன் கூடியிருக்கும்போது :— இவர்களுடன் புதன் கூடி யிருந்தால் விபசாரத்தில் ஜாதகன் தாய் வைசியனைப்புணர்வாள்.

(54) இவர்களுடன் சூரியன் கூடியிருந்தால் ஜாதகன் தாய் விபசாரத்தில் க்ஷத்திரியனுடன் விபசாரம் செய்வாள்.

(55) இவர்களுடன் குரு கூடியிருந்தால் ஜாதகனுடைய தாய் பிராம்மணனுடன் விபசாரம் செய்வாள்.

### வாகன விஷயம்.

(56) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதியும் சந்திரனும் லக்கின பாவத்தில் இருந்தால் ஜாதகன் குதிரை வாகன மடைவான்.

(57) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி சுக்கிரனுடன் கூடி யிருந்தால் ஜாதகன் பல்லக்கு வாகன மடைவான் என்று ஜோதிடமறிந்த முன்னோர்கள் கூறுகிறார்கள்.

(58) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி குருவுடன் கூடியிருந்தால் ஜாதகன் பற்பல வாகனமடைவன், மூன்று வாகனமடைவன்.

(59) ஜென்ம லக்கினத்தில் பத்தாம் பாவாதி யிருந்து நான்கு, ஒன்பது இந்த பாவாதிபதிகள் பத்தாம் பாவத்திலுமிருந்தாலும், லக்கின பாவத்தைப் பார்த்தாலும் ஜாதகன் சிம்மாசனமடைவன்.

(60) ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவத்தில் சுக்கிரனுடன் கூடிய குரு லக்கின பாவாதிபதி யிவர்கள் கூடியிருந்தாலும், ஒன்பதாம் பாவாதிபதியுடன் கூடி நான்காம் பாவத்தில் இருந்தாலும், கேந்திர திரிகோணங்களி லிருந்தாலும் ஜாதகன் அனேக வாகன தேசாதிகளுடையவனுவன்.

(61) ஜென்ம லக்கினத்திற்கு நான்கு ஒன்பது இந்த பாவாதிபதிகள் பதினோராம் பாவத்திலிருந்தாலும், பதினோராம் பாவத்தைப் பார்த்தாலும் ஜாதகன் வாகன பலனுடையவன், சுகமுடையவன் வாகனங்களும் சர்வ பாக்கியங்களுமடைந்து அரசனுக்கும் சகலருக்கும் பிரீதியைச் செய்வன்.

(62) ஜென்மலக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி எட்டாம் பாவத்தை யடைந்திருந்து ஒன்பதாம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் கழுதை வாகன மடைவான், கெட்ட வாகமும் அடைவான்.

(63) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி ஒன்பதாம் பாவாதியுடனுவது சுபருடனுவது கூடி யிருந்தால் ஜாதகன் வெகு சேனைக்கு நாயகனுவன், வாகனுதிபதியாவன்.

(64) சந்திரன் பலிஷ்டனுயிருந்தால் ஜாதகன் வஸ்திரலாபமடைவன். மேற்படி சந்திரன் கேது ராகு இவர்களுடன் கூடியிருந்தால் ஜாதகன் ஜீர்ண (நசித்த) வஸ்திரமடைவான்.

(65) சந்திரனும் குருவும் கூடி யிருந்தால் ஜாதகன் பட்டு வஸ்திரமடைவன்.

(66) சந்திரன் சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் ஆச்சரியமும் மனோகரமுமான வஸ்திரமடைவான்.

(67) ஜாதகனுக்கு குருவால் ரத்ன வஸ்திரமும், சனியால் கறுப்பு வஸ்திரமும், மாந்தி சந்திரன் இவர்களால் மற்றவைகளும் உண்டாகும்.

(68) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தில் அல்லது பதினோராம் பாவத்தில் இருந்து லக்கின பாவாதிபதி லக்கின பாவத்திலேயே யிருந்தாலும்,

(69) ஜென்ம லக்கினத்திற்கு நான்கு, பதினொன்று, ஒன்பது இந்த பாவாதிபதிகளும் அவர்கள் நின்ற ராசி நாதர்களும் லக்கினத்திலேயே கூடியிருந்தாலும் ஜாதகன் வெகு வாகனமுடையவன் ஆவான்.

(70) ஜென்ம லக்கினத்திற்கு பத்துக்குடையவர் லக்கினத்திலும் லக்கினுதிபதி தசமத்திலும் இருந்து ஒரு சுபக்கிரகம் பத்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் வாகனுதிபதியாவன்.

(71) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி சுபருடன் பத்தாவது பாவத்தில் இருந்தால் ஒன்றல்லது (சில) குதிரைக் கதிபதியாவன், க்ஷேத்திராதிபதியாவன்.

(72) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலிருந்து நான்கு பதினொன்று இந்த பாவங்களில் செவ்வாயிருந்தாலும் செவ்வாயின் க்ஷேத்திரத்தில் இவர்களிருந்தாலும் ஜாதகன் ராஜ்ப லாபத்தை யடைவன்.

(73) ஜென்ம லக்கினத்தில் சுபரிருந்து ஒன்பதாம் பாவத்தில் ஒரு சுபரிருந்து உச்சக்கிரகம் ஒன்பதாம் பாவத்தில் இருந்து இரண்டாம் பாவாதிபதியும் குருவும் கேந்திரத்திலிருந்தால் ஜாதகன் இந்திரனுக்குச் சமமான அரசனுவன்.

(74) ஜென்ம லக்கினம் சிம்மம் ஆகி ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவம் சுபரால் பார்க்கப்பட்டு இரண்டாம் பாவாதிபதி சுபருடன் கூடியிருந்து உச்சக்கிரகம் துவிதிய ஸ்தானமான இரண்டாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் சிம்மாதன மேறும் அரசனுவன்.

(75) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் வஞ்சனையாலும் யாகம் செய்வதாலும், கொடையாலும் வெளி தேசத்தில் வசிப்பவன்.

(76) ஜென்ம லக்கினத்திற் கெட்டாம் பாவத்தில் நான்காம் பாவத்தின் அதிபதியிருந்தால் ஜாதகன் வீடு இல்லாதவனுவன் அல்லது,

(77) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி ஆறும் பாவத்திலிருந்தால் ஜாதகன் தாயாதிகளால் வீடு உடையவன் ஆவான்.

(78) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் அல்லது ஏழாம் பாவத்தில் உச்சக்கிரகம் இருந்து சந்திரன் குருவுடன் கூடியிருந்தால் அவனுடைய வீடு மாளிகையாகும்.

(79) மேற்சொன்ன வரிசைப்படி ஜாதகனுக்கு கிரகங்கள் கூடினால் சனி ராகுக்களால் வீடும், குஜன், கேது இவர்களால் செங்கல் வீடும், குருவால் மரவீடும், சூரியனால் வைக்கோல் அல்லது புல் வீடும் உண்டாகும்.

(80) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் (புதன்) சுபரிருந்து லக்கின பாவாதிபதி நல்ல பல முடையவனுயிருந்து நான்காம் பாவாதி நின்ற ராசி நாதனும் சம்பூர்ண பலமுடையவனுனல் ஜாதகன் விசித்திர பிராகாரங்களுள்ள (அடுக்கு) மாளிகைகளுண்டாகும் யோகமுடையவன்.

(81) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் சனியும் செவ்வாயும் கூடி யிருந்தால் ஜாதகனுக்கு கொளுத்தப்பட்ட வீடுண்டாகும்.

(82) ஜென்ம லக்கினத்திற்கு சந்திரன் ஓன்பதாம் பாவத்திலிருந்தால் ஜாதகனுக்கு திருடமில்லாத மரக்கட்டைகளாலுள்ள வீடுண்டாகும்.

(83) ஜென்ம லக்கினத்திற்கு ஓன்பதாம் பாவத்தில் சூரியனும் புதனும் கூடி யிருந்தால் ஜாதகனுக்கு ஓரே (தச்சனல் கட்டப்பட்ட) சிற்பியால் கட்டப்பட்ட வீடுண்டாகும்.

(84) ரம்மியமும் சித்திரமுடையதும் சித்திரமானதும் புதிதும் சுக்கிரனலும், குருவால் திடமானதும் வாயினல் தோத்தரிக்க கூடியதும், உபதேசம் செய்யக்கூடிய இடமானதும் பூர்ணமானதும் ஜாதகனுக்கு அரசன் மந்திரி இவர்களுக்கு சமமானதுமான கிரக முண்டாகும்.

(85) ஜென்ம லக்கினத்திற்கு நான்கு இரண்டு பன்னிரண்டு ஆகிய பாவங்கள் சாமந்த (ராசிகளாகும்) கிரகாதிபதிகளாவர் இவர்களில்,

(86) உச்ச, மித்திர, சொக்ஷேத்திராதி பலங்கூடிய கிரகம் சுபக்கிரகமாகும், இவர்களால் அதிகதிருட கிரகமுண்டாகும். இவர்கள் சர்வைசுவரியங்களைக் கொடுக்கும் கிரகங்களாவார்கள், சம்பன்னருமாவார்கள், அங்குள்ள கிரகப் பிரபலத்தால் ஜாதகன் ஸ்திரீ நாயகனாகவும், நபும்ஸகக் கிரகத்தால் புத்திரனில்லாதவனாகவுமாவன்.

(87) மேற்சொன்ன கிரமப்படி ஏற்பட்ட சாமந்த கிரகாதிபர்கள் பாபர்களுடன் கூடினாலும், துஸ்தானங்களிலிருந்தாலும் துர்ப்பெலனாகி யிருந்தால் ஜாதகனுடைய வீட்டுக்கு நாசமுண்டாகும், அவ்வீட்டுக்குடையவனும் அற்பாயுளுடையவன்.

(88) சூரியன் செவ்வாய் ராகு கேதுக்களுடைய மத்தியில் ஒரு கிரகம் வக்கிர மடைந்துமிருந்தால் எருக்கு, முள்ளுள்ள மரம், மரப் புதர், புற்று, பிசாசு பாதை முதலியவற்றை அந்தந்த கிருகங்களில் காணலாம்.

(89) ஜென்ம லக்கினத்துக்கு சாமந்த ராசிகளாகிய ஷ பாவத்தில் சூரியன் அந்த பாவத்தில் இருந்தால் எருக்கஞ்செடிகள் மரமாகும் வீட்டை ஜாதகனடைவான்.

(90) பாபர்கள் மேற்படி பாவத்தைப் பார்த்தால் அந்த மனையும் சூனியமாய்விடும்.

(91) செவ்வாயிருந்தால் முள்ளு மரம் (வளரும்) (படரும்) அந்த ஸ்தானாதி சுப பலனுடையவனானல் நூதன விசித்திரமானவைகளை ஜாதகன் அந்தந்தக் கிரகத்திற்குச் சொல்லியபடி அடைவான்.

(92) ஜென்ம லக்கினத்துக்கு நான்காம் பாவாதிபதி பாபர் மத்தியிலிருந்தாலும், பாபருடன் கூடி யிருந்தாலும், பாபரால் பார்க்கப் பட்டாலும் துர்ப்பலனானாலும் ஜாதகன் தரித்திரமும், துர்ப்பலமுமடைவன்.

(93) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி இரண்டு பாபர்களுடன் கூடி சுபர் பார்வை யடையாமலிருந்தாலும், நான்காம் பாவாதிபதி நின்ற பாவாதிபதி துஸ்தானங்களிலிருந்தாலும் சாமந்தக் கிரகமாகும் வீடு அது எப்போதும் சூனியமாய் இருக்கும், சுபர் பலமுடையவராக நீச்சத்துடன் உச்சம் முதலான ஸ்தானங்களில் இருந்தாலும் நல்ல லக்ஷ்மீ கடாக்ஷமுண்டாகும், அந்தந்த இரண்டு பன்னிரண்டுகளை வைத்து எல்லா

விடங்களிலும் கல்வி முதலியன சாமந்தக் கிரகங்களால் பார்க்கவும்.

(94) ஜென்ம லக்கினத்திற்கு தனுசுக்கு மீனம் கிரகஸ்தானம் எந்த விஷயத்தில் பொருத்தமோ அந்த வீட்டின் பலனை அறிந்து சொல்லப்படுகிறது (சொல்லவும்), உபய ராசியானாலும் சயானமே, முன்னுள்ள ராசி (கிரகம்) அபிமுக ராசியான அதன் இரண்டாம் பாவத்தை அதன் சாமந்த ராசியென்று சொல்லப்படும், அந்த ராசி அதிபதியின் இருப்பு ராசியால் முன்போல் மேலெழுதியுள்ளபடி யோசித்து வீடு முதலான நான்காம் பாவ பலனை சொல்லவும்.

இங்கு வாஸ்து நிச்சயம் சொல்லுகிறார்.

(95) சிம்ம ராசி முதல் மகரம் வரை சூரிய ஷட்கம், கும்பம் முதலாக கடகம்வரை சந்திர ஷட்கம் ஆகும். மேற்படி சூரியஷட்க ராசியில் கிரகாதிபதிகள் இருந்தால் அந்த கிரகம் சூரிய வாஸ்துவாகும், சந்திர ஷட்கத்தில் கிரகாதிபதிகள் இருந்தால் சந்திர வாஸ்து ஆகும். கிரக ஸ்தானம் தனுசு மீனம் முதலான உபய ராசிகளானால் கிரகாதிபதி சூரியாதி ஷட்கங்களிலிருந்தால் சந்திர வாஸ்து ஆகும். சந்திர ஷட்கத்தில் சூரிய வாஸ்துவை தலைகீழாகச் சொல்லவும். இரண்டிடங்களிலும் கிரகங்களிருந்தால் அந்தந்த வஸ்துவேயாகும், எல்லா ஸ்தானங்களிலும் கிரகமிருந்தால் முன்போல் விபரீதம் (அதாவது தலை கீழாகமாற்றி) சொல்லவும். மேஷம் முதலான ஷட்கம் உத்தரவீதி, துலாதிஷட்கம் தக்ஷிணவீதி, வடக்கு துலா ஷட்கமும் ஆகும், சந்திரன், சனி செவ்வாய் ராகு இவர்கள் குள்ளம், கும்பம், மீன, மேஷ, ரிஷபம் குள்ளம், மற்ற விருஷபம் முதலான தனுசுவரையுள்ளவை தீர்க்கங்கள், கிரகாதிபதிகள் சந்திர சனி குஜ ராகுக்களுடன் கூடியிருந்தாலும் பார்க்கப்பட்டாலும், கிரகம் (சங்கோசமானது), அதாவது சிறியது, வாஸ்துவும் சுருக்கமே.

(96) ஜென்ம லக்கினத்திலிருந்து சாமந்த கிரகாதிபதியாக க்ஷீண சந்திரனாகி அவர் தன் ராசியிலிருந்து, மேற்படி பாவத்தைப் பார்த்தால் ஜாதகன் வீடு மிகச்சிறிய வீடாகும்.

(97) தீர்க்க, மிச்ர, கிரகங்களால் தாழ்ந்த வீடுண்டாகும், சூரியன் சுக்கிரர் மேற்சொல்லிப்படி ஆகிப் பார்த்தால் நடு நிலை

யிலுள்ள கிருகம் ஜாதகனுக்கு ஏற்படும், அல்லது அதிதீர்க்க கிருக முண்டாகும், ஹ்ருஸ்வமும் ஏற்படலாம்.

(98) ஜென்ம லக்கினத்திற்கு மேற்சொன்னபடி அதிபதிகள் குரு, சுக்கில சந்திர, புதன் ஆனால் ஜாதகன் மனை விசால மனையாகும், தீர்க்கம் சமம் இரண்டும் வாஸ்து விசால முடையது, மிசிரமானால் சமமாகும்.

(99) மேற்சொன்னபடி ரவி, கேது ஆனால், ஜாதகனுக்கு சிவபக்தியுண்டாம்.

(100) சந்திரனாகின் கௌரீ பக்தியுண்டாம்.

(101) சுக்கிரனால் லக்ஷ்மீ பக்தியுண்டாம்.

(102) செவ்வாயானால் சுப்பிரமணிய பக்தியுண்டாம்.

(103) புதன், சனி இவ்விருவராலும் விஷ்ணு பக்தி உண்டாம்.

(104) குருவானால் சாம்பசிவ பக்தி யுண்டாகும்.

(105) சுக்கிரனால் பார்க்கப்பட்டால் லக்ஷ்மீநாராயண பக்தி யுண்டாகும்.

(106) ராகுவால் தாமசமுடைய அக்கியானமும், துராச்சாரமும் உண்டாகும்.

(107) கேதுவால் கணேசர் இடமும், சுப்பிரமணியரிடமும் பக்தி யுண்டாகும்.

(108) சனி பாபராசியானால் க்ஷுத்திர தேவதா பக்தி யுண்டாகும்.

(109) ஜென்ம லக்கினத்திலிருந்து முன் சொன்னபடி ஜாதகனுக்கு கிரகாதிபதி சூரியனானால் சிவாலயம் அல்லது பைரவருடைய ஆலய சமீபத்தில் கிருகமேற்படும்.

(110) செவ்வாயால் சுப்பிரமணிய ஆலய சமீபத்தில் கிருக முண்டாகும்.

(111) புதன், சனியிவர்கள் கிரகாதிபதிகளானால் விஷ்ணு ஆலய சமீபத்தில் கிருகமேற்படும்.

(112) குருவானால் சிவாலய சமீபத்தில் வீடுண்டாகும்.

(113) சுக்கிரன் பார்த்தால் மகாவிஷ்ணு தேவாலயம் சமீபத்திலுண்டாகும்.

(114) ராகு ஆனுல் பத்திரகாளி முதலிய துர்க்காலய சமீபத்தில் கிருகமுண்டாகும்.

(115) கேது ஆனுல் கணேச, சுப்பிரமணிய தேவதாலயங்களின் சமீபமாகும், மேற்படி கிரகாதிபதியாகிய,

(116) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி பாபக்ஷேத்திரத்தில் சனியாகி யிருந்தால் க்ஷுத்திர தேவதாலய சமீபத்தில் ஏற்படும்.

(117) சந்திர, சுக்கிரர் மேற்படி கிரகாதிபதியைப் பார்த்தால் தேவாலய சமீபத்தில் ராசிகளில் முதலில் இருந்துவிட்டு, சமீபத்திலும், மத்தியிலும், தூரத்திலும், எல்லையிலும் உள்ளேயுமிருப்பைப் பார்த்துச் சொல்லவும்.

(118) ஜென்ம லக்கினம் விருச்சிக, மகர, மீன, கடக, துலா, கும்பங்களானுல் மேற்படி ஜலராசி ஸ்திரீ ராசியானுல் ஜலம் உண்டாகும்.

(119) மேற்படி ராசி சுஷ்க ராசியானுல் இரவி, குஜ, சனி, சுக்கிர, சந்திர, குரு, புதன் ஜலாத்துமா கிரகாதிபதியாவர்.

(120) கிரகாதிபதியாகியவரை பார்ப்பவர்கள் குரு, சுக்கிரன், சந்திரனிவர்களாகின் இவர்களும் அவ்விடத்தில் ஜலாம்சத்தில் இருந்தார்களானுல் ஜாதகனுக்குப் பிரசித்த புண்ணிய நதி ஸ்தலம் வீடாகி அது தடாக சமீபமாகும்.

(121) ஜென்ம லக்கினத்திற்கு கிரகாதிபர்களே சூரியன், செவ்வாய், சனி, ராகுக்கள் கிரகாதிபதியைப் பார்த்து அது சுஷ்க ராசியுமானுல் ஜாதகனுக்கு தேவாலயத்தினின்றும் வெகு தூரத்தில் வீடிருக்கும்.

(122) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி ஜலாதிபதியாகி ஜலக் கிரகத்துடன் ஜல ராசியில் அவர் இருந்தால் மேற்படி வீட்டில் கிணரிருக்கும், ஜலாதிபதியை பார்ப்பவர் குரு, சுக்கிர, சந்திரனுனுல் ஜாதகன் வீட்டில் மத்தியில் ஒன்றிரண்டு கிணறு நல்ல ஜலமுடையதாகும்.

(123) ஜென்ம லக்கினத்திற்கு புதன் மேற்படி கிரக அதிபதியாகி ராகு, கேது, சனி இவர்கள் கிரகாதிபதியை ஜல ராசியிலிருந்து பார்க்கப்பட்டாலும், கூடியிருந்தாலும் அவர்கள் புக்தி காலங்க

ளில் கிணறு முதலியன உண்டாகும், அந்த க்ஷேத்திரத்திலாவது உண்டாகும். அந்த புத்தியில் வரும் ஜலம் காரமும், கரிப்பும், அரிப்பும் உள்ள ஜலமாகும்.

(124) செவ்வாய் மேற்சொன்னபடியானால் சுஷ்க ராசியில் பாபரால் பார்க்கப்பட்டிருந்தால் அந்த புக்தி காலத்தில் ஜாதகனுக்கு நெருப்பு பயமுண்டாகும்.

(125) சனி, ராகு, கேதுக்கள் கிரகாதிபதியுடன் கூடினாலும், பார்த்தாலும் அந்த புக்தி காலத்தில் ஜாதகன் வீட்டில் புற்று உண்டாகும், மேற்படி வீட்டுக்குமேல் கழுகு, கோட்டான் முதலிய துஷ்ட பக்ஷிகள் முதலானவைகள் உண்டாகும், வசிக்கவும் வசிக்கும்.

(126) குளிகனுடன் கிரகாதிபதி முன்சொல்லியபடி கூடியிருந்தாலும், இரண்டு பாபருடன் கூடியிருந்தாலும், இவர்கள் மனுஷிய ராசிகளிலிருந்தால் தனிஷ்டா பஞ்சக தோஷத்தால் ஜாதகன் அந்த வீட்டை விட்டுவிட வேண்டியதாகும்.

(127) கிரகாதி ராகு கேதுக்களுடன் கூடியிருந்தாலும், ராகு கேதுக்களால் பார்க்கப்பட்டாலும், கிரகாதிபதியுடன் அந்த பாவத்தில் ராகு, கேதுக்கள் கூடி இருந்தாலும், குளிகன் கூடிய சனியால் பார்க்கப்பட்டாலும், அந்த புக்தி காலத்தில் வாயிற்படி வேறு, சுவர் வேறாகி, வீட்டை இடித்து மறுபடி கட்டவரும்.

(128) ஜென்ம லக்கினத்திற்கு முன் சொன்னபடி ஏற்பட்ட கிரகாதிபதி இரண்டு பாபருடன் கூடியிருந்து ராஜ்ய ஸ்தானாதிபதியுடன் கூடினாலும், பார்க்கப்பட்டாலும் ராஜ்யத்தை ஆளும் அரசன் வீடும் நாசமாகும்.

(129) மேற்சொல்லியபடி ஏற்பட்ட கிரகாதிபதி, கிராமாதிபதியுடன் கூடினாலும், பார்த்தாலும், கிரகாதிபதி ராகுவுடன் கூடினாலும், குளிகன் பாபருடன் கூடினாலும் கிராம ஜனம் முதலாக யஜமானன் வரை சகலரையும் பகிஷ்காரம் செய்து வைத்து வீட்டை இடியச்செய்யும்.

(130) ஜென்ம லக்கினத்திற்கு கிரகாதிபதியாக சூரியனாகி மேற்படி சூரியன் எட்டாம் பாவ திரிகோணம் இவ்விடங்களில் இருந்தால் ஜாதகனுடைய வீடு செல்லரித்து சிதிலமாகி இடிந்து விடும்.

(131) மேற்படி ஸ்தானத்தில் மேற்படி ஸ்தானாதிபதி ராகு முதலிய கிரகங்களுடன் கூடியிருந்தால் எப்போதும் மேற்படி வீட்டில் ஜாதகனுக்கு பாம்பு தென்பட்டபடியே யிருக்கும்.

(132) மேற்சொல்லியபடி சந்திரன் கிரகாதிபதி அவ்விடத்தில் மேற்சொல்லியபடி சந்திரனிருந்தால் ஜாதகன் வீட்டுக் கதவு முதலியவற்றில் புழு முதலான தோஷங்களுண்டாகும்.

(133) மேற்சொல்லியபடி செவ்வாயிருந்தால் மேற்படி வீட்டுக்கதவு பிறருடையதாகும்.

(134) மேற்சொல்லியபடி கிரகாதிபதி குருவானால், ஜாதகனுடைய வீட்டின் கதவு குமுழ்களுடைய திடமான கதவாகும்.

(135) மேற்படி கிரகாதிபதி சுக்கிரன் முதலான உச்சக் கிரகங்களுடன் கூடியிருந்தால் ஜாதகன் வீட்டுக்கதவு பார்வைக்கு விசித்திர திருடமான, சித்திர ரூபமான கதவு ஆகும்.

(136) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாவது பாவத்தில் சுபக் கிரகமிருந்தால் ஜாதகனுடைய வீட்டின் தென் பாகத்தில் கோயில் இருக்கும்.

(137) ஜென்ம லக்கினத்திற்கு பதினொன்று, பன்னிரண்டு ஆகிய பாவங்களில் சுபரிருந்தால் ஜாதகனுடைய வீட்டிற்கு இடது பக்கத்தில் கோயில் இருக்கும்.

(138) ஜென்ம லக்கினத்தில் சுபக்கிரகமிருந்தால் ஜாதகனுக்குக்கு விசித்திர கிரகம் உண்டாகும். அங்கு அசுபர் இருந்தால் வீடு ஏற்படும்போது ஜாதகனுக்கு இடிந்துபோன வீடு ஏற்படும்.

(139) ஜென்ம லக்கினத்தில் சுபக்கிரகத்துடன் சூரிய, குளிகனுவது கூடியிருந்தாலும், ஜன்ம லக்கினம் இவர்களால் சூரிய குளிகனால் பார்க்கப்பட் டிருந்தாலும் ஜாதகனுடைய வீட்டுக் கதவு நான்கு, அல்லது ஐந்து பலகைகள் துவார மிடப்பட்ட கதவு ஆகும்.

(140) மேலும் அங்கு நீச்ச கெட்ட கிரகங்கள் இருந்தாலும், வெகு பாவர்களிருந்தாலும் கதவில்லாமையும், தட்டிக்கதவும் வீட்டுக்கு உண்டாகும்.

(141) ஜென்ம காலத்தில் கேந்திரங்களாக மிதுனம் முதலான ராசிகள் சுபருடன் லக்கினத்திற்காவது, ஆரூடத்துக்காவது

நேரிட்டால் தனத்தையுடைய கிருகமாகும் கிரகம் ஜாதகனுக்கு நேரிடும்.

(142) பாபர்கள் வேறு இடத்திலும், சுபர்கள் உச்சத்திலும் இருந்தால் மேற்படி வீட்டில் ஜாதகன் நிதி யடைவன்.

(143) ஜென்ம லக்கினத்துக்கு ஒன்பது, இரண்டு, லக்கினம் இந்த பாவங்களில் மேற்படி கிரகங்களிருந்தாலும் ஜாதகனுக்கு அவ்வீட்டில் நிதி லாப முண்டாகும்.

(144) ஜென்ம லக்கினத்தைப் பார்த்து வீட்டு வாயிற்படியையும், சரீரத்தையும், வியாபார வீட்டையும் அறியவும். இந்த விதமாக அம்சராசி, அம்சங்கள், ராசிகள் இவைகள் எங்கிருக்கின்றன என்பதைப் பார்த்தும், சுபரா யிருந்தால் அங்கு சயனத்தையும், பாபராகில் சல்லியத்தையும், கடனையும் அந்தக் காலலக்கின நவாம்ச ராசீசர்களைக் கொண்டு அந்த திக்கில் தனத்தைச் சொல்லவும்.

(145) ஜென்ம லக்கினத்துக்கு நான்காம் பாவாதிபதி யிருக்கப்பட்ட ராசி பாகைகளால் * கேந்திர, ஆய, அரி, நீச்சஸ்தானங்களை யடைந்தவர்கள் மூலமாக விஷப்பூச்சிகள், புழு, தேள், முதலானவைகளையும், புற்று, பெருச்சாலி முதலியவற்றையும், பீடைகளையும் சொல்லவும்.

(146) நவக்கிரகங்களில் குரு, சுக்கிரர் துவிபாதமுடையவர்கள்; செவ்வாய் சூரியனிவர்கள் சதுஷ் பாத முடையவர்கள்; புதன் சனியிவர்கள் பக்ஷிகள்; சந்திரன், ராகு இவர்கள் பாம்பு முதலானவர்கள்.

(147) ஜென்ம காலத்தில் மேற்படி கிரகாதிபதிகள் நீச்ச சத்துரு ஸ்தானங்களிலும், மகர சிம்மங்களிலும் இருந்து இவர்கள் நான்காம் பாவத்தையும் பார்த்தால் ஆந்த கிருகம் பிறருடையதாகும்.

(148) ஜென்ம லக்கினத்துக்கு நான்காம் பாவம் கிராம்மிய ராசிகள் முதலியன சுய க்ஷேத்திரங்கள் ஆகின் இங்கு இருந்து இவர்கள் பார்த்தாலும், இருந்தாலும் அந்த வீடு தன் வசமே யிருந்து வரும்.

---

* கேந்திர ஆய அரி நீச்ச ஸ்தானங்களென்பது நமது பிருஹத் ஜாதகத் தமிழ் மொழி பெயர்ப்பில் காணவும், பிரஹத் ஜாதகம் இரண்டாவது பதிப்பு.

(149) நவக்கிரகங்களில் பிராம்மணுதிக் கிரகங்களும், சத்துரு மித்துக்கிரகங்களும், நான்காம் பாவத்தைப் பார்த்தால் அவர்களால் உண்டாகும் பலனை வித்துவான்கள் யோசித்துச் சொல்லவும்.

(150) நவக்கிரகங்களில் சுக்கிரன் சந்திரனிவர்கள் ஜல சஞ்சாரிகள்; செவ்வாய், சூரியன் இவர்களும் புதனும், குருவும் கிராய சஞ்சாரிகள், மற்றவர்கள் வன சஞ்சாரிகள்.

(151) ஜென்ம லக்கினத்துக்கு நான்காம் பாவாதிபதியான கிராமாதிபர் ஷஷ்டாதிபதியுடன் கூடி துர்ப்பெலனுயிருந்து ராகு கேது, குளிகனிவர்களுடன் கூடியிருந்தாலும், பார்க்கப்பட்டாலும் சர்ப்பம், மரம், சதா காலம் கடன் உபத்திரவம் முதலியன உடைய வீடு ஜாதகனுக்கு வீடு நேரிடும்போது நேரிடும், இவர்கள் குருவால் பார்க்கப்பட்டால் அதிலிருந்து சகல தோஷங்களும் விலகிவிடும்.

(152) ஜென்ம லக்கினத்துக்கு இரண்டு, நான்கு, பன்னிரண்டு இந்த பாவ நாதர்களும், இந்த பாவங்களும் எவ்வளவு பாபர்களுடன் கூடி யிருக்கிறுர்களோ ஜாதகனுக்கு அவ்வளவு வீடும், தேக சுகமும், சகலமும், சுபமுமாக உண்டாகும்.

(153) ஜென்ம லக்கினத்துக்கு நான்காம் பாவாதி எட்டாம் பாவத்தில் இருந்து பாபர் பார்வையும் அவருக்கிருந்தால் ஜாதகனுக்கு பிதுரார்ஜித கிரகமில்லாது போய்விடும், மேற்படி நான்காவது பாவம் சராசியானுல் சுய சம்பாத்திய வீடு ஜாதகனுக்குண்டாகி அதுவும் நாசம் ஆகி விடும்.

(154) ஜென்ம லக்கினத்துக்கு நான்காம் பாவத்தில் செவ்வாய் பாபருடன் கூடியிருந்தாலும், நான்காம் பாவாதிபதி இவ்வாறிருந்தாலும் எப்போதும் பிறர் வீட்டில் வாசம் நேரிடும், வெளியூரில் வசிப்பான், ருணம் ஏற்படல், க்ஷயம், பந்தனம், முதலிய கிரக பீதிகளால் (சஞ்சல மடைவான்), தளிர்ச்சியடைவன்.

(155) ஜென்ம லக்கினத்துக்கு ராகு, கேது, குளிகன் முதலானவர்கள் திரிகோணங்களிலிருந்தாலும் நான்காம் பாவத்திலிருந்தாலும் ஜாதகனுக்குப் பிசாசு பாதை, சர்ப்பபயம், பீதி இவைகளும் விபரீத கிரகவாசம், எப்போதும் கலஹம் முதலானவைகளுண்டாகும்.

(156) ஜென்ம காலத்தில் ராகு, கேதுக்கள் நான்காம் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் வளைந்த உயரமுள்ள சாய்வான பெரிய வீடுடையவனுவன்.

(157) ஜென்ம லக்கினத்துக்கு நான்காவது பாவம் சனியின் ராசியானுல் மேற்கு வீடும், சுபர் ராசியானுல் கிழக்கிலும் உண்டாகும், வாஸ்துக் கிரகமாக முன் சொல்லியுள்ளபடி நேரும் யோசிக்கவும்.

(158) ஜென்ம காலத்தில் இரட்டை ராசியில் இரண்டுக் கிரகங்களிருந்தால் ஜாதகனுக்கு உபப சம்வாதக் கிருக முண்டாகும், அதாவது இரண்டு பேர்கள் வாதாடும் கிரக முண்டாகும்.

(159) ஜென்ம காலத்தில் சுபர்கள் இருவர் நான்காம் பாவத்தில் இருந்தால் இரண்டு வழி யுள்ளதாய்விடும் கிரகம் உண்டாகும்.

(160) ஜென்ம லக்கினத்துக்கு நான்காவது பாவாதிபதியுடன், ஐந்தாம் பாவாதி கூடியிருந்து, ராகு, கேதுக்களுடன் துஸ்தானங்களான ஆறு எட்டுப் பன்னிரண்டாம் பாவங்களிருந்தால் மேல் சுவற்றை இடித்து மேல் மொட்டை மாடியின் சுவற்றை எழுப்பினுல் அதனுல் ஜாதகனுக்குப் புத்திர நாச மேற்படும்.

(161) ஜென்ம காலத்தில் சூரியன் நான்காம் பாவாதிபதியுடன் கூடி திரிகோணத்தில் இருந்தால் ஜாதகனுக் கேற்படுகிற அந்த கிருகம் சிதில மாகும், ஆங்கு கேது, சூரியன் கூடியிருந்தால் அங்கு ஓணனில் ஒருவித ஓணனும், கெவுளியும் விழும், அந்த வீடும் பிறருடையதாகும்.

(162) ஜென்ம லக்கினத்துக்கு நான்காம் பாவாதிபதி ராகு, சனி இவர்கள் செவ்வாயுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு நாயால் கடி யுண்டாகும்; சுபரிருந்தால் நன்மை யுண்டாம். சுக்கிரனுகில் ஸ்திரீ நிந்திப்பும் ஏற்படும்.

(163) ஜென்ம லக்கினத்துக்கு சனி நான்காவது பாவத்திலிருந்தால் மனிதர்களுக்கு நித்திரையும், கீழ் விழுகையும், விதிவசமாக பிதாவுக்கு அற்பாயுளும் உண்டாகும், சனியின் இருப்பு இரட்டை ராசியால் அறியவும்.

(164) ஜென்ம லக்கினத்துக்கு நான்காம் பாவாதிபதியாவது நான்காம் பாவாதி யிருக்கும் ராசி யதிபதியாவது, நான்காம்

பாவாதிபதியிருக்கும் நவாம்சாதிபதியாவது இம்மூன்றில் மத்தியில் ஒன்று லக்கினாதிபதியுடன் கூடியிருந்தாலும், லக்கினாதிபதியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் அம்மான் வீட்டில் வசிப்பான். அம்மானால் காப்பாற்றப் படுவான்.

(165) ஜென்ம லக்கினத்துக்குக்கு நான்காம் பாவாதி சுக்கிரன், குரு, பூர்ண சந்திராதிகள், செவ்வாயுடன் கூடியிருந்து ஜல ராசியில் ராசியின் முதலில் இருந்தாலும், அந்த கிராமம் சேது கட்டுங்காலத்தில் நல்ல மேன்மையாக கம்பீர வீட்டின் சமீப ஸ்தலம் ஆகும், அதன் ஸமீபத்தில் ஜலமும் உண்டு.

(166) ஜென்ம லக்கினத்துக்கு துஸ்தானத்தில் ராகு, கேது, குளிகனுடன் கூடி ராசியின் கடைசியில் இருந்தால் அந்த க்ஷேத்திரம் கிராமத்திற்கு வெளியில் தூரத்தில் உயர்ந்த மேட்டுப்பாங்கில் உண்டாகும், மிச்ரமானால் நடுவிலுள்ளதாகும்.

(167) ஜென்ம லக்கினத்துக்கு நான்கு, எட்டு, பத்து இந்த பாவங்களில் செவ்வாய் இருந்தாலும், அவர் சுபருடைய பார்வையுடையவனா யிருந்தால் அந்த தெசா புக்தி காலத்தில் ஜாதகன் வெகு க்ஷேத்திர முடையவனாவன், ராகு, சனி, குளிகனுடன் மேற்படி செவ்வாய் கூடியிருந்தால் விடு மேற்படி காலத்தில் நாசமடையும்.

(168) ஜென்ம லக்கினத்துக்கு நான்காம் பாவாதிபதியுடன், கூடிய சந்திரன் தேக ராசியை அடைந்திருந்தால் ஜாதகனுக்கு பிறருடைய வாகனம் வாகனமாகும்.

(169) ஜென்ம லக்கினத்துக்கு நான்காம் பாவாதிபதி சுக்கிர, சந்திர, லக்கினாதிபதிகளுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு குதிரை, பல்லக்கு முதலிய உண்டாகும், சந்திரன் பலம் ஆனால் வஸ்திர லாபம் ஏற்படும்.

(170) மேற்படி சந்திரன், ராகு, கேதுக்களுடன் கூடின், ஜீர்ணமான (நசித்துப்போன) வஸ்திர லாபமும், சந்திரன் குருவுடன்கூடி கேந்திர திரிகோணங்களி லிருந்தால் ஜாதகனுக்கு பட்டு வஸ்திர லாப முண்டாகும்.

(171) மேற்படி சந்திரனே, சந்திரன் சனி க்ஷேத்திரத்தில் இருந்து சனியால் பார்க்கப் பட்டாலும், சனியுடன் கூடியிருந்தாலும் ஜாதகனுக்கு நீல வஸ்திர லாப முண்டாகும்.

(172) மேற்படி சந்திரனே குரு, க்ஷேத்திரத்தில் இருந்து குருவின் பார்வை யடைந்திருந்தால் ஜாதகன் நல்ல வஸ்திரத்தை அடைவன்.

(173) ஜென்ம காலத்தில் குருவின் க்ஷேத்திரத்தில் சந்திரன் குருவுடன் கூடியிருந்தால் வாழை மரங்களும், சந்தன மரங்களும் ஜாதகன் வீட்டிலேயே உடையவனுவன்.

(174) ஜென்ம லக்கினத்துக்கு நான்காவது பாவாதிபதி சுக்கிர, சந்திர, குஜன்கூடி யிருந்தால் ஜாதகனுடைய வீட்டில் தாழை மரமுண்டாகும்.

(175) அங்கு சுக்கிரன், சந்திரன், குரு இவர்கள் கூடியிருந்தால் நல்ல வாசனையுடைய மல்லிகையும், சுகந்தமும் படரும்.

(176) ஜென்ம லக்கினத்துக்கு நான்காவது பாவத்தில் ராகு, செவ்வாய், சனி யிவர்கள் கூடியிருந்தால் ஜாதகன் வீட்டிள்ள செடி, கொடி, மரமிவைகள் வெகு முள்ளுள்ளவைகளை யுடையதாயிருக்கும்.

(177) நான்காம் பாவத்தில் பால சந்திர சூரியர் கூடியிருந்தால் ஜாதகன் வீட்டுதோட்டத்தில் தேக்கு மரங்களுண்டாகும், சிலர் சவுக்கு மரம் உண்டாகும் என்கின்றனர்.

(178) மேற்படி ஜென்ம லக்கினத்துக்கு நான்காவது பாவத்தில் குரு, சுக்கிரர் கூடியிருந்தால் ஜாதகன் வீட்டுத் தோட்டத்தில் பலா மரமுண்டாகும்.

(179) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் சந்திர, சுக்கிரர் கூடியிருந்தால் ஜாதகன் வீட்டுத்தோட்டத்தில் ஒட்டுமா மரங்களும், பாக்குமரங்களுமுண்டாகும்.

(180) நான்காம் பாவத்திலேயே சனி, சுக்கிரர் கூடின் நெல்லி மரம் உண்டாகும், மகிழ மரமும் உண்டாகும்.

(181) ஜென்ம லக்கினத்துக்கு நான்காவது பாவத்தில் சூரியன், சனியிவர்கள் கூடின் மேற்படி ஸ்தானத்தில் ஜாதகனுக்குப் புளியமரம் உண்டாகும்.

(182) ஜென்ம லக்கினத்துக்கு நான்காவது பாவத்தில் சூரியன், செவ்வாயிவர்கள் கூடியிருப்பின் ஜாதகன் வீட்டுத் தோட்டத்தில் மூங்கில் மரமுண்டாகும்.

(183) ஜென்ம லக்கினத்துக்கு நான்காவது பாவத்தில் சனி செவ்வாய், சந்திரர் கூடின் ஜாதகனுடைய வீட்டுத் தோட்டத்தில் நெல்லி மரம் உண்டாகும்.

(184) ஜென்ம லக்கினத்துக்கு நான்காவது பாவத்தில் சுக்கிரன் செவ்வாய் சந்திரனிவர்கள் கூடியிருந்தால் தாழை மரம் மேற்படி ஸ்தானத்திலுண்டாகும்.

(185) நான்காம் பாவத்தில் க்ஷீண சந்திரன், சூரியனிவர்கள் மேற்படி ஸ்தானத்தில் இருந்தால் ஜாதகனுடைய வீட்டுத் தோட்டத்தில் மாமரங்கள் இளந்துளிருடையதாயிருக்கும்.

(186) ஜென்ம லக்கினத்துக்கு நான்காவது பாவத்தில் சூரியன், குரு இவர்கள் கூடில் "நிஷ்பாவம்" என்கிற ஒருவித விருக்ஷம் உண்டாகும்.

(187) மேற்படி பாவத்தில் சனி, சந்திர, சூரியர் கூடில் மேற்படி ஸ்தானத்தில் ஜாதகனுக்கு வேப்பமரம் உண்டாகியிருக்கும்.

(188) மேலும் மேற்படி பாவத்தில் பால சந்திர, சூரியர் கூடில் மேற்படி ஸ்தானத்தில் பயிரும், அடர்த்தியானவைகளும், புதர்களும் உண்டாகும்.

(189) மேற்படி பாவத்தில் குரு பலமுடையவனுயிருந்தால் கரும்பு பயிர் உண்டாகும்.

(190) ஜென்ம லக்கினத்துக்கு நான்காவது பாவத்தில் குரு இருந்து அவர் பாபக் கிரகத்துடன் கூடி, அல்லது பாபரால் பார்க்கப்பட்டாலும் ஆலமரம் உண்டாகும். சிலர் பட்டுப்போன மரம் இருக்கும் என்று எண்ணுகின்றனர்.

(191) ஜென்ம லக்கினத்துக்கு நான்காவது பாவத்தல் சுபர்கள் பாபராசிகளில் இருந்தால் சுப விருக்ஷம் ஜாதகனுடைய வீட்டுத் தோட்டத்தில் உண்டாகும். மேற்படி சுபர்கள் சுப ஸ்தானத்தில் இருந்தாலும் சுப விருக்ஷமே யுண்டாகும்.

(192) ஜென்ம லக்கினத்துக்கு நான்காம் பாவமான சுய க்ஷேத்திரத்திலிருக்கும் (கிரக) ராசியின் ஆதி, மத்ய, அந்தியம் இவைகளை யறிந்து மேற்படி மரங்களை தான் நிர்மித்தவை முதலியவைகளை சொல்லவும்.

(193) ஜென்ம லக்கினத்துக்கு நான்காவது பாவம், இதர ராசிகளில் சர ராசிகளானல் பிறரால் மேற்படி விருக்ஷம் உண்டாக்

கப்பட்டதாகும். கிரகங்கள் மிச்ரமாயிருந்தால் அந்த கிரகம் எப்படிப்பட்டதென்பதையும், விருக்ஷம் எப்படிக்கானதென்பதையும், நான்காம் பாவத்தால் சொல்லவும்.

(194) ஜென்ம லக்கின பாவாதிபதியும், நான்காம் பாவாதிபதியும் ஒருவருக்கொருவர் அன்னியோன்னிய கேந்திரங்களிலிருந்தால் லக்கிஞதிபதியும் அப்போது பலவாஞயிருந்தால் ஜாதகன் வாகஞதிபதியாக ஆவான்.

# 5-வது அத்தியாயம்.

## ஐந்தாம் பாவம்.

—:(*):—

(1) தரித்திரம், புத்தி குரூரம், காவிய மறிதல், கௌரவத்துடனிருத்தல், சேஞதிபதி ஆகுதல், மூடனுக்குச் சமமாயிருத்தல், நிதானம் இவற்றை ஐந்தாம் பாவத்தாலும் சூரியன் முதலீனவர்களாலும் அறியவும்.

(2) ஜென்ம லக்கினத்துக்கு ஐந்தாம் பாவம் சுப க்ஷேத்திரமாஞலும், சுபர் பார்வை யுடையதாஞலும், சுபரையும் அங்கு உடையதாகியிருப்பினும், குரு மேற்படி ஐந்தாம் பாவத்திலிருப்பினும், குரு ஐந்தாம் பாவத்தை பார்க்கினும் ஜாதகனுக்கு சந்தானம் உண்டாகக் காரணமுண்டு.

(3) ஜென்ம லக்கினத்துக்கு ஐந்தாம் பாவத்தில் பாபரிருந்தாலும், புத்திரபாவாதிபதி பாபருடன் கூடியிருந்தாலும், ஐந்தாம் பாவம் குருவால் அல்லது புத்திரபாவாதிபதியால் பார்க்கப்பட்டிருவிட்டாலும் ஜாதகன் புத்திரனில்லாதவஞவன்.

(4) ஜென்ம லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சுய க்ஷேத்திர கிரக மிருந்தால் அந்தக் கிரகம் பாபக்கிரகமாஞனும் ஜாதகன் அற்பசந்தான மடைவன்.

(5) ஜென்ம லக்கினத்துக்கு ஐந்தாம் பாவமான மேற்படி புத்திர ஸ்தானத்தில் இரண்டு பாபர்கள் இருந்தால் ஜாதகனுக்கு அனேக குழந்தைகள் பிறக்கும். மேற்படி பாபர்கள் பலஹீனர்களாக இருப்பின், ஜாதகனுக்கு புத்திர நாசமுண்டாகும்.

(6) ஜென்ம லக்கினத்துக்கு எட்டாம் பாவாதிபதி தவிர்த்து மற்றவர் சுபர் ஐந்தாம் பாவத்தில் இருந்தால் சுப பலனுண்டாகும். சுபராயிருந்தாலும் எட்டாம் பாவாதிபதி ஐந்தாவது பாவத்தில் இருந்தால் புத்திர தோஷமே யுண்டாகும்.

(7) ஜென்ம லக்கினம் துலாமாகி ஐந்தாம் பாவமாகிய கும்ப ராசியில் சூரியனிருந்தால் ஜாதகன் புத்திர பாக்கியமில்லாதவனுவன். ஜென்ம லக்கினம் மீனமாகி அதற்கு புத்திர பாவமான ஐந்தாம் பாவத்தில் சூரியன் கடக ராசியில் இருந்தால் ஜாதகன் அற்ப புத்திரனுடையவன்.

(8) ஜென்ம லக்கினமாக இங்கு சொல்லப்படாத ராசிகளான துலா மீனம் தவிர்த்த மற்ற லக்கினங்களுக்கு ஐந்தாவது பாவத்தில் சூரியன் இருந்தால் ஜாதகன் புத்திரனுடையவனுவன். ஸ்திரீ பிரஜைகளுடையவன், அற்ப புத்திரனுடையவன், மேற்படி சூரியனே சத்துரு (பாவ) ராசியை அடைந்திருந்தால் வெகு புத்திரிகளுண்டாவார்கள்.

(9) ஜென்ம லக்கினம் ரிஷப, மிதுனங்களாகி சந்திரன் கன்னியா ராசியில் ஐந்தாவது, நான்காவது பாவங்களில் இருந்தால் ஜாதகன் புத்திரிகளுடையவனுவன்.

(10) ஜென்ம காலத்தில் ஓஜை என்னும் ஒற்றைப்பட்ட ராசியில் புருஷாம்சத்தில் ஐந்தாம் பாவத்தில் சந்திரனிருந்தாலும், மேற்படி சந்திரன் சூரியனுல் பார்க்கப்பட்டால் ஜாதகன் வெகு புத்திரியால் வெகு கிலேசமடைவான்.

(11) ஜென்ம லக்கினத்துக்கு ஐந்தாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகனுக்கு குழந்தைகள் பிறந்து பிறந்து இறந்துவிடும்.

(12) ஜென்ம லக்கினத்துக்கு ஐந்தாம் பாவத்தில் சுபரிருந்தாலும், சுபர் பார்த்தாலும் ஜாதகனுக்கு புத்திரனுண்டாவார்கள்.

(13) ஜென்ம லக்கினத்துக்கு ஐந்தாம் பாவத்தில் புதனிருந்தால் ஜாதகன் ஸ்திரீ பிரஜைகளும் அல்ப புத்திருடையவனுவன்.

(14) ஜென்ம லக்கினத்துக்கு ஐந்தாம் பாவம் புருஷக் கிரகத்துடன் கூடியிருந்தாலும், புருஷக் கிரகத்தால் பார்க்கப்பட்டாலும் ஐந்தாம் பாவம் புருஷக்ஷேத்திரமானுலும் ஜாதகனுக்கு புருஷ பிரஜை யுண்டாகும்.

(15) ஜென்ம லக்கினத்துக்கு ஐந்தாம் பாவத்தில் குரு இருந்தால் புத்திர, மித்திரர், தனம், சற்குணம் முதலிய உடையவனுவன். மேற்படி குருவே புத்திர பாவத்தில் ஸ்திரீ கிரக க்ஷேத்திரமாகி அதில் இருந்தால் ஜாதகன் வெகு புத்திரிகளுடையவன்.

(16) ஜென்ம லக்கினத்துக்கு மேற்படி புத்திர ஸ்தானம் மீன ராசியாயிருந்தால் ஜாதகன் அற்ப சந்தானமுடையவன்.

(17) ஜென்ம லக்கினத்துக்கு ஐந்தாம் பாவமான புத்திர ஸ்தானம் நீச்சராசியாகி அங்கு குரு இருந்தால் ஜாதகனுக்குக் குழந்தைகள் இறந்து பிறக்கும் அல்லது பிறந்து இறந்துவிடும்.

(18) ஜென்ம லக்கினத்துக்கு ஐந்தாம் பாவத்தில் சுக்கிரன் இருந்தால் ஜாதகன் வெகு பாக்கியமும், வெகு சந்ததியுமடைவன்.

(19) ஜென்ம லக்கினத்துக்கு ஐந்தாம் பாவத்தில் சனி சுய க்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகனுக்கு முதலிலேயே ஒரு புத்திரன் பிறந்துவிடுவான்.

(20) ஜென்ம லக்கினத்துக்கு ஒன்பதாம் பாவம் சிம்மமாகி அங்கு சனி புத்திர பாவத்திலிருந்தாலும்,

(21) ஜென்ம லக்கினம் துலாம் ஆகி ஒப்பதாம் பாவத்தில் சனி மிதுனராசியிலிருந்தாலும் ஜாதகன் புத்திரசோக மடைவான்.

(22) ஜென்ம லக்கினத்துக்கு ஒன்பதாம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகன் சபல புத்தியுடையவன், பயப்படுபவன், பயப்படத்தக்க குணமுடையவன், தயையுடையவன், அற்பசந்தானமுடையவன், ஐந்தாம் பாவத்திற் சொல்லப்பட்ட பலன்களை ஒன்பதாம் பாவத்தாலும் செல்லவும். இதே போல ஐந்தாம் பாவத்திலுலுள்ள எல்லா கிரகங்களும் ஒன்பதாம் பாவத்திலிருக்கும் போதும் ஊகித்துச் சொல்லவும்.

(23) ஜென்ம காலத்தில் சிம்மம் கன்னி, விருஷபம், விருச்சிகம் இந்த ராசிகள் ஐந்து ஒன்பதாம் பாவங்களாகி வரும் ஜாதகர்களுக்கு அற்ப புத்திர சுகமே யுண்டாகும் கிரகங்களுடன் கூடியிருந்தாலும் இப் பலனே உண்டாகும்.

(24) ஜென்ம லக்கினத்துக்குப் பத்தாம் பாவாதிபதியும் செவ்வாயும் கூடி ஐந்தாம் பாவத்திலிருந்தாலும், இவர்கள் ஒன்பதாம் பாவாதிபதியின் அம்சத்தை அடைந்திருந்தாலும், ஐம்பது வயதிற்குப் பிறகு ஜாதகனுக்கு புத்திர சித்தியும், சுகமும் உண்டாகும்.

(25) ஜென்ம லக்கினத்தில் அனேக கிரகங்களிருந்தாலும்,

(26) ஜென்ம லக்கினத்துக்கு எட்டாம் பாவத்தில் அனேக கிரகங்கள் இருந்தாலும், குருவுக்கு ஐந்தாமிடத்தில் வெகு பாபர்களிருந்தாலும் ஜாதகனுக்கு காலாந்தரத்தில் புத்திருண்டாவர்.

(27) ஜென்ம லக்கினத்துக்கு எட்டாம் பாவத்தில் சனியும், லக்கினபாவத்தில் செவ்வாயும் ஐந்தாம் பாவத்தில் சூரியனுமிருந்தால் அந்த ஜாதகனுக்கு காலாந்தரத்தில் அற்ப புத்திருண்டாவர்.

## (அபுத்திர யோகம்).

(28) ஜென்ம லக்கினத்துக்கு ஐந்தாம் பாவமாக சனி புதன் இவர்களின் ராசிகள் ஆகி அங்கு சனி மாந்தி இவர்கள் கூடியிருந்தாலும், சனிமாந்தியிவர்களால் மேற்படி புத்திர க்ஷேத்திரம் பார்க்கப்பட்டாலும், அப்போது ஜாதகனுக்கு தத்து முதலியன மூலம் சந்தியுண்டாகும்.

•(29) ஜென்ம லக்கினத்துக்கு மீன ராசி புத்திர க்ஷேத்திரமாகி அங்கு கிரகங்கள் சனி, மாந்தி ஆகி மேற்படிஇருந்தால் ஜாதகனுக்கு அற்பசந்தான முண்டாகும்.

(30) ஜென்ம லக்கினம் சிம்மமாகி தனுசு புத்திர க்ஷேத்திரமாகி மேற்படி கிரகங்கள் சனி மாந்தி இவர்கள் அங்கு இருந்தால் ஜாதகன் (குரூரமான) அற்ப சந்ததியுடையவன்.

(31) ஜென்ம லக்கினம் மீனம் ஆகி கடகம் புத்திர க்ஷேத்திரமாகி மேற்படி கிரகங்கள் சனி மாந்தி அங்கு இருந்தால் ஜாதகன் சந்ததியில்லாதவனுவன்.

(32) குரு கும்பராசியில் இருந்தால் ஜாதகன் சந்ததியில்லாதவனுவன்.

(33) ஜென்ம லக்கினத்துக்கு ஐந்தாம் பாவாதிபதி ஏழாம் பாவத்திலிருந்தாலும், ஏழாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலிருந்தாலும் இந்த பாவங்களில் இவர்களுடன் பாபரிருந்தாலும், பாபர் பார்த்தாலும் ஜாதகன் புத்திரபாக்கியாதிகளில்லாதவனுவான்.

(34) செவ்வாய் சூரியன் சனி இவர்கள் ஜன்ம லக்கினத்தின் முடிவில் அல்லது ஏழில் இருந்தாலும், ஐந்தாம் பாவத்தில் க்ஷீண சந்திரன் சூரியனுடனிருந்தாலும் ஜாதகன் புத்திரஹீனனுவன்.

(35) ஜென்ம லக்கினத்துக்கு பத்தாம் பாவத்தில் சந்திரனும், ஏழாம் பாவத்தில் சுக்கிரனும், நான்காம் பாவத்தில் பாபரும் இருந்தால் ஜாதகனுக்கு குல நாசகர யோகம் உண்டாகி குலத்தையே நாசம் செய்யும், வெகு புத்திரசோகமும் உண்டாகும், ஜாதகனுக்கு சனி செவ்வாய் இவர்களால் மட்டும் மேற்படி தோஷம் உண்டாகாது.

(36) ஜென்ம லக்கினத்துக்கு மூன்று நான்கு இந்த பாவங்களில் பாபர்கள் இருந்தால் ஜாதகன் வம்சத்தை யழிப்பவனவன்.

## புத்திர யோகம்.

(37) ஐந்தாம் பாவாதிபதி கேந்திரத்திலாவது ஒன்பது இரண்டு பதினொன்று இந்த பாவங்களிளாவதிருந்து பாபர்களால் பார்க்கப்படாமலிருந்தால் ஜாதகன் வெகு புத்திரரையுடையவன்.

(38) ஜென்ம லக்கினத்திற்கு ஐந்தாம் பாவாதிபதியும், லக்கின பாவாதிபதியும் கூடி யிருந்தாலும், ஒருவருக்கொருவர் மேற்படி பாவங்களை லக்கின பாவாதிபதி புத்திர பாவத்தையும் புத்திர பாவாதிபதி லக்கின பாவத்தையும் பார்த்துக் கொண்டாலும், ஒருவருக்கொருவர் க்ஷேத்திரம் மாறியிருந்தாலும் ஜாதகன் புத்திர லாபமுடையவன், மகான் ஆவான்.

(39) ஜென்ம லக்கினத்துக்கு ஐந்தாம் பாவத்தில் சுபரிருந்தால் ஜாதகன் நிச்சயமாக புத்திரனுடையவன்.

(40) ஜென்ம லக்கினத்துக்கு ஐந்தாம் பாவத்திலுள்ள சுபர் சந்திரன் சுக்கிரன் இவர்களின் வர்க்கத்திலிருந்தாலும், ஐந்தாம் பாவத்தை மேற்படி சுபர் பார்த்தாலும் ஜாதகனுக்குப் புத்திருண்டாவார்கள்.

(41) ஜென்ம லக்கினத்துக்கு ஐந்தாவது பாவத்தில் சூரியனும், குருவும், செவ்வாயின் ராசியிலிருந்து இவ்விருவருடன் புதனும் கூடியிருந்தால் ஜாதகனுக்கு க்ஷேத்திரஜ புத்திரனுண்டாவர். அப்போது சனி பார்த்தால் புத்திரர் இறந்துவிடுவர்.

(42) ஜென்ம லக்கினத்துக்கு ஐந்தாவது பாவத்தில் மேற்படி கிரகங்கள் சுக்கிராம்சத்தில் இருந்து சுக்கிரனால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு அனேக குழந்தைகள் பிறக்கும். ஒன்பதாம்

பாவத்தாலும் ஒன்பதாம் பாவத்திலிருக்கும் கிரகத்தாலும், சர லக்கினம், சராம்சம், சர ராசி இவைகளாலும் அறியவும்.

**(43)** ஜென்ம லக்கினத்துக்கு ஐந்தாவது பாவத்தில் சுக்கிர சந்திரருடைய வர்க்கங்களில் இவர்களிருந்தாலும், இவர்கள் ஐந்தாம் பாவத்தைப் பார்த்தாலும், சம ராசியை யடைந்திருந்தாலும் புத்திரீ புத்திரர் ஜாதகனுக்குப் பிரதானமாக உண்டாவர்.

**(44)** ஜென்ம லக்கினத்துக்கு சனி க்ஷேத்திரம் ஐந்தாம் பாவமாகி அங்கு சனியிருந்தாலும், சனி பார்த்தாலும் ஜாதகனுடைய பிதா மகன் நீண்ட புத்திர சோகத்தினால் பீடையுடையவனாவன்.

(45) ஐந்தாம் பாவம் புதனின் வீடாகி புதன் அவ்விடத்தில் இருந்தால் ஜாதகன் தத்தன் என்கிற பெயருடைய புத்திரனுடையவன். மேற்படி புதன் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகன் புத்திரனை விலை கொடுத்து பெருவான், இப் புத்திரனுக்குக் கிரீதன் என்று பெயர்.

(46) சனி சூரியன் அல்லது செவ்வாய் இவர்கள் வலுவுடையவர்களாகி ஐந்தாம் பாவத்தைப் பார்த்தால் ஜாதகன் பிறந்தவனும், பிறப்பவனும் துஷ்டனும், ஊமையும், மூடனும் ஆவான்.

(47) செவ்வாயின் அம்சத்தில் புத்திர பாவாதிபதி யிருந்தாலும், பார்த்தாலும், துர்ஸ்தானங்களில் இருந்து சந்திரன் சனியினால் பார்க்கப்பட்டாலும் கூடோத்பன்னன் என்னும் புத்திரனுண்டாவன்.

(48) ஜென்ம லக்கினத்துக்கு ஐந்தாம் பாவம் சூரியனால் பார்க்கப்பட்டு சனியின் அம்சத்தில் செவ்வாயிருந்தால் விசேஷ மந்திர ஔஷதாதிகளால் புருஷப் பிரஜை உண்டாகும்.

(49) செவ்வாய் சனி சந்திரன் இவர்கள் நான்காம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் விவாகத்திற்கு முன்னமே புத்திரனை யடைவன், (அதாவது பிரசவம் பிரசவித்தவளை மணந்து கொள்வான்).

(50) ஜென்ம லக்கினம் கன்னியாகி சூரியன் செவ்வாயிவர்கள் ஐந்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய புத்திரர் மரிப்பர்.

(51) சனியின் வர்க்கத்தில் சந்திரனிருந்து சனியால் ஐந்தாம் பாவம் பார்க்கப்பட்டாலும், இவர்கள் சனி சுக்கிரனுடன் கூடி யிருந்தாலும் பௌனர்ப்பவ னென்னும் புத்திரனையடைவன்.

(52) சந்திரன் பூரண கலாதரனாகி சனியின் க்ஷேத்திரத்தில் புத்திரபாவத்தில் இருந்து சனியுடன் கூடிய சூரியனால் மேற்படி சந்திரன் பார்க்கப்பட்டால் கானீனன் என்னும் புத்திரனுண்டாவான்.

(53) ஐந்தாம் பாவத்தில் சந்திரன் தன் வர்க்கத்தில் இருந்தாலும், எட்டாம் பாவத்தின் வர்க்கத்தில் சூரியனிருந்தாலும், சந்திரனாவது செவ்வாயால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் (விகல) குறைபாடுள்ள புத்திரனையுடையவன், அல்லது ஜாதகனாவது வீணனும், குறைபாடுமுள்ளவன்.

(54) ஜென்ம லக்கினம் குருவால் பார்க்கப்பட்டு சகல கிரகங்களும் இருந்தாலும், பார்த்தாலும், புத்திர பாவத்தில் குரூர கிரகங்களிருந்தாலும், குரூரர்களால் புத்திரபாவம் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுடைய புத்திரர் நாசமடைவார்கள்.

(55) ஒன்பதாம் பாவத்துக்கு எட்டாம் பாவாதிபதி லக்கினாதிபதிக்கு மித்திரனாயிருந்தால் ஜாதகனுடைய மரணகாலத்தில் விசேஷ அழிவில்லாத கீர்த்தியுடைய புத்திரர்களை யுடையவனாவன்.

(56) ஐந்தாம் பாவத்தில் ஐந்தாம் பாவாதிபதி புருஷக்கிரக வர்கத்தில் இருந்தால் புத்திரனையும், ஸ்திரீராசி வர்க்கத்தில் இருந்தால் ஸ்திரீ பிரஜைகளுமுண்டாகும்.

(57) வேறு மற்ற பலமுள்ள கிரகங்கள் ஐந்தாம் பாவத்திலிருந்தாலும், ஐந்தாம் பாவத்தைப் பார்த்தாலும் ஸ்திரீ நபும்ஸகக் கிரகங்களால் பலமுடையவர்களுக்குறிய கிரமப்படி அறிந்து சொல்லவும், மேலும் புத்திமான்கள், பெரியோர்கள் புத்திர பாவ நவாம்ச சங்கியைகளால் சுபர்களின் பார்வைக்கு இரண்டு மடங்கு புத்திருண்டாவார்கள் என்று சொல்லுகிறார்கள், வேறு கிரந்தப்படி.

(58) சூரியன், சனி, ராகு, கேது, குஜனிவர்களுக்குக் கிரமமாக சோகம், தனமின்மை, அமங்கள செய்கை,. ஹானி, விஷம் ஆக ஐந்து விதங்களையும், வரிசையாக உள்ள ஷை ஐந்து கிரகங்களும் ஐந்தாம் பாவத்திற்குறிய பலன்களை ஐந்தாம் பாவத்தில் இருக்கும்போது செய்வார்கள்.

(59) புதன், சுக்கிரன், சந்திரன், குரு இவர்கள் மேற்சொல்லியபடியே ஐந்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகனை அழகுடன், சம்பத்துடை.யவனாகவும், வெகு ஆயுள், ஜயம், இஷ்டசித்தி முதலானவற்றைக் கொடுப்பார்கள், பாக்கியமும் உண்டாகும்.

(60) மேலும் ஜாதகன் பிறந்த உடன் லக்கினத்துடன் சூரியன் முதலான கிரகங்களையும் திருக்கணித பஞ்சாங்கப்படி நன்றாக சுத்தஸ்புடம் செய்து அந்த கிரகங்களின் ஸ்புடங்களால் மேற்படி கிரகங்களின் பலங்களையறிந்து திசாபுக்தியின் கிரமப்படி பலன்களைச் சொல்லவும். இந்தவிதமாக லக்கினாதிபதிகளைப் பார்த்து ஜோதிஷ சாஸ்திர மறிந்தவர்கள் சொல்லவேண்டும் என்றும், ஆகையால் லக்கின பரீக்ஷையைச் செய்து சூதிகாலக்ஷணம் முதலியவைகளையும் நிர்ணயம் செய்துக்கொள்ளவேண்டும் என்றும், உத்தமபுத்தியுடையவர்களுக்கு இந்த ஜோதிட சாஸ்திரம் விவரமாக சொல்லப்பட்டது.

(61) ஜாதகனுடைய ஜன்ம காலத்தில் சந்திரன் ஜாதகனுடைய ஜன்ம லக்கினத்தைப் பார்க்காமலிருந்து பாபர்களால் பார்க்கப்பட்டிருந்தால் தாழ்ந்த தேசத்தில் ஜாதகன் பிறப்பான், மேலும் இவற்றை,

(62) சர, ஸ்திர உபயராசிகளால் சந்திரனிருப்பை யறிந்து சொல்லவும், ஜாதகன் பிறக்கும்போது ஜாதகனுடைய தகப்பன் தூரத்திலிருப்பதையும் சமீபத்திலிருப்பதையும், வெளி தேசத்திலிருப்பதையும் சந்திரனைக் கொண்டும் மேற்படி ராசிகளைக் கொண்டும் அறியவும்.

(63) ஜென்ம லக்கினத்தைச்சந்திரன் பார்த்தாலும், ஒன்பது, எட்டு முதலிய பாவங்களில் சூரியன் இருந்தால் ஜாதகனுடைய பிதுரு லக்ஷணத்தை முன்போலவே சொல்லவேண்டும்.

(64) ஜென்ம லக்கினத்தில் லக்கின பாவத்திலுள்ள சனியாலும், அதே போல் ஏழாம் பாவத்திலுள்ள செவ்வாயாலும், இவ்விருவருக்கும நடுவிலுள்ள சந்திரனாலும், இப்படியே புத, சுக்கிரர்களுக்கும் அறிந்து எதிர்பாராத தீர்மானமில்லாத வெளிதேசங்களையும், சுய தேசங்களிலிருப்பையும், தூரத்திலல்லது, சமீபத்தில் வீட்டில் இருப்பையும் அறியவும்.

(65) ஓரிடத்தில் பாபராசியில் அல்லது திரிகோண ராசியில் அல்லது இரண்டாம் பாவத்தில் சூரியனிருந்து, சனியும் செவ்வா

யும் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பனுருக்கு பந்தனம் அதாவது (கட்டுப்படல்) உண்டாகும். இவைகளை *சூரியனுடைய லக்கினத்தாலும் நிர்ணயிக்கவும்.

(66) ஜாதகனுடைய ஜென்ம லக்கினத்தையாவது, சந்திர லக்கினத்தையாவது குரு பார்க்காதிருந்தால் ஜாதகன் வேறு தகப்பனுக்குப் பிறந்தவனென்று எல்லாரிஷிகளும் எண்ணுகின்றார்.

(67) ஜென்ம லக்கினத்தைக் குரு பார்த்தாலும், சூரியனுடன் கூடியிருக்கும் சந்திரனைப் பார்க்காதிருந்தால் அப்போது பிறந்தவனும் பரஜாதகமே என்றும்,

(68) ஜென்ம லக்கினத்தைக் குரு பார்த்தாலும், சூரியன், சந்திரனுடன் கூடியிருந்து அல்லது செவ்வாயுடனுவது சந்திரன் கூடியிருந்தாலும், சனியுடன் சந்திரன் கூடியிருந்தாலும் ஜாதகன் முன்போலவே பரஜாதகன் என்றும்,

(69) சூரிய, சந்திரர் கூடியிருந்து சனி நீச்சராசியில் இருந்தாலும், லக்கின பாவத்தில் இவ்விதமாயிருந்தாலும் பிறந்தவனை பரஜாதகமென்றும்,

(70) ஞாயிறு சுவாதி, துவிதீயை மூன்றும் சேர்ந்த தினத்திலும், சப்தமி, புதன்கிழமை, ரேவதி இம்மூன்றும் கூடிய தினத்திலும், சனிக்கிழமை, அவிட்டம், துவாதசி இம்மூன்றும் கூடிய தினத்திலும் பிறந்தவர்கள் பரஜாதகமென்றே ரிஷிகள் எண்ணுகின்றனர்.

(71) சந்திரன் குரு க்ஷேத்திரத்தில் இருந்தாலும், குருவுடன் கூடி வேறு ராசிகளிலிருந்தாலும், அந்த திரேக்காணத்திலாவது, அந்த அம்சத்திலாவது ஜனித்தவன் ஔரஸ புத்திரனுவன்.

(72) ஒரே ராசியில் லக்கினத்தில் சந்திரனிலிருந்து, லக்கினத்திற்குப் பன்னிரண்டில் சனி யிருந்து, பாபரால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் ஔரஸபுத்திரனேயாவன், ஆயினும் ஜாதகன் ஜெயிலில் ஜனன மடைவான்.

(73) விருச்சிகம் கடகம் இவைகள் லக்கினமாகி அதில் சனியிருந்து சந்திரனுல் பார்க்கப்பட்டு ஜன்ம லக்கினம் சர ராசியின் முதல் நவாம்சமானுல் சந்திரனுல் தேசத்தை நிர்ணயம் செய்யவும்.

---

* சூரிய லக்கினமென்பது சூரியனிருக்கும் ராசியாகும்.

(74) ஜல ராசி ஜன்ம லக்கினமாகி சனிமேற்படி ராசியி லிருந்து, சந்திரன் புதன் சூரியனிவர்கள் மூவராலும் பார்க்கப் பட்டால் விளையாட்டு ஸ்தானத்திலும், (படுக்கையறையிலும்) தேவாலயத்திலும், உப்பு மண்ணுக்குச் சமமான பூமியிலும் ஜனன மடைவன்.

(75) மனுஷ்ய ராசிகள் ஜன்ம லக்கினமாகி சனி லக்கினத் தில் இருந்து தன் உச்ச, சொரேஷத்திர ராசிகளில் இருக்கும் சூரி யனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தேவாலயம், பசு கட்டுமிடங்கள் இப்படிப்பட்ட ஸ்தானங்களில் ஜனனமாவன். அரசனுடைய வீட்டில் ஜனனமுமாவான்.

(76) நர ராசி ஜன்ம லக்கினமாகி அதில் சனி யிருந்து செவ் வாயினால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மயானத்திலும்,

(77) நர ராசி ஜென்ம லக்கினமாகி அதில் சனியிருந்து புத னால் பார்க்கப்பட்டால் சித்திரக் கலாசாலையிலும்,

(88) நர ராசி ஜென்ம லக்கினமாகி அதில் சனியிருந்து சுக்கி ரன் சந்திரனிவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அழகான மாளி கையிலும், மேற்சொல்லிய சனியைக் குரு பார்த்தால் ஹோமம் செய்யுமிடத்திலும் ஜனனமாவான்.

(79) லக்கினத்தில் புதனும் நான்காம் பாவத்தில் குருவும் கடகத்தில் பூர்ண சந்திரனும் இருந்து சனித்த ஜாதகன் ஓடத்தின் மத்தியில் ஜனனமானவனாவன்.

(80) மீனம், கடகம், மகரம் இவைகளின் கடைசியிலும், கும்பம் லக்கினமாகி அதிலும் ஜனனமாகி ஏழாம் பாவத்தில் பூர்ண சந்திரனிருந்தால் ஜலக்கரையிலேயே பிரசவம் நேரிடும்.

(81) மீனம் முதலான ஜல லக்கினங்களில் (பிறந்தவர்கள்) ஏழாம் பாவத்தில் அல்லது அதின் கேந்திரங்களில் பூர்ண சந்திரன் நல்ல பலிஷ்டனாகி யிருந்தால் ஜாதகன் அதிக ஜலத்திலேயே ஜனன மடைவன்.

(82) லக்கினம் கடகம் ஆகி மீனத்தில் அல்லது கடகத்தில் பூர்ண சந்திரன் இருந்தாலும், மீனம் முதலான ஜல ராசிகள் ஜன்ம லக்கினமானலும் பூர்ண சந்திரன் லக்கினத்தை பார்த்தால் ஜாதகன் ஜலத்திலேயே ஜன்மமடைவான்.

(83) ஒரே ராசியிலுள்ள மூன்று முதலான கிரகங்கள் வேறு கிரகங்களால் பார்க்கப்படாமலிருந்தாலும், லக்கினம், சந்திரன் இவ்விருராசிகளும் ஒன்றேயாகி அதாவது ஜன்ம லக்கினத்திலேயே சந்திரனிருந்து ஜனனமானாலும் ஜாதகன் ஜனமில்லாத இடத்தில் ஜனனமடைவன்.

(84) ஜாதகன் ஜனிக்கும்போது சகல சுப கிரகங்களும் நீச்ச ராசியில் பலமுடையவர்களா யிருந்தால் ஜாதகனுக்கு விருக்ஷங்களும், கோட்டையும், நதியுமுள்ள இடத்தில் ஜனனம் நேரிடும்.

## பிரசவ கிருக லக்ஷணம்.

(85) நசித்துப்போன மரம், புதிது, கொளுத்தப்பட்டது வேலைப்பாடுடையது, திடம் முதலியனதும், ரம்பியமானதும், சித்திரமானதும், புதிதும் ஜீர்ணமானதும், அனேகவிதமானதும், சூரியன் முதலானவர்களாலும், பலமுள்ள கிரகங்களாலும் ராசிச் சக்கிரத்தில் இருக்கும் இதர கிரகங்களாலும், ஆருட கிரமங்களாலும் பிராந்தியங்களையும், விடுகளையும் அறியவும்.

(86) பகலிற் பிறந்தவர்களுக்கும், இரவில் பிறந்தவர்களுக்கும் முறையே சுக்கிரன், சூரியன், சந்திரன், சனி இவர்கள் மாதா, பிதாக்களுக்குக் காரகராவார்கள், இவற்றை நமது பிரஹத் ஜாதக மொழி பெயற்பில் காண்க, இவ்விடத்திற்கு அந்த சுலோகத்தின் அர்த்தமே பொருந்துகிறது.

(87) சூரியன் பலமுடையவனாகி யிருந்தால் ஜாதகன் தகப்பன் வீட்டில் ஜனிப்பான், தேவாலயம், ஜலம், நெருப்புள்ள இடம், விளையாடுமிடம், சயன கிரகம் அதாவது படுக்கை அறை, மத்திய வஸ்துக்களுள்ள இடம், பூமி, மயானம் முதலிய இடங்களை லக்கினத்திலுள்ள சூரியன் முதலியவர்களின் பலங்களால் முக்கிய (ஸ்தானங்களை) க்ஷேத்திரங்களைக் கொண்டு ஜாதகனுடைய ஜன்ம பூமியை அறியவும். இதை இன்னும் விபரமாக நமது பிருஹத் ஜாதக தமிழ் மொழி பெயர்ப்பில் சொல்லப்பட்டிருக்கிறபடியால் அதை பார்த்து தெரிந்துக்கொள்ளவும்.

(88) ஜன்ம லக்கினம் சரராசியானால் வழியின் சமீபத்திலும் ஸ்திர ராசியானால் வீட்டிலும் (உபய) ராசியானால் வீட்டின் முற்றத்திலும் லக்கினத்தின் பலத்தினாலும், அம்சத்தின் பலத் தினாலும் ராசிக்குச் சமதேசத்திலும் ஜனன மறியவும்.

(89) துலாம், கடகம், விருச்சிகம், கும்பம் இவற்றின் கடைசி அம்சங்களில் பலத்துடன் கூடியதும், லக்கினத்திலுள்ள கிரகங்களாலும் வாஸ்து நிச்சயம் செய்து இவைகளுக்கு கிழக்குபாகத்தில் சூதிகாகிரகமும் ;

(90) சிம்மம், மகரம் இவைகளுக்கு தெற்கிலும் ; விருஷப ராசியால் மேற்கிலுள்ள கிரகமும் ; உபய ராசிகளால் வடக்குப் பக்கத்திலுள்ள கிரகத்தையும் முன்போல் யோசிக்கவும்.

(91) சூரியன் சுக்கிரன் செவ்வாய் ராகு சனி சந்திரன் குரு புதனிவர்களால் கிரமமாக கிழக்கு முதலாகவும் இவர்களில் பலமுடையவர்கள் கேந்திரங்களிலிருப்பவர்களாலும் வீட்டின் பிரசவ கிரகத்தின் வாயிற்படியை அறியவும்.

(92) இரண்டு கிரகங்கள் பலமுடையவர்களாக கேந்திரங்களில் இருந்தால் இரண்டு வாயிற்படிகளிருக்கும், லக்கினத்திற்கு துவாதசாம்சத்தின் பாகாச்சாரமாக கேந்திரங்களிலுள்ள கிரகங்களாலரியவும், திக்கு ராசிகளாலாவது லக்கினத்திலுள்ள பலமுள்ள கிரகங்களாலாவது அறியவும்.

(93) கிரகங்களின் துவாதசாம்சங்களால் கிழக்கு முதலியவைகளை கிழக்கு மேஷம் என ஆரம்பித்து சூரியன் இருக்கும் எந்த திக்கிலிருக்கிறரோ அது தீப முள்ள திக்கு என்றும், ஸ்திரராசியானல் சுவற்றில் வைக்கப்பட்டதும், சர ராசியில் இருந்தால் எடுத்து இஷ்டப்படி வைக்கக்கூடியதும், உபயராசியிலிருந்தால் தொங்கிக்கொண்டுமிருக்கக்கூடியதையும் அறியவும், வத்தியும் லக்கினத்தில் சென்றிருங்கும் பாகம் எத்தனை சென்றிருக்கிறதோ அந்த அம்ச சமமாக வத்தியும் எரிந்திருக்கும்.

(94) சந்திரன் இருக்கிற ராசியால் எண்ணெயின் பாகத்தை முன்போல் அறியவும்.

(95) சூரியன் சனியுடன் கூடியிருந்தாலும் சனியால் பார்க்கப்பட்டாலும் எந்த பாவாதிபதியின் ராசியிலிருக்கிறரோ அந்தக் கிரகத்துக்குரிய உலோகத்தினுல் விளக்கு செய்யப்படும். சூரியனும் செவ்வாயுமிருந்தால் தாமிரபாத்திரமும், சந்திர புத, சுக்கிரனுக்கு வெண்கலமும், குருவுக்கு சொர்ணமும், சனிக்கு இரும்பு அல்லது மண் பாத்திரமும் விளக்காக உபயோகமாகும்.

(96) சந்திரன் ஜென்மலக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் இருந்து சனியால் பார்க்கப்பட்டாலும் சனியின் அம்சத்தில் இருந்தாலும் ஜலாம்சத்தில் இருந்தாலும் இருட்டில் பிரசவமுண்டாகும்.

(96) சூரியனால் சந்திரன் பார்க்கப்பட்டு மேற்சொல்லியபடி இருந்தாலும் இது விஷயமாக மேலே சொல்லிய பலனே யுண்டாகும்.

(98) மேற்படி சூரியன் பலமுள்ள கிரகத்தால் பார்க்கப்பட்டால் செவ்வாயால் பார்க்கப்பட்டால் வெகு தீபங்களைச் சொல்லவும்.

(99) செவ்வாய் வலுவுள்ள வேறு கிரகத்தால் சூரியனிவர்களால் பார்க்கப்பட்டால் புல் முதலிய எதையாவது கொளுத்தப்பட்டுண்டாகும். சிலர் தீபம் மறைவாயிருக்கும் என எண்ணுகின்றனர்.

(100) நூறு, நூற்றிருபது, ஆயிரம், பத்தாயிரம் மூன்றுஅதாவது முப்பதாயிரம், லக்ஷம் மேலும் இவ்விதமாக மனிதர்களுக்கு வயது ஆறுவழிகளில் விருத்தியடைகின்றன. இந்த கலியுகத்திலோ வெனில் நூறு, நூற்றிருபது, ஆயிரம் இதுவரை எங்கோ ஒருவருக்குத்தான் உண்டாகிறது என்றும், பாப காரணங்களால் வெகு அரிஷ்டங்களை வெகுவாக நேரிடுகிறதென்றும், அந்த அரிஷ்டங்களும் மூன்று விதம் என்றும், நிச்சயமாக அநிச்சயமாய் விடுகிற தென்றும் முதலில் சில யோகாரிஷ்டமும் ஆயுர்தாயத்தினால், அநிச்சிதமான தசாரிஷ்டமும் யோக மரணமும், தசா மார்க்கத்தால் அரிஷ்டமும் பலவிதமாக பலவிதங்கள் நேரிடுகின்றன என்றும் இதற்கெல்லாம் முதலிலேயே பாலரிஷ்டமும் பிரபலமாகிவிடுகிறதென்றும் பிதுருக்கள் தோஷமும், பிசாச தோஷமும், ஜன்பாரிஷ்டங்களும் குழந்தைகளுக்குண்டாகின்றன என்றும், அதனால் குழந்தைகள் பாலமிருத்து அடைகின்றன என்றும் முனிவர்கள் கூறி மேலும் பன்னிரண்டு வயதுவரையில் பாலரிஷ்டத்தால் ஆயுள் நிச்சயிக்க முடியாதென்றும் முன்னோர்கள் கூறி குழந்தைகளுக்குப் பன்னிரண்டு வயது வரை ஜப ஹோமாதிகளால் ஆயுளை வளர்த்து பிரயத்தினத்தால் ரக்ஷிக்க வேண்டுமென்றும் மேலும் கூறுகின்றனர்.

(101) ஐந்தாம் பாவத்தில் இருக்கப்பட்டவரும் ஒன்பதாம் பாவத்திலிருக்கப்பட்டவரும் இந்த பாவாதிபதிகளும் குருவும் இருக்கப்பட்ட ஸ்தான பலங்கள் முதலானவைகளை யோசித்துச் சொல்லவும், மேலும் புதன் சூரியன் முதலியவர்களால் புத்தி முதலியவைகளாலும் ஒன்பது ஐந்து முதலிய பாவங்களாலும் யாத்திரை முதலியவைகளையும் தூரதேசப் பிரயாணம் முதலியவைகளையும் இரண்டு, ஐந்து, ஏழு, பன்னிரண்டு முதலியவைகளால் ஊகிக்கவும்.

(102) சூரியனாலும் நான்காம் பாவத்தாலும் பிதாவின் மரணத்தைச் சொல்லவும்.

(1·2) சந்திரனாலும் ஐந்தாம் பாவத்தாலும் தாயின் மரணத்தைச் சொல்லவும் என்று பராசரர் சொல்லுகிறார்.

(104) ஐந்தாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலிருந்து குருவின் வர்க்கத்தில் சனி, சூரியன் விதிபாதனிவர்களின் பார்வையடைந்து கேதுவும் ஐந்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் திருட்டுக் கணவனுக்குப் பிறந்தவன்.

(105) செவ்வாயின் வர்க்கத்தில் மேற்சொல்லியபடியிருந்து சனியாய் பார்க்கப்பட்டால் க்ஷேத்திரஜ புத்திரலாப முண்டாகும். சனியின் வர்க்கத்தில் இம்மாதிரியிருந்து செவ்வாயால் பார்த்துமிருக்கப்பட்டால் தத்தன் என்னும் புத்திரனுண்டாவான். சனியாலும் சூரியனாலும் பார்க்கப்பட்டாலும் சனியல்லது சூரியனுடன் கூடியிருந்தாலும் அதமாதமன் என்னும் புத்திரனுண்டாவன். இப்படியிருந்து செவ்வாயும் ஐந்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் வேசிக்குப் பிறந்தவனாவன்.

(106) செவ்வாய் ஐந்தாம்பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்குப் புத்திரனுண்டாகிப் பிறந்து பிறந்து மரித்துவிடுவார்கள். சுக்கிரன் குரு இவர்களால் பார்க்கப்பட்டு சனியாலும் பார்க்கப்பட்டாலும், செவ்வாயின் அம்ச வர்க்கங்களில் இருந்தாலும் புத்திரன் உண்டாகி நஷ்டமடைவார்கள்.

(107) ஜென்ம லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் சனியுடன் கூடிய சூரியன், சுக்கிரன், சந்திரன் இவர்களாலும் ஜாதகன் தத்து புத்திரனை யடைவன்.

(108) செவ்வாய் ஐந்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுக்கு ரத்தம் விழுவதால் மரணம் ஏற்படும், வேறு கிரந்தம்.

(109) மீனம், சிம்மம், விருச்சிகம், மேஷம் இந்த ராசிகளில் செவ்வாயிருந்து, இந்த ராசிகள் ஜன்மலக்கினங்களுக்கு ஐந்தாம் பாவங்களானால் மேற்படி செவ்வாயை குரு பார்த்தாலும் ஜாதகனுக்குப் புத்திரருண்டாவார், மேற்படி செவ்வாயைக் குரு பார்க்காமலிருந்தாலும் புத்திரருண்டாவார்.

(110) ஜென்ம லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் புருஷக்கிரக நவாம்சம் எதுவரை சென்றிருக்கிறதோ அதிலிருந்தாவது, ஐந்தாம் பாவாதிபதி புத்திர பாவத்தில் புருஷ ராசியின் அம்சங்களை எவ்வளவு கடந்திருக்கிறாரோ அதிலிருந்தாவது, புத்திர பாவாம்சத்தினாலாவது, மூன்றையும் கவனித்தும், மேற்படி அம்சாதிபர்களை சுபர்கள் பார்த்தால் அவர்கள் சென்றிருக்கும் நவாம்சத்திற்கு புத்திர பாவாதிபதியும், புருஷக் கிரகங்களும் புருஷ ராசியிலிருந்து எவ்வளவு நவாம்சம் தாண்டியிருக்கிறார்களோ அவ்வளவு புத்திரர்களுண்டாவார்கள், புத்திரிகளுக்கானால் இதை தலைகீழாய்ப் பார்த்துக் கொள்ளவும்.

(111) குரு இருக்கும் ராசிக்கு ஐந்தாம் ராசியதிபதி எங்கிருக்கிறாரோ அந்த ராசியிலிருந்து எத்தனை நவாம்சங்கள் சென்றிருக்கிறாரோ அத்தனை புத்திரருண்டாவார்கள்.

(112) சந்திரன், சனி இவர்கள் எட்டாம் பாவத்திலிருந்து நான்காம் பாவாதிபதி கெட்ட பாவருடன் ஐந்தாம் பாவத்தில் இருந்தாலும்,

(113) எட்டாம் பாவாதிபதி வலுத்து ஐந்தாம் பாவத்திலிருந்து லக்கின பாவத்தில் குரூர கிரகங்களுடன் கூடி யிருந்தாலும், சந்திரன் ஐந்தாம் பாவத்திலிருந்தாலும் வமிச நாசமேற்படும்.

(114) குரு ஸ்திரீ ராசியில் ஐந்தாம் பாவத்தில் அல்லது லக்கின பாவத்திலிருந்து சுப பதியாகிய ஒன்பதாம் பாவாதிபதியுடன் கூடி யிருந்தாலும், கேந்திர கோணங்களை யடைந்திருந்தாலும் அவருடைய திசையில் சீக்கிரமாக புத்திரருண்டாவர். இதற்கு மாறுபாடாயிருந்தால் பலனும் மாறுபாடாயிருக்கும், அல்லது காலாந்திரத்தில் புத்திரருண்டாவார்.

(115) ஜென்ம லக்கினத்துக்கு எட்டாம் பாவத்தில் சனி யிருந்து, சூரியன் அற்ப புத்திர ராசியை அடைந்திருந்து, லக்கினத்தில் செவ்வாயிருந்தாலும்,

(116) ஜென்ம லக்கினத்தில் அனேக கிரகங்களிருந்து, சந்திரன் பதினோராம் பாவத்தை யடைந்திருந்து, ஐந்தாம் பாவத்திலும் குருவுடனும் பாவர்கள் கூடியிருந்தாலும்,

(117) ஜென்ம லக்கினம், எட்டாம் பாவம், பன்னிரண்டாம் பாவம் இவ்விடங்களிலும் பாவர்களிருந்தாலும், சந்திரன் ஐந்தாம் பாவத்திலிருந்தாலும் ஜாதகன் புத்திரனில்லாதவனாவன்.

(118) ஜென்ம லக்கினத்துக்கு எட்டு, பன்னிரண்டு, ஐந்து, ஜென்ம லக்கினம் இந்த பாவங்களில் பாவர்களிருந்தாலும் ஜாதகன் சந்ததி க்ஷீணமுடையவன், வம்சக்ஷயமுடையவன்.

(119) பதினோராம் பாவம், ஐந்தாம் பாவம் இந்த பாவங்களில் லக்கின பாவாதிபதிக்கு மித்திர கிரகம் இருந்தாலும், இப்படியே ஐந்தாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் ஒன்பது புத்திருடையனாவன், அந்த க்ஷேத்திர ஸ்தானங்களிலிருக்கும் கிரக சங்கியை எண்ணுள்ளபடியாவது புத்திருண்டாவார்கள்.

(120) புத்திராதிபதியுடன் கூடியிருக்கும் கிரகத்தினுடையவும், புத்திர காரகனுடன் கூடியிருக்கும் கிரகத்தினுடையவும், இவர்களுடன் யெந்த யெந்த கிரகங்கள் கூடியிருக்கிறார்களோ அவர்களுடைய லக்கினத்திலும், ஓரையிலும் புத்திரர்ஜனிப்பார்கள்.

(121) ஜென்ம லக்கின பாவாதி, சந்திர லக்கினாதிபதி, ஐந்தாம் பாவாதிபதி, ஏழாம் பாவாதிபதி, பதினோராம் பாவாதிபதி இவர்களைத் தவிர்த்த மற்றவர்களுக்கு பதினோராம் பாவத்தைத் தவிர்த்தவர்களுக்கு மேற்சொல்லியபடி கிரகங்கள் யெந்த யெந்த கிரகங்களுடன் கூடியிருக்கிறார்களோ அவர்களுடைய ஓரை, ஓரா லக்கினமிவற்றில் புத்திர ஜனனமுண்டாகும்.

---

# 6-வது அத்தியாயம்.

## ஆருவது பாவம்.

—:(*):—

(1) திடதேகம், வியாதியினால் பீடை, தீக்ஷண்ணியம், விவாதம், சத்துரு வுடமை, ஸ்திரீகளுடைய (நாகம்) பீடை முதலியவைகளை சூரியன் முதலானவர்களாலறியவும்.

(2) ஜென்ம லக்கினத்திற்கு ஆருவது பாவத்தில் பாபர்களிருந்தால் ஜாதகன் பலமுடைய சத்துரு விருத்தியுடையவன்.

(3) ஜென்ம லக்கினத்திற்கு ஆருவது பாவத்தில் சுபரிருந்தால் ஜாதகன் சத்துரு இல்லாதவனாவன், மேலும் துர்ப்பலமுடையவன்.

(4) ஜென்ம லக்கினத்திற்கு ஆரும் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகன் யுத்தத்தில் சத்துருக்களைச் ஜெயிப்பான், வேறுக் கிரகமும் இருந்தால் நற்பெயரும், சுற்றத்தாரரிஷ்டமும், பிரசித்தியுமுடையவனாவன்.

(5) ஜென்ம லக்கினத்துக்கு ஆரும் பாவத்தில் தன் உச்ச, சத்துரு ராசிகளில் இருக்கும் பாபர்களால் தீர்க்காயுளும், பலமுமுடையவன், அரசனாவன், தேஜசுடையவன், உதார குணமுடையவன், வாச்சாலகன், இந்தக் கிரகங்கள் நீச்ச, சத்துரு ராசிகளில் இருந்தால் ஜாதகன் இதற்கெதிரான பலனடைவன்.

(6) ஜென்ம லக்கினத்திற்கு ஆரும் பாவத்தில் சுபர்கள் சுயக்ஷேத்திர வர்க்கங்களில் இருந்தால் சௌரியம், சத்துரு முதலியவைகளை நாசம் செய்யும்.

(7) சுபர்கள் தன் நீச்ச, சத்ருவர்க்கத்தில் ஆருவது பாவத்தில் இருந்தால் ஜாதகன் சத்துரு, ரோகம் முதலானவைகளுடையவன்.

(8) ஜென்ம லக்கினத்துக்கு இரண்டு அல்லது மூன்று சுபக் கிரகங்கள் ஆரும் பாவாத்தில் சுப க்ஷேத்திரத்தில் இருந்தால் ஜயயோகத்தினாலும்,

(9) மேற்படிக் கிரகங்களில் கேந்திரத்தில் மேற்சொல்லியபடியிருந்தாலும் ஜாதகன் வாகனாதிகளுடன் கூடியவனாவன்.

(10) ஜென்ம லக்கினத்துக்கு ஆருவது பாவத்தில் சுபரும், பாபரும் கூடியிருந்தால் ஜாதகன் குலத்தில் மேன்மையுடையவனா

வன், மூர்க்கன், வஞ்சகன், சோம்பனுடையவன், பெரிய விரோதம் உடையவன், அம்மான், பந்து முதலியவர்களிடம் பெரிய விரோதமடைவன்.

(11) சந்திரனும், சூரியனும் ஆறுவது பாவத்திலிருந்தால் ஜாதகன் துஷ்ட, கெடுதலான பலனடைவன், நீச்ச முகத்தில் இருந்தாலும் கெடுதலே யுண்டாகும்.

(12) சந்திரனும், சூரியனும் கூடி ஏழு அல்லது எட்டு இந்த பாவங்களிலிருந்தால் ஜாதகன் மரணமடைவான், மேலும்,

(13) மேற்படி சூரிய, சந்திரர் கூடி பாபருடன் அல்லது பாப க்ஷேத்திரத்திலல்லது பாப ராசியிலுமிருந்தால் ஜாதகன் மரணமடைவான்.

(14) சுக்கில பக்ஷ பூரண சந்திரன் நான்காம் பாவத்திலிருந்தாலும் ஜாதகன் சத்துரு வர்க்கத்தைக் குறைப்பான்.

(15) சந்திரன் ஒருவனுகவே யிருந்தாலும் ஜாதகனுக்கு துக்கத்தையே தருவான், சண்டாளன் முதலியவர்களுடன் விரோதமும், திர்யக் ஜந்துக்களால் பயமும் அடைவான்.

(16) ஜென்ம லக்கினத்துக்கு ஆறும் பாவத்தில் சூரியன், சனி, செவ்வாயிவர்கள் பார்க்கப்பட்டால் ஜாதகன் சண்டையில் ரண காயத்தால் அடையாளமடைவன், இவர்களே நீச்ச, சத்துரு ஸ்தானங்களிலிருந்தால் மரணத்தையே யடைவன்.

(17) சூரியன், சனியுடன் மட்டும் கூடியிருந்தால் ஜாதகன் ஜாதியில் ஒதுக்கப்படும் பயமுடையவன்.

(18) ஜென்ம லக்கினத்துக்கு ஆறும் பாவாதிபதி சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகன் ஜுர கண்ட முடையவனவன்.

(19) ஜென்ம லக்கினத்துக்கு ஆறும் பாவாதிபதி சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு ஜலத்தால் கண்ட முண்டாகும்.

(20) ஜென்ம லக்கினத்துக்கு ஆறும் பாவாதிபதி செவ்வாயுடன் கூடியிருந்தால் ஜாதகன் பற்பல ரிண, காயங்களடைவான்.

(21) ஜென்ம லக்கினத்திற்கு ஆறும் பாவாதிபதி குரு, புத, சுக்கிரருடன் கூடியிருந்தால் ஜாதகனுக்கு ஆமம் என்கிற (சீதம் மலச்சிக்கல், மலவரட்சி) நோயாலும், ஸ்திரீ விபத்தாலும் (ரோக) பீடையுண்டாகும்.

(22) ஜென்ம லக்கினத்துக்கு ஆறும் பாவாதிபதி ராகு, கேதுக்களுடன் கூடியிருந்தால் சர்ப்ப பயமும்,

(23) ஜென்ம லக்கினத்துக்கு ஆறும் பாவாதிபதியுடன் சனி கூடியிருந்தால் ஜாதகன் சோரராலும், நீச்சராலும் பயமடைவன்.

(24) ஜென்ம லக்கினத்துக்கு ஆறுவது பாவாதிபதி பாபருடன் கூடி எட்டாம் பாவம், லக்கின பாவம் இவற்றிலிருந்தால் ஜாதகன் ரிண (ரோக) மடைவன்.

(25) இவர்கள் தன் நீச்ச, சத்துரு வர்க்கங்களில் ஆறுவது பாவத்திலிருந்தாலும், பார்த்தாலும் ஜாதகன் :—

(26) சூரியனால் வயிற்று வியாதி, மேக (பைத்திய) ஜ்வரமும்,

(27) சந்திரனால் ஜலோதரம், அதிசாரம், கண்ரோகம், குல்ம முதலியனவும்,

(28) வைசூரி, பாண்டு, துன்மார்க்கம், பூத தோஷம், பயம், தேக ரிணம், குஷ்டம், ஜ்வரம், ரக்தம் வெளிப்படுதல், வேதனை, நடுக்கல், நெருப்பு பயம், மோகம், யுத்தாரம்பம் இவைகளைச் செவ்வாயாலும்,

(29) வாத (பித்த) ஜ்வரம், பாண்டு, தேக புழுக்கமும், மகோதரமும், வாயு தோஷம், ஜலம், சேறு இவற்றால் தோஷமும், ஸ்திரீ தோஷமும் புதனாலும்,

(30) கிருத்திரிமம், வயிற்றிலுள்ளது, பிரமேகஜ்வரம், கழுத்து, இதயம் இவற்றில் ரோகமும், ராஜகோபமும் குருவாலும்,

(31) கக்கலும், குலுக்கலும், தனமும், புஷ்டியான சம்பத்தும், நேத்திர ரோகமும், நித்திரையின்மையும், கபமும், விக்கல் பயமும், கிலேசமும், வயிற்று நோயும், மூலரோகமும், சுக்கிரனாலும்,

(32) நொண்டித் தன்மை அதாவது முடம், வாதம், வெளிதேச வாசம், சுற்றல், மதிமயக்கம், உள் சூடு, அருசி, பயம், தேக தாபம் முதலியவைகளை சனியாலும்,

(33) சர்ப்ப பயம், விஷம், பிரக்ஞையின்மை அதாவது அறிவிழத்தல், சரீரத் தோஷம் இவற்றை ராகுவாலும், இவ்வாறு கிரகங்களின் பலக் குறைவை யறிந்து இலக்கினாதிபதியாலும், ஆறும் பாவாதிபதியாலும் சொல்லவும்.

(34) ஆறும் பாவத்தால் ரோகமும், ருண, ரோகங்களும் அறியவும்.

(35) சந்திரன் லக்கினத்திலும், சூரியன் லக்கினத்துக்கு ஏழாம் பாவத்திலும், பாபர் இரண்டு, பன்னிரண்டு இந்த பாவங்களிலுமிருந்தால் ஜாதகன் வெண்குஷ்ட மடைவன்.

(36) சந்திரன் செவ்வாயாலாவது, சனியாலாவது பார்க்கப் பட்டாலும், கூடியிருந்தாலும் ஜாதகனை குஷ்டரோகியாக்குவார்கள், தனுசிலாவது, சிம்மத்திலாவதிருந்தால் மேற்படி ரோகத்தால் ரிணமுண்டாகும், சிலர் ஐந்தாமிடத்தில் சந்திரனிருந்தால் என எண்ணுகின்றனர்.

(37) மீன, கடக, மகர ராசிகளின் அம்சத்தில் சந்திரன் சனியுடன் எங்காவதிருந்தாலும்,

(38) சனி செவ்வாயுடன் சந்திரன் கூடியிருந்தாலும், சனி, செவ்வாயிவர்களால் பார்க்கப்பட்டாலும்,

(39) ரிஷப, கடக, மகர ராசி திரிகோணங்களை யடைந்து பாபர்களுடன் கூடி யல்லது பாபரால் பார்க்கப்பட்டாலும் அவர்களின் திசை நடுவில் குஷ்டரோகமுண்டாகும்.

(40) சூரியனால் தயையும் உடையவனுவன், நான்காம் பாவத்தில் இருந்தாலும் தன் அம்சத்தில் இருந்தாலும் சூரியன் அப்படியே தயையுடையவனுவன்.

(41) ஒரே ராசியில் சூரியன் ஆறும் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் சோகை யல்லது க்ஷயம் என்னும் நோயடைவான்.

(42) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாவது பாவத்தில் சூரியனிருந்து சந்திரன், சனி செவ்வாயிவர்களின் மத்தியில் இருந்து, குஜ திரிம்சாம்சத்தில் மேற்படி சந்திரன் இருந்தால் ஜாதகன் சுவாசகாச ரோக மடைவான், மேற்படி சந்திரனே சனி திரிம்சாம்சத்தில் இருந்தால் ஜாதகன் க்ஷயரோகமடைவான்.

(43) சிம்ம ராசியில் ஐந்தாம் பாவத்தில் அல்லது புதனுடைய அம்சத்தில் சந்திரனிருந்தால் வயிற்றில் புழுக்களின் தொந்திரவும், மேற்படி ஐந்தாம் பாவத்தில் உள்ள சந்திரன் திரிம்சாம்சத்தில் இருந்தால் ஜாதகன் குல்மம் என்கிற வியாதியும், அவர்களின் திசைக்குள் நடுவில் உண்டாகும்.

(44) மேற்படி சந்திரன் விருச்சிக, கடக அம்சங்களிலிருந்து பாபருடன் கூடியிருந்தால் ஜாதகன் ரகசிய ரோகமடைவான்.

(45) குரூரக் கிரகத்துடன் ஆறும்பாவத்திற்கதிபதியும் கூடி லக்கினத்திலிருந்தாலும் எட்டாம் பாவத்திலிருந்தாலும் ஜாதகன் சரீரங்களில் புண்களுடைய விரணம் உண்டாகும்.

(46) விரண ஸ்தானங்கள் சூரியன் முதலானவர்களுக்கு தலை, கழுத்து, காது, மூக்கு, மறைவிடம் முதலானவைகளாகும். பார்சுவம், *பாண்டு, கண்கள், கால்கள், இதயம், வயிறு முதலியவைகளில் ரோகமுண்டாகும்.

(47) லக்கின பாவாதிபதியும், செவ்வாயும், புதனும் கூடி சுப க்ஷேத்திரத்தில் அல்லது வேறு ஸ்தானங்களிலிருந்தாலும், பார்த்தாலும் பவித்திர, கிரந்தி ரோகமாவது உண்டாகும்.

(48) லக்கின பாவாதிபதி புதன், சந்திரன், ராகு, கேது இவர்களுடன் கூடியிருந்தால் எங்கிருந்தாலும் எந்த எந்த அங்கங்களிலிருக்கிறார்களோ அதனதன் அங்கங்களில் (உருப்புகளில்) வெள்ளைக் குஷ்டம் என்கிற வியாதியுண்டாகும், மேலும்,

(49) லக்கின பாவாதி வேறு கிரகங்கள் மூலம் பார்க்கப்பட்டு வேறு ஸ்தானங்களிலிருந்தாலும், லக்கினத்திலிருந்தாலும் ஜாதகன் குஷ்டரோகமடைவான்.

(50) இவர்களில் செவ்வாயுடன் சந்திரனும், ஆறும் பாவாதிபதியும் கூடியிருந்தால் வெள்ளை குஷ்டமே யுண்டாகும். சனியுடன் கூடியிருந்தால் கருங்குஷ்டமும், சூரியன் மேற்படி கிரகங்களுடன் கூடியிருந்தால் ரக்த குஷ்டமும் உண்டாகும், இந்தக்கிரகங்களால் அங்கங்களைக் கவனித்து அந்த அந்த அங்கங்களில் அந்த அந்த குஷ்டம் வருமென்றறியவும்.

(51) லக்கின பாவாதிபதியும், ஆறும் பாவாதிபதியு மிருந்து, சூரியனும் கூடினால் ஜுரம் உண்டாகும்.

(52) லக்கின பாவாதிபதியும், ஆறும் பாவாதிபதியும் சந்திரனும் கூடியிருந்தால் ஜாதகன் ஜலகண்டமடைவான்.

(53) லக்கின பாவத்தில் செவ்வாயும், ஆறும்பாவாதிபதியும் கூடியிருந்தால் ஜாதகன் கிரந்திரோகமும், யுத்தமும் உடையவன்.

(54) லக்கின பாவத்தில் புதனும், ஆறும் பாவாதிபதியுமிருந்தால் பித்தரோகமுடையவன்.

---

*பாண்டு என்பது மஞ்சட்காமாலை, மட்டிவெள்ளை முதலிய வியாதி.

(55) லக்கின பாவாதிபதியும், ஆறும் பாவாதிபதியுமிருந்தாலும் குருவுடன் கூடியிருந்தால் ஜாதகன் வியாதியில்லாதவனுவான்.

(56) லக்கின பாவாதிபதியும் ஆறும் பாவாதிபதியும், சுக்கிரனும் கூடியிருந்தால் ஜாதகன் மனைவி ஆபத்தும்,

(57) லக்கின பாவாதியும், சனியும், ஆறும்பாவாதியும் கூடியிருந்தால் ஜாதகன் நீச்சனுல் வியாதியும், எனும்பால் வியாதியும் அடைவான்.

(58) லக்கின பாவத்திற்கதிபதியும், ஆறும்பாவாதிபதி ராகு, கேதுக்களுடன் கூடி யிருந்தால் ஜாதகன் சர்ப்ப பயமுடையவன்.

(59) ஜென்ம லக்கினத்திற்கு ஆறுவதுபாவத்தினுல் தாயாதி, சத்துரு, ஆயுத ரிணம் முதலியவைகளை அறியவும்.

(60) அலிக்கிரகமாகிய புதன், ராகுவுடன் கூடி லக்கினபாவாதியுடனும் கூடியிருந்து பத்தாம் பாவாதிபதியுடனும் கூடியிருந்தால் ஜாதகன் தானுக ஆண்குறியை அறுபடச் செய்வான்.

(61) இப்படியிருந்து செவ்வாயுடனும் கூடியிருந்தால் கிரந்தி நோயால் ஆண் குறி நாசமுடையவனுவான்.

(62) ஜென்ம லக்கினத்திற்கு ஆறும் பாவத்தில் ஏழாம்பாவாதிபதியும், சுக்கிரனும் கூடியிருந்தால் ஜாதகன் மனைவி அலிரூபமுடையவளாவள்.

(63) லக்கின பாவாதிபதி சூரியனுடன் கூடி கேந்திரத்திலிருந்தாலும், திரிகோணத்திலிருந்தாலும், பந்துக்களுடையவன், ஒன்பதாம் பாவம் முதலியவற்ருல் தகப்பன் முதலானவர்களுக்கும் யோசித்துச் சொல்லவும்.

(64) எட்டாம் பாவத்தில் சனியும், குரு இரண்டாம் பாவத்திலும், சூரியன் எட்டாம் பாவத்தில் அல்லது பன்னிரண்டாம் பாவத்தில் இருந்தாலும், செவ்வாயும், ராகுவும் எட்டு, பன்னிரண்டு முதலிய பாவங்களில் இருந்தாலும் ஜாதகன் கையறுபடும்.

(65) சனியும், ராகுவும் லக்கினத்திலிருந்து, கன்னியா ராசியில் சுக்கிரனுமிருந்தாலும், சனி அஸ்தமனமா யிருக்கும்போது பிறந்தவன் அறுக்கப்பட்ட கைகளுடையவன். இதற்கே வேறு சிலர் தேய்பிறையில் அஸ்தமன காலத்தில் பிறந்தவனும் கையறுபடுபவன் என்று எண்ணுகின்றனர்.

(66) லக்கின பாவத்தில் சனியின் அம்சத்தில் குருவும், சூரியனுமிருந்து கிருஷ்ண பக்ஷ சந்திரன் புதன், ராகு இவர்களுடன் கூடியிருந்தாலும், அஸ்தமயத்தை யடையும்போது ஜனித்தவன் வயிறு அறுபடும் யோகமுடையவன்.

(67) ஜென்ம லக்கினத்தில் சனியிருந்து சுபரே பார்த்து இருந்து சந்திரன் சர்ப்பக் கிரகங்களான ராகு, கேதுக்களுடனும், சூரியனுடனும் கூடியிருந்தாலும், பார்க்கப்பட்டாலும் யுத்தத்தினல் ஜாதகனுடைய வயிறு அறுபடும், சந்தேகமில்லை.

(68) க்ஷீண சந்திரன், ராகு, கேதுக்களால் பார்க்கப்பட்டாலும், செவ்வாயுடன் கூடியிருந்தால் சிரச்சேதம் செய்யப்படுவான்.

(69) ஜென்ம லக்கினத்தில் சனி இருந்து செவ்வாய் சுயக்ஷேத்திரத்திலிருந்து, சந்திரனும், புதனும், மூன்றும் பாவத்திலிருந்தாலும், ஆறும் பாவத்தில் செவ்வாயிருந்து சனியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் வெகு சத்துருக்களையுடையவனவன், மேலும் இவர்கள் சுபரால் பார்க்கப்பட்டாலும் சத்துரு பயமுடையவனவன்.

(70) ஆறும் பாவத்தில் சூரியன் செவ்வாய் சனி, ராகு, கேது இவர்களால் ஆரோக்கியம், சுகம், நல்ல ரூபம், நிஷ்கபடம், தேஜசு, வெகு ஆயுள் இவைகளை முறையே புத்தியின்மை, மரணம், அதிக நிஷ்டூரம், வெட்கமின்மையும், புதன், குரு, சுக்கிரன் முதலியவர்களுக்குப் பலனக பிருகு, அத்திரி, பராசரர், முதலிய ரிஷிகள் சொல்லியிருக்கின்றனர்.

# 7-வது அத்தியாயம்.

## ஏழாவது பாவம்.

—:(*):—

(1) ஸ்திரீ சேர்க்கை, இஷ்டமான ஸ்திரீ, விரகபோகம், தகப்பன், புகழ், அதிக காமம், நிந்திக்கப்படல் இவைகள் ஏழாம் பாவத்திலுள்ள சூரியனல் ஏற்படும், மேலும் சூரியன் ஏழாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் அதமனவன், தனக்கு இஷ்டமில்லாத மனைவியும் உடையவனவன், மேற்படி சூரியனே பாப நீச்ச ராசிகளிலிருந்து பாபருடன் கூடி யிருந்தாலும், பாபர்களால் பார்க்கப்

பட்டாலும் ஜாதகன் மரணமடைவன், க்ஷீண சந்திரன் அப்போது பன்னிரண்டாம் பாவத்தில் இருந்தால் குறைபாடும், ரோகமும் உடைய மனைவியுடையவன். வேறு சிலர் அங்கக் குறைவும், அழகு இல்லாதவளும், பயந்தவளும், கலக்க முள்ளவளும் மனைவியாவாள் என எண்ணுகின்றனர். சுப க்ஷேத்திரத்தில் ஐந்தாம் பாவத்தில் இருந்தால் நூறு சுகமுடையவனாவன்.

(2) செவ்வாய் ஜன்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்திலிருந்தாலும், இரண்டாம் பாவத்திலிருந்தாலும் ஜாதகனுடைய மனைவி நாசமடைவாள்.

(3) புதன் லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் சூரியனில் அஸ்தமித்திருந்தால் ஜாதகனுடைய மனைவி சபலபுத்தியும், மூர்க்கமும், வஞ்சனையும் உடையவள், மேற்படி புதனே ஏழாம் பாவத்தில் சுபனாகி நல்ல கிரணங்களையுடையவனாகி யிருந்தால் ஜாதகன் மனைவி வம்ச சீலமும், நல்ல ரூபமும், கொண்டாடப்பட்ட தன்மையும், வெகுப் பிரீதி யுடையவளாகவும் ஆவாள். ஜாதகன் இப்படிப் பட்ட அனேக ஸ்திரீகளை யுடையவனாவன்.

(4) சுபவர்க்கத்தில் ரிஷபராசியில் சுபவர்க்கத்தில் புதன் இருந்தால் ஜாதகன் நற்குணமும், பிராக்ஞத்துவமும் உடையவன், முதல் மனைவியை யிழந்து விடுவான்.

(5) ஏழாம் பாவத்தில் குரு வக்கிர மடைந்திருந்தால் ஜாதகன் அரசர்களுக் கிஷ்டமானவன்.

(6) ஏழாம் பாவத்தில் குரு நீச்ச மடைந்திருந்தால் ஜாதகன் மனமறிந்த நல் மனைவியுடையவன் ஆயினும் மனைவி நாசமுடையவன்.

(7) ஏழாம் பாவத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் வேசி ஸ்திரீ ஜன வல்லவனாவன், ரம்மியமான போக சம்பன்னன்.

(8) ஏழாம் பாவம் விருச்சிகமாகி அதில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் மனைவி நாசமுடையவன்.

(9) சனி, செவ்வாய் இவர்கள் சுக்கிர, சந்திரருக்கு ஏழாமிடத்திலிருந்தால் ஜாதகன் மனைவி இல்லாதவனாவன், அல்லது அங்கக் குறைவுடையவளை யுடையவன், அல்லது புத்திர ஹீனனாகவாவது ஆவான்.

(10) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் லக்கினத்திற்கைந்தாம் பாவாதிபதி யிருந்தாலும், எட்டாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்திலிருந்தாலும் ஜாதகன் எப்போதும் (மனைவியின் நாசத்தால்) துக்கப்படுபவன், அல்லது போக மில்லாதவனுவான்.

(11) செவ்வாயின் அம்சத்தில் அல்லது செவ்வாயின் க்ஷேத்திரத்தில் சுக்கிரன் இருந்தாலும், செவ்வாயுடன் கூடி யல்லது செவ்வாயால் பார்க்கப்பட்டாவது இருந்தால் ஜாதகன் பரஸ்திரீ போகத்தில் ஆசை யுடையவனுவன், போகத்தை யடைவன்.

(12) சனியுடன் கூடி சனியின் அம்சத்தில் சுக்கிரனிருந்தாலும், சனியின் க்ஷேத்திரத்தில் இருந்தாலும், நீச்சாம்சத்தில் பாபருடன் கூடியிருந்தாலும், நீச்ச ஸ்திரீயின் போகத்தை யடைவான்.

(13) ஏழாம் பாவத்தில் இருந்தாலும் சுக்கிரனுடைய வர்க்கத்திலிருந்தாலும், செவ்வாயுடன் அல்லது சனியுடன் கூடியிருந்தாலும் சந்திரனுடன் கூடியிருந்தால் பர ஸ்திரீபோக மடைவான்.

(14) செவ்வாய், சந்திரன், சனியிவர் கூடியிருந்து ஒருவருக்கொருவர் வர்க்கங்களில் இருந்து, வலிவுள்ள சுபரால் பார்க்கப்படாமலிருந்தால் எப்போதும் பிறர் மனைவியையே புணர்வான்.

(15) சந்திரன், சனி, செவ்வாய் இவர்கள் ஒரு ராசியில் கூடியிருந்தால் ஜாதகன் ஐஸ்வரியமும், சக்தியுமுடையவன், ஜாரன், ஜாதகன் மனைவியும் விபசாரம் செய்பவளாவாள்.

(16) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் சனி செவ்வாயின் வர்க்கங்களில் சுக்கிரனிருந்தாலும், அவர்களுடைய பார்வையை யடைந்தாலும் புருஷனுடன் சமமாக ஜாதகன் மனைவி விபசாரம் செல்வாள், ஜாதகன் பர ஸ்திரீ சேர்க்கையுடன், புருஷ மைதுனமும் செய்பவன்.

(17) ஏழாம் பாவத்தில் சுக்கிரன், சனி செவ்வாயிவர்களின் அம்சத்தில் இருந்தாலும், சனி, செவ்வாயிவர்களுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் மனைவி வேசியாகவாவது, ஜாரிணீயாகவாவது சந்தேக மின்றியாவள்.

(18) ஜென்ம லக்கினம் ரிஷபமாகி கன்னியா நவாம்சத்தில் ரிஷப, மீன, கடக, விருச்சிக, ராசிகளில் சனி யிருந்தாலும், ஜென்ம

லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் சுக்கிரன் கடைசி நவாம்சத்தில் இருந்தாலும் ஜாதகன் மலடியின் கணவனாவன்.

(19) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் சனி யிருந்தால் ஜாதகன் காலங் கடந்து ஸ்திரீ நாசமுடையவன், காமியாகி சகலத்தையும் நாசத்தை யடையச் செய்வன், குரு உச்சத்தில் இருந்தாலும் அப்போது ஜாதகன் மனைவியாக ஹீந அங்கமுடையவனையாவது, ஒரு தரம் விவாக மடைந்தவளையாவது, அல்லது ஒருவனுக்குக் கொடுப்பதாக நிச்சயித்து முடிவு செய்து சகல சித்தமும் செய்த பின்பு முடிவில் விவாகம் தடைப்பட்டவளை யாவது ஜாதகன் மணப்பான்.

(20) ஏழாம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகன் மனைவி நாசமுடையவன்.

(21) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் ராகு இருந்து பாபருடன் கூடியிருந்தாலும், பாபரால் பார்க்கப்பட்டாலும் குரூரச் செய்கையுடைய மனைவியுடையவன், சண்டாள மனமுடையவர்களாவார்கள், ஒரு நிலையில்லா மனமுடையவர்கள்.

(22) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் சூரியனும் ராகுவும் கூடியிருந்தால் ஸ்திரீ சங்கமத்தால் சகல சொத்தையும் இழந்து விடுவான்.

(23) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் சந்திர சூரியர் கூடியிருந்தால் ஜாதகன் புத்திர, மித்திர, களத்திர, தன ஹீனனாவன்.

(24) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் செவ்வாயும் சூரியனும் கூடியிருந்தால் ஜாதகன் வெளி தேசத்தில் வாசமுடையவன்.

(25) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் புதனும் சூரியனும் கூடியிருந்தால் ஜாதகன் காரியத் தடையுடையவன், நம்பிக்கையைக் கெடுப்பவன்.

(26) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் சனியும் சூரியனும் கூடியிருந்தால் ஜாதகன் பிதுரு துவேஷ முடையவன்.

(27) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் சூரியன் சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் மனைவியிடம் துவேஷ முடையவன், தன மில்லாதவனாவன், பெரிய சரீர முடையவன்.

(28) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் சூரியன் சனியுடன் கூடியிருந்தால் ஜாதகன் மனைவி நாசமும், அரசசேவையும், எப்போதும் சோம்பலும் உடையவனாவன்.

(29) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் சந்திரனும் செவ்வாயும் கூடியிருந்தால் ஜாதகன் க்ஷுத்திர முதலிய தேவதை உபாசனையுடையவன்.

(30) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் சந்திரனும் புதனும் கூடியிருந்தால் ஜாதகன் சூரனும், கவியும், பிரபுவும் ஆவான்.

(31) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் குருவும் சந்திரனுமிருந்தால் ஜாதகன் அரசனாகவும் அல்லது நல்ல பூமி முதலியன உடைய குடும்பியானவனாகவும், ஞானியாகவும், ஞானமுடையவனாகவும், அல்லது கற்பனைகள் செய்யும் சக்தி மிகுந்தவனாகவாவது ஆவான்.

(32) ஜென்ம லக்கினத்திற் கேழாவது பாவத்தில் சுக்கிரனும் சந்திரனும் கூடியிருந்தால் ஜாதகன் புத்திரர் அதிகமும், அதிக தனமும், அதிக அழகுள்ள நிறைந்த ஸ்திரீயுமுடையவன்.

(33) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் சனி, சந்திரர் கூடியிருந்தால் ஜாதகன் மனைவி, புத்திரன் முதலிய இல்லாதவன், அதிக கிராமம், பட்டிணமிவை யுடையவன்.

(34) ஜென்ம லக்கினத்திற் கேழாம் பாவத்தில் செவ்வாயும், புதனும் கூடியிருந்தால் ஜாதகன் ஆயுதம், அஸ்திரம், சேனை முதலியவைகளால் பீடையும், சுகமில்லாதவனும், கெட்ட செய்கையுடையவனுமாவான்.

(35) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் செவ்வாயும் குருவும் கூடியிருந்தால் ஜாதகன் அரசனாவான், வித்துவானாவன்.

(36) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் செவ்வாயும் சுக்கிரனுமிருந்தால் ஜாதகன் ஸ்திரீயால் உண்டு பண்ணப்பட்ட பொருளடைவான்.

(37) சனியுடன் சேர்ந்து செவ்வாய் ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம்பாவத்தில் இருந்தால் ஜாதகன் சம்பத்தில்லாதவன், தனமேயில்லாதவன், ஸ்திரீதோஷமுடையவன், அசுசியுடையவன்.

(38) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் குரு இருந்து செவ்வாயுடன் கூடியிருந்தால் ஜாதகன் நன் மனைவி யுடையவன், வெகு சத்துருக்களுடையவன், குலத்துக்கதிபதி யாவன்.

(39) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் செவ்வாய் சுக்கிரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் வெகு பலமுடையவன், ஸ்ரீமான், போக புத்தியும், போக சேஷ்டையு முடையவன்.

(40) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் சனி, புதனுடன் கூடியிருந்தால் ஜாதகன் மனைவியுடன் ஊமையாயிருப் பான், அதாவது ஜாதகன் மனைவி இருவரும் ஊமையாயிருப் பார்கள்.

(41) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் குருவும் சுக்கிரனும் கூடியிருந்தால் ஜாதகன் எப்போதும் ஸ்திரீயும், தன மும் உடைய பிரபு ஆவன், பல்லக்கு முதலான போகங்களுடை யவன், ரத்தினம் நற்புகழ் முதலியன உடையவனுவான்.

(42) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் கன்னியா ராசியில் குரு இருந்து, சந்திரனுவது ஏழாம் பாவத்திலிருந்தாலும் ஜாதகன் மனைவி ரூப முடையளாயிருப்பள், சகோதரிகள் அதிக முடையவள்.

(43) ஏழாம் பாவத்தில் பாபரிருந்தால் ஜாதகன் மனைவி நாச மடைவாள், அல்லது ஜாதகன் மனைவி குறையுடையவளா யிருப்பாள்.

(44) ஏழாம் பாவத்தில் சுய க்ஷேத்திரத்தில் அல்லது தன் உச்ச ராசியில் குரூரக்கிரக மிருந்தால் ஜாதகன் மனைவியை யிழந்து விடுவான்.

(45) ஏழாம் பாவாதிபதி ஏழாம் பாவத்தில் இருந்தால் தீர்க்காயுளும், சகோதர வாத்சல்லியமும் அடைவன், நிர்மல மானவன், தேஜசுடையவன், சுய ஜனங்களுடன் கூடியிருப்பவன்.

(46) குருவுடன் கூடி ஏழாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத் தில் இருந்தாலும், வேறு சுபருடன் கூடியிருந்தாலும் நல் மனைவி வாய்ப்பாள், தனலாப முண்டாகும், யாத்திரை லாப முடையவன்.

(47) சந்திரன், புதன், குரு, சுக்கிரன் இவர்களின் வர்க்கத் தில் ஏழாம் பாவத்திற்கதிபதி யிருந்தாலும், இவர்களுடன் கூடி

யிருந்தாலும், இவர்களால் பார்க்கப்பட்டாலும், இவர்களில் ஒரு வருடன் கூடி ஏழாம் பாவத்திலிருந்தாலும், ஏழாம் பாவத்தில் இவர்களில் எந்தக் கிரகங்களுடன் கூடி யிருக்கிருனே, அந்த அம் சத்தில் அந்த பாவாதிபதியுடன் கூடியிருந்தாலும்,

(48) ஏழாம் பாவாதிபதி கேந்திரத்தில் இருந்து சுபருடன் கூடியிருந்தாலும், சுபராலும் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் இரு மனைவியரை யடையும் யோக மடைவன், ஜாதகன் தீர்க்காயுளு முடையவனுவன்.

(49) ஏழாம் பாவத்தில் சப்தமாதிபதி யிருந்து அலிக்கிரகத் தின் நவாம்சத்திலிருந்தாலும், சப்தமாதிபதி ராசியில் அலிக்கிரகத் தின் ராசியில் இல்லாதிருந்தாலும் இரு மனைவியருடைய யோக முடைவனுவன்.

(50) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவாதி பாபர் பார் வையற்றிருந்தால் அனேக குணங்களாலும், உச்சம் முதலான கார ணங்களாலும், ஜாதகன் அனேக மனைவிகளை யடைவான்.

(51) ஜென்ம லக்கின பாவாதிபதி ஏழாம் பாவத்திலும், ஏழாம் பாவாதிபதி லக்கின பாவத்திலுமிருந்தாலும், இவர்களில் ஒருவருடன் புதன் கூடியிருந்தாலும் ஜாதகன் மதன கோபால யோகம் என்னும் யோகமடைவான்.

(52) ஜென்ம லக்கினத்திற் கேழாம் பாவத்தில் சுக்கிரன் தன் உச்சத்திலிருந்து அந்த பாவாதிபதியான ஏழாம் பாவாதி பதியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் மேற்படி மதன கோபால யோகத்தை அடைவன், இந்த இரண்டு விதமான (மதன கோபல யோகத்தில் பிறந்தவன் நூறு ஸ்திரீகளிடம் சம்போகம் செய்வான்.

(53) மேற்படி சுக்கிரன் இருக்கும் அம்சத்திற்குச் சமமான ஸ்திரீ சர்வ ரூப குணங்களுடையவளை யடைவன்.

(54) ஒன்பதாம் பாவாதிபதி யிருக்கும் அம்சாதிபதிக் குரிய சமமான, அல்லது ஏழாம் பவாதிபதியிருக்கும் அம்சாதிபதிக் குரிய குணத்துடனிருப்பவளையாவது ஜாதகன் மனைவியாயடை வன், இவர்களில் பல முடையக் கிரகத்தின் குணங்களை ஜாதகன் மனைவி யுடையவள்.

(55) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவாதி நீச்ச வர்க்க கத்தில் இருந்தால் ஜாதகன் நீச்ச வர்க்கத்துப் பெண்ணை விவாகம் செய்வான், ஏழாம் பாவாதிபதிக்குறிய திக்கில் அல்லது சுக்கி ரன் ஏழாம் பாவாதிபதியாயின் அவர் இருக்கும் திக்கிலாவது ஜாத கனுக்கு மனைவி வாய்ப்பாள், இதிலும் கிரக வலுவை யரிந்து கொள்ளவும்.

(56) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவாதிபதி யிருக்கிற ராசியானது ஜாதகன் மனைவியின் ஜன்ம ராசியாகும், வேறு சிலர் ஜன்ம லக்கினம் ஜன்ம ராசி இவைகள் ஒன்பதாம் பாவாதிபதி யால் மேற்சொல்லியபடி நேரிடும் என்று எண்ணுகின்றனர். இதில் சொல்லப்படாத ராசிகளும், லக்கினங்களும், லக்கினம் ராசி இவைகளாக ஆனால் ஜாதகனுக்கு சந்ததி நிலைக்காது, இவை கள் ஜென்ம லக்கினத்திற்கு ஐந்தாம் பாவமாகவரின் புத்திரரு டன் கூடியிருப்பான். அவர்களின் உறவு முதலியவைகளையும் இவ்வாறே யறியவும்.

(57) ஜென்ம லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் பாவத்தில் சந்திரனிருந்து ஆறும் பாவத்தில் சூரியனிருந்தால் கௌணயோகம் என்கிற யோகம் உண்டாகும். மேற்படி யோகத்தில் பிறந்தவன் தாழ்ந்தவனாகவும், யோகக் குறைவுடையவனாகவும், காமியாகவும் ஆவான்.

(58) ஜென்ம லக்கினத்திற்கு ஐந்து, ஒன்பது, ஏழு இந்த பாவங்களில் சூரியனும் சுக்கிரனு மிருந்தால் அந்த ஜாதகன் மனைவி தப்பாமல் ஏதாவது ஒரு அவயவ மில்லாதவளாவள்.

(59) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் ஸ்திரீ புருஷக் கிரகங்கள் இருவரும் இருந்தாலும், சனியும் செவ்வா யும் இருந்தாலும் யெவராவது ஒரு சுபர் சுபர்களில் ஒருவ ரால் பார்க்கப் பட்டாலும் வயோதிக வயதில் சர்வ பூமிக்கும் (யஜமானனவன்) அரசனவன்.

(60) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டு பன்னிரண்டு நான்கு ஏழு, எட்டு இந்த பாவங்களில் செவ்வா யிருந்தால் புருஷ ஜாத கமானால் மனைவி நாசமும்; ஸ்திரீ ஜாதகமானால் புருஷ நாசமும் ஏற்படும் என்று எண்ணப்படுகிறது.

(61) ஜென்ம லக்கினம் கன்னியாகி அதில் சூரியனிருந்து ஏழாம் பாவத்தில் சனி யிருந்தால் ஜாதகன் மனைவி நாச மடை

வாள், இப்படி யிருந்தாலும் சுக்கிரன் சுபரால் பார்க்கப்பட்டால் ஜாதகன் மனைவி ஜாதகனுக்குப் பின்பு மரணமடைவாள்.

(62) நான்கு எட்டு இந்த பாவங்களில் சுக்கிரனிருந்து சனி செவ்வாய் சூரியன் இவர்களுக்கு மத்தியில் இருந்தால் ஜாதகன் மனைவி நெருப்பினால் மரிப்பாள்.

(63) மேற்படி சுக்கிரன் செவ்வாய் சூரியன் சனி இம்மூவரில் இரண்டு பாபர்களின் மத்தியில் இருந்தால் ஜாதகன் மனைவி உயரத்திலிருந்து விழுவதால் மரணமடைவாள்.

(64) மேற்படி சுக்கிரனே ஓரே ராசியில் நான்காம் பாவம் அல்லது எட்டாம் பாவத்தில் இரண்டு பாபர்களின் நடுவில் அதாவது மேற்சொல்லிய சனி செவ்வாய் சூரியன் இம்மூவர்களில் இருவர்கள் எவர்களாயினும் இருந்து அவ்விருவருக்கும் நடுவில் சுக்கிரன் இருந்தால் ஜாதகன் மனைவி கிணற்றில் விழுவதால் மரண மடைவாள்.

(65) சுக்கிரன் சுபருடன் கூடி யிருந்து குரூரரால் பார்க்கப்பட்டிருந்தாலும், சுபரால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் சந்ததியில்லாதவனாவன்.

(66) தம்பதிகளினுடைய ஜன்ம நக்ஷத்திரங்களை எண்ணி ஏழால் பெருக்கி, இருபத்தேழால் வகுத்தால் யாருடைய நக்ஷத்திரம் எண்ணிக்கை குறைவா யிருக்கிறதோ அவர்களின் மரணத்தை முதலில் சொல்லவும்.

(67) இரண்டு, ஏழு இந்த பாவங்களில் சுக்கிரனிருந்து எத்தனை பாவர்களுடன் கூடி யல்லது பார்க்கப்பட்டிருக்கிறாரோ அத்தனை ஜாதகனுடைய மனைவிகள் மரித்து விடுவார்கள்.

(68) எப்போதும் யாத்திரை, புத்திரன், மனைவி ஆகியவைகளை ஏழாவது பாவத்தால் சொல்லவும்.

(69) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாவது பாவத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் அதிக காமியாவன்.

(70) மேற்படி சுக்கிரனே மித்திர ராசி, சத்துரு ராசி, இவைகளில் இருந்தாலும், லக்கினத்தில் பாவருடன் கூடியிருந்தாலும் ஜாதகன் விபசார தோஷ முடையவன்.

(71) முக்கிய ஸ்தானத்தில் அதாவது லக்கின பாவத்தில் பாபருடன் கூடி ஏழாம் பாவாதிபதி யிருந்தால் ஜாதகன் விபசார மடைவன்.

(72) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாவது பாவாதிபதி ராகு, கேதுக்களுடன் கூடி யிருந்தால் ஜாதகன் விபசாரம் செய்வன்.

(73) தேய்ப்பிறைச் சந்திரன் பாபருடன் கூடி ஏழாம் பாவத்திலு மிருந்தால் ஜாதகன் கெட்ட செய்கை யுடையவன்.

(74) தேய்ப்பிறைச் சந்திரனுடன் சுக்கிரன் ஏழாம் பாவத்தில் இருந்து மேற்படி சுக்கிரன் நீச்ச மூடங்களை அடைந்திருந்தால் ஜலத்தில் ஜாதகன் மனைவி மரிப்பாள்.

(75) பாபர்கள் ஏழாவது பாவத்தில் நல்ல கிரணங்களுடன் கூடி யிருந்தால் ஜாதகன் மனைவி அசுப மடைவள்.

(76) சூரியன் சந்திரனுடன் கூடி ஏழாம் பாவத்தில் இருந்தால் மலடியாயிருப்பவளை மனைவியா யடைவன்.

(77) சூரியன், தேய்ப்பிறைச் சந்திரனைக் கூடி ஏழாவது பாவத்திலிருந்தால் ஜாதகன் மனைவி விபசாரம் செய்வள்.

(78) செவ்வாயும் க்ஷீண சந்திரனுடன் கூடியிருந்தால், ஏழாம் பாவத்தில் சனி இவ்வாறு கூடி யிருந்தாலும் ஜாதகன் மனைவி மரண மடைவள்.

(79) ராகுவுடன் க்ஷீண சந்திரன் கூடி ஏழாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் மனைவி அபகீர்த்தி யடைவள், கெட்ட ஒழுக்க மடைவள், ஜாதகன் பரஸ்திரீகளிடம் கூடி ரமிப்பான், நிஷேகமின்றி சந்ததி யடைவள்.

(80) ஏழாம் பாவத்தில் தாமன் தேப்பிறை சந்திரனுடன் கூடி யிருந்தால் ஜாதகன் விவாகம் அடையமாட்டான், மரண மடைவான்.

(81) ஏழாம் பாவத்தில் க்ஷீண சந்திரனிருந்து பரிவேடத்துடன் கூடி யிருந்தால் ஜாதகன் மனைவி கெட்ட ஒழுக்க முடையவள்.

(82) ஏழாம் பாவத்தில் கேது க்ஷீண சந்திரனுடன் கூடி யிருந்தால் ஜாதகன் மனைவி மத்திய வயதில் குடிப்பவளாவள்,

துச்சரிதை யுடையவள், கெட்ட ஒழுக்கங்களனைத்து முடையவளாவள், புருஷனுக்கு ஒவ்வாதவளாவள்.

(83) ஏழாம் பாவத்தில் காலனிருந்தாலும், விதி பாதனிருந்தாலும் மேற்சொல்லியபடி க்ஷீண சந்திரனுடன் கூடியிருந்தாலும் ஜாதகன் மனைவி கர்ப்ப நஷ்ட மடைவாள், இவளும் துச்சரீரத்தையே யுடையவள்.

(84) மேற்படி சந்திரன் சம்பூர்ண பலமுடையவனாகி வளர்பிறைச் சந்திரனானால் புத்திரிகளைப் பெறுபவள்.

(85) புதன் ஏழாம் பாவத்தில் பூர்ண சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் நல்ல புத்திரருடையவன்,

(86) குரு ஏழாம் பாவத்தில் பூர்ண சந்திரனுடன் கூடியிருந்தால் நல்ல வம்சத்திலுதித்த மனைவியை ஜன சமூகமுடைவளும், பரி ஜனங்களுடையவளும், சத்புத்திரர்களை யுடையவளுமானவளை யுடையவனவன்.

(87) சுக்கிரன் ஏழாம் பாவத்தில் பூர்ண சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் மனைவி அழகும், சம்பத்தும், புத்திரிகளுமுடையவளாவள்.

(88) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தை சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது இவர்களடைந்திருந்தால் ஜாதகன் கோபம், சண்டாளத்துவம், தகப்பன் நாசம், மரணத்தை யுண்டாக்கல் இவைகள் மேற்சொல்லியவர்கள் வரிசையாயிருக்கிறபடியே பலனையும் கொடுப்பார்கள்.

(89) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாவது பாவத்தில் வரிசையாக சுக்கிரன், குரு, சந்திரன், புதன் இவர்கள் இருந்தால் தியாகம், கவி, வீரியம், பந்துக்களுக்கு உபகாரம் செய்வது, அதிக புத்திரர் முதலியவைகளை இவர்கள் வரிசையுள்ளபடி தருவார்கள்.

(90) சுக்கிரன் சர ராசிகளில் இருந்து குரு ஏழாம் பாவத்திலிருந்து லக்கின பாவாதிபதி பலமுடையவனாயிருந்தால் ஜாதகன் நன் மனைவி யுடையவன்.

(91) சுக்கிரன் லக்கினத்திற்கு ஷஷ்டாஷ்டம விரய ஸ்தானங்களிலிருந்து ஏழாம் பாவாதிபதி துர்ப்பெலமுடையவனா யிருந்தாலும், ஏழாம் பாவாதிபதி துர்ப் பலமுடையவனா யிருந்தாலும்,

(92) ஏழாம் பாவாதிபதி துர்ப்பலனாயிருந்து சுக்கிரனும் நீச்ச ராசியில் இருந்தால் ஜாதகன் மனைவி நாசமுடையவனாவன்.

(93) ஏழாம் பாவாதிபதி நீச்ச மடைந்து சர நவாம்சத்தி லிருந்தாலும், பாபராசியி லிருந்தாலும், அனேக பாபருடன் கூடி யிருந்தாலும், அலிக்கிரகம் ஏழாவது பாவத்திலிருந்து (ஷ பாபர்கள் உதய நவாம்சத்தில்) இருந்தாலும் ஜாதகன் இருதார யோகமடைவான்.

(94) சுக்கிரன் உபய ராசிகளிலிருந்து சூரியன் அந்த சுக்கிரன் நின்ற ராசினாதனுடன் கூடி யிருந்தாலும், ஏழாம் பாவாதிபதி பலிஷ்டனாகி யிருந்தால் ஜாதகன் அனேகதார முடையவன்.

(95) ஏழாம் பாவாதிபதி சுப ராசியிலிருந்து சுக்கிரன் உச்ச சொட்க்ஷேத்தி ரங்களிலிருந்தாலும், ஐந்து ஒன்பதாமிடங்க ளிலிருந்தாலும் விவாகம் கிரமமாக நடக்கும்.

(96) ஏழாம் பாவத்தில் சூரியன் இருந்து ஏழாம் பாவாதி பதி, சுக்கிரனுடன் கூடி யிருந்தால் ஏழு அல்லது பதினோரா வது வயதில் ஜாதகன் விவாக மடைவான்.

(97) இரண்டாம் பாவத்தில் சுக்கிரனிருந்து ஏழாம் பாவாதி பதி பதினோராம் பாவத்திலிருந்தால் பத்து அல்லது பதினொ ராவது வயதில் ஜாதகன் விவாக மடைவான்.

(98) ஜென்ம லக்கின கேந்திரத்தில் சுக்கிரனிருந்து லக்கின பாவாதிபதி ஏழாம் பாவத்தில் இருந்தால் பதினோராவது வயதில் விவாகம் நடக்கும்.

(99) லக்கினம் தவிர்த்த கேந்திரங்களில் சுக்கிரனிருந்து சுக்கிரனுக்கு ஏழாமிடத்தில் சந்திரனிருந்தால் பன்னிரண்டு அல் லது பத்தொன்பதாம் வயதில் விவாகம் நடக்கும்.

(100) சந்திரனுக்கு ஏழாமிடத்தில் சுக்கிரனும், சுக்கி ரனுக் கேழாமிடத்தில் சனியும் இருந்தால் ஜாதகனுடைய பதி னெட்டாம் வயதில் விவாகம் நடக்கும்.

(101) லக்கின பாவாதிபதியும், ஏழாம் பாவாதிபதியும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் ஸ்தானம் மாறியிருந்தால் பதி னான்கல்லது பத்தொன்பதாம் வயதில் விவாகமடைவன்.

(102) ஏழாம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலிருந்து லக்கின பாவாதிபதி பத்தாம் பாவத்திலிருந்தால் பதினைந்து வயது ஆனதும் வெகுவாக விவாக மடைவான்.

(103) இரண்டாம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலும், ஏழாம் பாவாதிபதி இரண்டாம் பாவத்திலும் இருந்தால் ஜாதகன் பதிமூன்றுவது வயதடைந்து விவாகமடைவன்.

(104) எட்டாம் பாவத்திற்கு ஏழாமிடத்தில் சுக்கிரன் அதாவது ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் இருந்து, அந்த பாவாதிபதி செவ்வாயுடன் கூடி யிருந்தால் இருபத்திரண்டல்லது இருபத்தேழாம் வயதில் விவாகம் அடைவன்.

(105) ஜென்ம லக்கினம் (அந்த லக்கினத்திற்கு) ஏழாவது நவாம்சத்தில் உதையமாகி அப்போது ஏழாம் பாவாதி பன்னிரண்டாவது பாவத்தில் இருந்தால் இருபத்து மூன்று அல்லது இருபத்தாறு இந்த வயதில் ஜாதகன் விவாகமடைவன்.

(106) ஜென்ம லக்கினத்தின் எட்டாவது நவாம்சத்தில் ஏழாம் பாவாதிபதி யிருந்து, ஜன்ம லக்கினத்தின் உதைய நவாம்ச ராசியில் சுக்கிரனிருந்தால் இருபத்து மூன்றல்லது இருபத்தைந்தாம் வயதில் விவாக மடைவான்.

(107) ஒன்பதாம் பாவத்திற்கு ஒன்பதாம் பாவமாகிய ஐந்தாம் பாவத்தில் சுக்கிரனிருந்து, மேற்படி சுக்கிரனுக் கேழில் ஏழாம் பாவாதிபதி யிருந்தால் முப்பது அல்லது அதற்கு முந்தி இருபத்தேழிலேயே விவாகமடைவன்.

(108) ஒன்பதாம் பாவத்திற்கு ஒன்பதாம் பாவத்தில் அதாவது லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்திலிருந்து அதற்குப் பன்னிரண்டில் ராகு இருந்தால் முப்பத்தொன்றல்லது முப்பத்திஞன்காவது வயதில் விவாக மடைவன்.

(109) ஏழாம் பாவாதிபதி நீச்ச ராசியிலிருந்து சுக்கிரன் ஆறு எட்டு முதலிய பாவங்களில் இருந்தால் பதினெட்டு அல்லது முப்பத்து மூன்றும் வயதில் ஜாதகன் மனைவி மரணமடைவள்.

(110) ஏழாம் பாவாதிபதி எட்டாம் பாவத்திலும், பன்னிரண்டாம் பாவாதிபதி ஏழாம் பாவத்திலு மிருந்தால் ஜாதகன் பத்தொன்பதாம் வயதில் மனைவியை இழப்பான்.

(111) இரண்டாம் பாவத்தில் ராகு இருந்து ஏழாம் பாவத்தில் செவ்வா யிருந்தால் ஜாதகனுக்கு விவாகமான மூன்றும் வருஷத்தில் பாம்பு கடித்து மனைவி மரிப்பாள்.

(112) லக்கினாதிபதியின் ஸ்புடத்தை வைத்து தன்னுடைய ஜன்ம நக்ஷத்திரத்திற்கு ஏழாவது நக்ஷத்திரம் வரை எண்ணி அந்த நட்சத்திராதிபதியின் ஸ்புடத்தையும் சேர்த்துக் கூட்டி ராசி மண்டலமாகிய பன்னிரண்டினால் வகுத்து மீதியாக வரும் ராசி வரை எண்ணி அந்த ராசி திரிகோணத்தை குரு கோச்சாரத்தில் அடையும்போது, அதே வருஷத்தில் விவாக மடைவன். இதில் சந்தேகமில்லை என்று முன்னோர்கள் கூறுகிறார்கள்.

(113) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் இருக்கப்பட்ட, அல்லது ஏழாம் பாவத்தை பார்க்கப்பட்ட, அல்லது ஏழாம் பாவாதி இவர்களின் திசை வரும்போது எப்போது லக்கின பாவாதி ஏழாம் பாவத்தை கோச்சாரத்தில் அடைகிறானோ அப்போது ஜாதகனுக்கு விவாகம் நடக்கும்.

(114) ஜென்ம லக்கினாதி யிருக்கும் நவாம்ச க்ஷேத்திரத்தை குரு, சந்திரன், சுக்கிரன் இவர்கள் கோச்சாரத்தில் எப்போது அடைகிறார்களோ அப்போது ஜாதகனுக்கு விவாகம் நடக்கும்.

(115) குடும்ப பாவாதிபதியாகிய இரண்டாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் இருந்து, களத்திர பாவாதிபதியும் சுய க்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் ஓரே தார மடைவன். இவர்களுடன் கூடி யிருக்கப்பட்ட சுபர்களால் மனைவிகளின் எண்ணிக்கையை சொல்லவும்.

(116) சுக்கிரன் பாபருடன் கூடியிருந்து நீச்சக் கிரகத்தினால் பார்க்கப்பட்டாலும், இரண்டு பாபரால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் இருமனைவியருடையவன்.

(117) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் வெகு பாபரிருந்தாலும், ஏழாம் பாவத்தில் இப்படியே வெகு பாபரிருந்தாலும், ஏழாம் பாவாதிபதியும் சுக்கிரனும் பாபரால் பார்க்கப்பட்டால் அப்போது மூன்று தாரமடைவான்.

(118) ஜன்ம லக்கின பாவாதிபதிக்குப் பத்தில் உச்சக் கிரகம் புதனாகியிருந்தாலும், ஏழாம் பாவாதி மூன்றும் பாவத்தில் சந்திர

னுடன் கூடியிருந்தாலும் வெகு தாரமுண்டாகும் யோக முடையவன்.

(119) ஜன்ம லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் பாவாதிபதி இரண்டாம் பாவாதிபதி யிவர்கள் மூன்றும் பாவத்திலிருந்து இவர்கள் குருவால் பார்க்கப்பட்டாலும், ஒன்பதாம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டாலும் வெகு ஸ்திரீகளுடையவனுவான்.

(120) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவாதிபதி தன்னுச்சராசியில் அல்லது கேந்திர கோணத்தில் பத்தாம் பாவாதிபதியுடன் கூடியிருந்தாலும் வெகு ஸ்திரீகளுடையவனுவன்.

(121) ஒன்பதாம் பாவாதிபதி ஏழாம் பாவத்தில் இருந்து ஏழாம் பாவாதிபதி நான்கு பதினொன்றுக்குடைய பாவாதிபதிகளால் பார்க்கப்பட்டாலும் வெகு ஸ்திரீகளுடையவன்.

(122) இரண்டாம் பாவம் அல்லது ஏழாம் பாவம் இவைகளை பார்த்துக்கொண்டு மூன்றுக் கிரகங்கள் கேந்திர திரிகோணங்களை யடைந்திருந்தாலும், ஏழு, இரண்டு இந்த பாவநாதர்களைச் சேர்ந்திருக்கும் கிரக எண்கள் எத்தனையோ அத்தனை ஸ்திரீகளை ஜாதகன் அடைவான்.

(123) ஏழாம் பாவாதிபதி சூரியன், புதன், சுக்கிரன், குரு யிவர்களுடன் கூடியிருந்தாலும், ஏழாம் பாவத்தில் குருவாவது சந்திரனுவது இருந்தால் ஜாதகன் மனைவி பதிவிரதையாவாள்.

(124) ஏழாம் பாவாதி கேந்திரத்தில் சுபாம்சத்தில் இருந்து சுப உச்சக் கிரகத்துடன் கூடியிருந்தாலும், சுபஉச்ச கிரகத்தால் பார்க்கப்பட்டாலும், பாபவீக்ஷணம் அடையாதிருந்தால் அவனுடைய மனைவியும் பதிவிரதையாவள்.

(125) ஒன்பதாம் பாவாதிபதியும், ஏழாம் பாவாதிபதியும் சூரியன் முதலான பாபருடன் வெகு பாபருடன் கூடியிருந்தாலும் பார்க்கப்பட்டிருந்தாலும் அந்த ஜாதகன் மனைவி விபசாரியாவள்.

(126) ஏழாம் பாவாதிபதியாகிய புதன் பாபருடன் கூடி நீச்ச சத்துருக்கிரகங்களுடனும் கூடியிருந்தாலும், ஆறு எட்டுப் பன்னிரண்டாமிடங்களிலிருந்தாலும், பாபர்மத்தியிலிருந்தாலும் அந்த ஜாதகன் மனைவி கணவனைக் கொல்பவள், குலத்தையும் மழிப்பாள், கணவன் சொல்லை கெடுப்பவள், துஷ்டையாவள்.

(127) ஏழாம் பாவாதிபதி உச்சனுகி ராகு கேதுக்களுடன் கூடியிருந்து குளிகனுடன் கூடியிருந்தாலும், குளிகனுல் பார்க்கப் பட்டாலும் ஜாதகன் மனேவி விஷத்தைக் கொடுப்பதன்மூலம் கண வனைக் கொல்லுவாள், துஷ்ட சரிதையுடையவள்.

(128) லக்கினுதிபதியும் ஏழாம் பாவாதிபதியும் கூடியிருந் தால் பாலியத்தில் விவாகம் நடக்கும்.

(129) உச்சக் கிரகம் லக்கினத்தில் அல்லது இரண்டாம் பாவத்தில் இருந்தாலும், ஏழாம் பாவத்தில் இருந்தாலும், உச்சக் கிரகத்தில் சுக்கிரன், குரு, பூர்ண சந்திரனிவர்கள் இருந்தாலும், பாபரால் பார்க்கப்படாமலிருந்தாலும், அந்தப் பாவாதிபதியாவது மிக்க சுபராலுைம் பாலியத்தில் விவாகம் நடக்கும்.

(130) இரண்டாம் பாவாதிபதியும் பத்தாம் பாவாதிபதியும் சுக்கிரனும், உச்ச, மித்திர, சுய க்ஷேத்திர, கேந்திர, திரிகோணங் களில் இருந்தாலும்,

• (131) ஏழாம் பாவத்திற்கும் இரண்டாம் பாவத்திற்கும் சுபர், பாபர் இவர்களின் பார்வையில்லாதிருந்தாலும், சுக்கிரன் அல்லது ஏழாம் பாவாதிபதி யிவர்களில் ஒருவர் பூர்ண பலமுடையவனு யிருந்தாலும், சக்கிரத்தின் பூர்வார்த்தத்தில் இருந்தால் இவர் களின் திசை, அந்தர்திசை இக்காலத்தில் குரு, சுக்கிரர்களின் நடு வில் பலிஷ்டராயிருப்பவர்களின் திசையிலும், இரண்டு, ஏழு இந்த பாவாதிபதிகளுடன் கூடி யிருந்தாலும், இவ்விருவர்களும் கூடி யிருந்தாலும் அவர்கள் புக்தி காலங்களில் பன்னிரண்டு (வயது) வருஷத்துக்குள் விவாகம் நடக்கும்.

# 8-வது அத்தியாயம்.

## எட்டாவது பாவம்.

——:(*):——

(1) சொல்ப புத்திரர், வெகு வியாதி, கிரணம், சந்தோஷச் செய்கை, தனத்துடனிருந்தால், தரித்திரம் முதலியவற்றை எட் டாம் பாவத்தில் இருக்கப்பட்ட சூரியன் முதலான கிரகங்களால் அறியவும்.

(2) ஜென்ம லக்கினத்திற்கு எட்டாம் பாவத்தில் பாபர்க ளிருந்தால் ரோகியாவன், அற்பாயுளுடையவன், குறைந்த பார்வை யுடையவன்.

(3) ஜென்ம லக்கினத்திற்கு எட்டாம் பாவத்தில் சுபர் இருந் தால் தன சமுர்த்தியும், தீர்க்காயுளும், அதிக துணிவும் உண் டாகும்.

(4) சுயக்ஷேத்திர, உச்ச, மித்திர ராசிகளில் எட்டாம் பாவத் தில் இருப்பவர்கள் தீர்க்காயுளைத் தருவார்கள், இவை எல்லாக் கிர கங்களுக்கும் பொருந்தும்.

(5) தனது நீச, சத்துரு ராசிகளை யடைபவர்களால் எட்டாம் பாவத்தில் உள்ள சூரியன் தேகசௌக்கியம், தனம் இவற்றை நாச மாக்குவான், மேலும் ஜாதகன் வெளி தேச சஞ்சாரியாவன், பயந்த வன் போன்றவன், தைரியசாலி, துவேஷமுடையவன்.

(6) மேற்படி சூரியன் தன் உச்சம் முதலிய பாவங்களில் எட் டாம் பாவத்தில் இருந்தால் சோக மில்லாதவன், மனோகர முடையவன்.

(7) சத்துரு, நீச்ச ராசிகளில் எட்டாம் பாவத்தில் உள்ள சூரியன் துக்கம், வெளிதேசவாசம், காமபீடையுடன் தனநாசம் முதலியவற்றைத் தருவன்.

(8) க்ஷீண சந்திரன் எட்டாம் பாவத்தில் இருந்து பிறந்தால் ஜாதகன் ஞானமுடையவன், நல்ல ரூபமுடையவுன், சீக்கிரமே மரணமடைவான்.

(9) சம்பூர்ண சந்திரன் எட்டாம் பாவத்திலிருந்தால் ஜாத கன் தியாகி, கொண்டாடப்பட்ட குணமுடையவன், அறிவாளி, நீண்ட ஆயுளுடையவன்.

(10) செவ்வாய் அஷ்டம பாவத்தில் இருந்தால் ஜாதகன் தனமுடையவன், சேனையுடையவன்.

(11) செவ்வாய் நீச்ச சத்துரு வர்க்கத்தில் எட்டாம் பாவத்தி லிருந்தால் வியாதியுடையவன், பலனை உத்தேசித்து பட்டினி கிடப்பான், நீச்ச கிருத்தியங்களுடையவன்.

(12) புதன் எட்டாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் குலவிருத் தியும், அரசனாகவும், சேனாதிபதியாகவுமாவான், கொண்டாடப்

பட்ட பெயரின் பொருத்த முடையவன், மேற்படி புதன் நீச்ச மூடமாகி யிருந்தால் இவற்றிற்கு நேர்மாறான பல னடைவான்.

(13) குரு எட்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் போகி, பூர்ணமான தீர்க்காயுளடைவான்.

(14) எட்டாம் பாவத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் அரச னுக்குச் சமமாவான்.

(15) சுக்கிரன் எட்டாம் பாவத்தில் பாபருடன் கூடியிருந் தால் ஜாதகன் ஆட்டைப்போல் பார்வையுடையவனாவன்.

(16) சுயக்ஷேத்திரத்தில் அல்லது தன் உச்சராசியில் அல்லது மித்திர ராசியில் எட்டாம் பாவத்தில் சனி யிருந்தால் ஜாதகன் தீர்க்காயுளடைவான்; அல்லாத மற்றைய ராசிகளில் சனி யிருந் தால் அற்பாயுளடைவான்.

(17) அஷ்டம பாவாதிபதி வெகு வர்க்கங்களில் பலமுடையவ னால் உச்சம், வக்கிரம் முதலிய காரணங்களால் மனிதனை தீர்க்கா யுளை அடையச் செய்வான்.

(18) அஷ்டம பாவாதிபதி சத்துரு நீச்ச வர்க்கங்களிலிருந் தாலும், அஸ்தமனமாகியிருந்தாலும் வயது அற்பமாகிவிடும்.

(19) அஷ்டமாதிபதி பாபருடன் கூடி லக்கினத்திலிருந்தா லும், எட்டாம் பாவத்திலிருந்தாலும், ஆறு எட்டுப் பன்னிரண் டாம் பாவங்களிலிருந்தாலும் ஜாதகன் அற்ப வயதடைவான், மேற்படி அஷ்டமாதிபதி மேற் சொல்லியபடியிருந்து லக்கினாதிபதி யுடனும் கூடியிருந்தால் அற்ப வயதிலும் மிக்க அற்ப வயதே அடைவான்.

(20) எட்டாம் பாவாதிபதி எட்டாம் பாவத்திலேயே யிருந் தால் ஜாதகன் தீர்க்க வயதடைவான்.

(21) கேந்திரத்தில் குரு அல்லது சுக்கிரனிருந்தால் எட்டாம் பாவத்தில் பாபரிருந்தாலும் தோஷமுண்டாகாது.

(22) ஆறு, எட்டுப் பன்னிரண்டாம் பாவங்களைப் பாபர்கள் அடைந்திருந்தால் ஜாதகனுக்கு ஆயுளற்பமாய்விடும்.

(23) சுபர்கள் ஆறு எட்டுப் பன்னிரண்டாம் பாவங்களை அடைந்திருந்தால் தீர்க்காயுளுடையவனாவன்.

(24) சுபர்களும் பாபர்களும் கலந்து ஆறு, எட்டுப் பன்னிரண்டாம் பாவங்களை யடைந்திருந்தால் ஜாதகன் மத்திம வயதை யடைவான்.

(25) சுய திரிகோண, உச்ச ராசியிலிருப்பவர்களைத் தவிர்த்து ஷஷ்டாஷ்ட வர்கங்களை யடைந்திருக்கும் கிரகங்கள் பிராண ஹானியைச் செய்வார்கள், இந்த ஷஷ்டாஷ்ட வர்க்கங்களை யடைந்திருக்கும் கிரகங்கள் லக்கினாதிபதியை விட பலிஷ்டர்களா யிருந்தால் மட்டும் பிராணஹானி ஏற்படும்.

(26) முதலில் ஸ்திரீயால் மனவருத்தமும், ஜுரபயமும், தீக்ஷண்ணியமும், பசி பாதையாலும், கண்டங்கள் முதலானவைகள் எட்டாம் பாவத்திலுள்ள சூரியனை பலிஷ்டர்கள் முக்கியமாய்ப் பார்த்தாலும் கூடி யிருந்தாலும் ஏற்படும்.

(27) லக்கினாதிபதியும் எட்டாம் பாவாதிபதியும் அவரவர்களுடைய மித்திர க்ஷேத்திரங்களி லிருந்தாலும் சூரியன் எட்டாம் பாவாதிபதி யாயினும் ஆயுளை விருத்தி செய்வார்.

(28) ஆறு, எட்டு, பன்னிரண்டு முதலிய ஸ்தானங்களில் இருக்கும் சனி, பாபர் இவர்களால் தேக பீடை யுண்டாகும், மேலும்,

(29) ஆறு, எட்டு, பன்னிரண்டு இந்த பாவங்களில் இவர்களே லக்கின ரந்திர பாவாதிபதிகள் அதாவது ஒன்று எட்டு ஆகிய பாவாதிகள் ஆகி கூடி யிருந்தால் ஜாதகன் தீர்க்க நோயடைவான்.

(30) ஆறு, எட்டு, பன்னிரண்டு முதலிய பாவங்களை பாபர்களடைந்து இருந்தாலும், பாபர்கள் பாப க்ஷேத்திரங்களை யடைந்திருந்தாலும், குரு சத்துருக் கிரகத்தால் பார்க்கப்பட்டிருந்தாலும், நீச்ச க்ஷேத்திரத்தை யடைந்திருந்தாலும், ஷஷ்டாஷ்டமங்களை யடைந்திருக்கும் பாபர்களின் திசையில் ஜாதகன் மரண மடைவன்.

(31) சர, ஸ்திர, உபய ராசியில் லக்கினத்திற்கு ஷஷ்டாஷ்டம பாவங்களை யடைந்திருப்பவர்கள் பர தேசத்திலாவது, சுதேசத்திலாவது, இவர்களுடைய திசை மத்தியில் அல்லது திசை புக்தி நடுவில் மரணத்தைத் தருவர்.

(32) எட்டாம் பாவாதிபதி தன் உச்சம் முதலிய பாவங்களில் இருந்தால் ஜாதகன் திவ்விய ஸ்தலங்களில் மரண மடைவன்.

(33) சனி, சந்திரன் இவர்கள் எட்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் நரகலோக மடைவன்.

(34) சூரியன், செவ்வாயிவர்களால் தீர்யக்கான ஜந்துக்களாகவும்,

(35) சந்திர, சுக்கிரரால் பிதுரு லோகமும், சொர்க்கமும், எட்டாம் பாவத்தினாலும் எட்டாம் பாவ திரேக்காணங்களாலும் இவர்களில் யெவர் பலிஷ்டரோ அவருடைய (வலிவாலும்) லோகத்தையும் அடைவன்.

(36) பத்தாம் பாவத்தில் செவ்வாயும், நான்காம் பாவத்தில் சூரியனு மிருந்தால் ஜாதகன் கல்லாலடிபட்டு மரிப்பான்.

(37) நான்காம் பாவத்தில் சனி யிருந்தால் ஜாதகன் கிணற்றில் விழுந்து மரிப்பான்.

(38) செவ்வாய், சனியும் கூடி நான்காம் பாவத்தி லிருந்தாலும் அப்படியே விபத்து உண்டாகும், சந்திரனும் இவர்களுடன் கூடி யிருந்தால் இப்படியே ஜலத்தினால் மரிப்பான் எனக் கூறுகின்றனர்.

(39) கன்னியா ராசியில் நான்காம் பாவத்தில் சூரியனிருந்து பாபரால் பார்க்கப்பட்டால் சுய ஜனங்களால் மரண மடைவான்.

(40) உபய ராசிகள் லக்கினமாகி மேற்படி லக்கினத்தில் சந்திரன் சூரியனிவர்க ளிருந்தால் ஜலத்தினால் மரண முண்டாகும்.

(41) சனி கடகத்திலும் மகரத்தில் சந்திரனும் இருந்தால் ஜாதகன் ஜலோதரம் என்கிற வியாதியால் மரிப்பான்.

(42) சந்திரன் பாபர் மத்தியில் செவ்வாயின் க்ஷேத்திரத்தில் இருந்தால் ஜாதகன் அஸ்திர சஸ்திரங்களால் மரிப்பான்.

(43) சந்திரன் பாபர் மத்தியில் கன்னியா ராசியில் இருந்தால் ஜாதகன் ரக்த சோகை என்னும் வியாதியால் மரிப்பான்.

(44) சனியின் ராசியில் சந்திரன் பாபர் மத்தியில் இருந்தால் ஜாதகன் கயிறு, நெருப்பு, வாதம் இவற்றால் மரண மடைவான், மேற்சொல்லிவந்த பாபர்கள் சுபரால் பார்க்கப்பட்டிருந்

தால் ஜாதகன் உத்தரத்தில் தாழச் சுருக்கிட்டுக் கொண்டு தொங்கிக் சாவான்.

(45) எட்டாம் பாவத் திரிகோணத்தினுல் ஜாதகனுடைய மரணத்தைச் சொல்லவும், அதாவது எட்டாம் பாவ திரிகோணம் சர்ப்பத்திரேக்காணம், பாசத்திரேக்காணம், நிகடத்திரேக்காணம், என்பன ஆகும். இவற்றில் பாசத் திரேக்காணமானுல் கயிற்றினுல் தொங்கியும், நிகடத் திரேக்காணமானுல் விலங்கிலிடப்பட்டும் அதாவது சிறைச்சாலையில் அடைபட்டும் அங்கு மரணமடைவான். இதை நமது பிருஹத் ஜாதக தமிழ் மொழி பெயர்ப்பில் விவரமாக சொல்லப்பட்டிருக்கிறபடியால் அங்கு கண்டு கொள்ளவும், வேறு சிலர் விலங்கிலிடப்பட்டு என்பதை சங்கிலியால் பிணேக்கப்பட்டு எனக்கூறுகின்றனர்.

(46) லக்கினம் மீனம் ஆகி அதில் சூரியனிருந்து ஏழாம் பாவத்தில் பாபருடன் கூடி சந்திரனிருந்து, செவ்வாய் இரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் ஸ்திரீ காரணமாக மரணமடைவன்.

(47) ஜென்ம லக்கினத்திற்குப் பத்தாம் பாவத்தில் சனியும், சூரியனல்லது செவ்வாய் நான்காம் பாவத்திலு மிருந்தால் ஜாதகன் சூலத்தினுல் குத்தப்பட்டு மரிப்பான்.

(48) ஒன்பது, ஐந்து லக்கினம் இந்த பாவங்களில் க்ஷீண சந்திரன், செவ்வாய், சனி, சூரியன் இவர்களிருந்தாலும் சூலத்தால் குத்தப்பட்டு இறந்து விடுவான்.

(49) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் சூரியனிருந்து, க்ஷீண சந்திரனுல் பத்தாம் பாவத்திலுள்ள செவ்வாய் பார்க்கப்பட்டால் சூலத்தால் மரணமும், சனியால் பார்க்கப்பட்டால் கட்டை சம்பந்தத்தாலும், அதாவது தடியாலடித்தலால் அல்லது கட்டையாலடித்தலால் மரணம் நேரிடும்.

(50) க்ஷீண சந்திரன் எட்டிலும், சூரியன் நான்காம் பாவத்திலும், பத்தாம் பாவத்தில் செவ்வாயும், லக்கினத்தில் சனியுமிருந்தால் ஜாதகன் குண்டாந்தடியா லடிபட்டிறப்பான்.

(51) சூரியன் பத்திலும், சந்திரன் ஏழிலும், செவ்வாய் ஒன்பதிலுமிருந்து பிறந்தவன் புகைச்சலால் இறப்பான்.

(52) சூரியன் ஐந்திலும், சனி லக்கினத்திலும், செவ்வாய் ஒன்பதிலும், சந்திரன் பத்திலும் இருந்தால் ஜாதகன் கட்டுப்பட்டு நன்ருய் அடிக்கப்பட்டு மிறப்பான்.

(53) ஜன்ம லக்கினத்திற்கு ஏழில் சத்துரு வீட்டில் சூரியனும், நாலில் செவ்வாயும் இருந்தால் ஜாதகன் நெருப்பால் இறப்பான்.

(54) சந்திரன் நான்கிலும், செவ்வாய் பத்திலும் இருந்தாலும், இவ்விருவரும் இரண்டாமிடத்தி லிருந்தாலும் ஜாதகன் ஆயுதத்தால் அடிக்கப்பட்டு புண், ரிணம், புண்ணில் பூச்சி முதலியன உண்டாகி மரிப்பான்.

(55) ஜென்ம லக்கினத்திற்கு நான்கில் செவ்வாயும், பத்தில் சூரியனு மிருந்தால் ஜாதகன் வாகனத்தில் இருந்து விழுவதால் மரிப்பான்.

(56) செவ்வாய் க்ஷீண சந்திரனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் யந்திரங்களால் பீடையடைவன்.

(57) துலாத்தில் செவ்வாயும், மேஷத்தில் சனியும் சனியின் ராசியில் சந்திரனும் இருந்தால் ஜாதகன் மலத்தில் வீழ்ந்திறப்பான்.

(58) க்ஷீண சந்திரன் செவ்வாயினால் பார்க்கப்பட்டு சனி எட்டா மிடத்தி லிருந்தால் மர்மஸ்தானத்தி லுண்டாகும் ரோகத்தினாலும், புழுக்களாலும் ஆயுதங்களாலும் மரணத்தை யடைவான்.

(59) செவ்வாயுடன் கூடிய சூரியன் ஏழாம் பாவத்திலிருந்து க்ஷீண சந்திரன் லக்கினத்திற்கு நான்காம் பாவத்திலிருந்து சனி எட்டாம் பாவத்திலு மிருந்தால் ஜாதகன் பக்ஷிகளால் மரணத்தை யடைவான்.

(60) லக்கினத்தில் சூரியனும், ஐந்தாம் பாவத்தில் செவ்வாயும், ஒன்பதாம் பாவத்தில் சந்திரனும், சந்திரன் எட்டாம் பாவத்திலும் இருந்தால் சுவர் இடித்து மேலே விழுவதாலும், இடி விழுவதாலும், மலையின் நுனியில் இருந்து விழுவதாலும் மரிப்பான்.

(61) ஜென்ம லக்கினத்தில் குரூரருடன் கூடிய எட்டாம் பாவாதிபதி பன்னிரண்டாம் பாவத்தி லிருந்தாலும், எட்டாம் பாவத்திலேயே யிருந்தாலும் ஜாதகன் சில காலமே ஜீவித்திருப்பான்.

(62) பத்து, ஒன்று இந்த பாவாதிபதிகள் கேந்திர, திரிகோணங்களில் இருந்தால் ஜாதகன் தீர்க்காயுளுடையனவன்.

(63) அஷ்டமாதிபதியும் லக்கின பாவாதிபதியும் ஷஷ்டாதிபதியும் செவ்வாயும் கூடியிருந்தால் ஜாதகன் சண்டையில் ஆயுதத்தா லடிக்கப்பட்டு இறப்பான்.

(64) எட்டாம் பாவத்தில் ஆறும் பாவாதிபதியும் ராகுவும் கூடியிருந்தாலும், அல்லது கேதுவுடனாவது சனியுடனாவது கூடியிருந்தாலும் அவர்களுடைய தசாந்தர் தசாகாலத்தில் திருடரால், அல்லது ஆயுதத்தால் அடிபட்டிறப்பான்.

(65) இங்கு இவர்களுடன் நான்காம் பாவாதிபதி கூடியிருந்தால் வாகனத்தினுல் மரணமடைவான்.

(66) இங்கு குரு கூடியிருந்தால் அஜீர்ண ரோகத்தால் மரணமும், லக்கினுதிபதி ஷஷ்டமபாவாதி அஷ்டமபாவாதிபதி யிவர்களாலுண்டாகும், மேற்சொன்ன ஸ்தானங்களில்;

(67) லக்கின பாவாதிபதி, குருவுடன் கூடியிருந்தாலும், நான்காம் பாவாதியுடன் கூடியிருந்தாலும் அஜீர்ணத்தாலேயே மரணமுண்டாகும்.

(68) அட்டமாதிபதியுடன் கூடியிருப்பவர் யோககாரகரானல் அவர் திசை மரணத்தை தரும்.

(69) சனியுடன் இரண்டாம் பாவாதிபதியும் லக்கின பாவாதிபதியும் கூடி ஆறு, எட்டு, பன்னிரண்டா மிடங்களிலிருந்தால் விஷ பக்ஷணத்தால் மரிப்பான்.

(70) மேற்சொல்லியவர்கள் ராகு கேதுக்களுடன் கூடியிருந்தால் தூக்கிலிடப்பட்டுச் சாவுண்டாகும்.

(71) ஆறும் பாவாதிபதியும் சனியும் கூடியிருந்தால் பூத பயத்தால் மரணமடைவான்.

(72) ஆறும் பாவாதிபதி சனி இவர்கள் ராகு, கேதுக்களுடன் கூடியிருந்தால் ஜாதகன் மிருகங்களால் பயமடைவான்.

(73) ஆறும் பாவாதிபதி சனி, குரு இவர்கள் கூடியிருந்தால் ஜாதகன் யானையால் பயமுடையவனுவன்.

(74) ஆறும் பாவாதிபதியும் சனியும் சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் குதிரையால் பயமுடையவனுவன்.

(75) ஆறும் பாவாதிபதி சனி யிவர்கள் சூரியனுடன் கூடியிருந்தால் ஜாதகன் கொம்புள்ள மிருகங்களால் பயமடைவன்.

(76) ஆறும் பாவாதிபதி சனி, செவ்வாய் இவர்கள் கூடியிருந்தால் ஜாதகன் நாய், அல்லது நரியிவற்றால் பயமடைவான்.

(77) திரிகோணமல்லது கேந்திரத்தில் லக்கின பாவாதிபதியும் நான்காம் பாவாதிபதியும் இருந்து அவர்களுடைய திசை புக்தி இவை வந்தால் ஜாதகன் தாய் அநுமரணமடைவாள் என்று முனிவர்கள் கூறுகின்றனர்.

(78) சனி, குரு, ராகு, சந்திரன் இவர்கள் எட்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் அபஸ்மார ரோகத்தால் மரணம் அடைவான், அல்லது துரும்புபோன்ற மெல்லிய சரீரமுடையவனாவன்.

(79) ஜென்ம லக்கினத்திற்கு எட்டாம் பாவத்தில் சந்திரன் இருந்தால் ஜாதகன் ஜலத்தில் வசிப்பவைகளால் மரணத்தையும், பிசாசு முதலானவற்றால் மரணத்தையும் அடைவான்.

(80) நான்கு கிரகங்கள் ராகு, கேது முதலானவர்களுடன் சந்திரனுடன் கூடி எட்டாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் பிசாச பீதியுடைவான்.

(81) நீச்சத்திலாவது அல்லது தன்னுடைய சத்துரு க்ஷேத்திரத்தில் எட்டாம் பாவத்தில் சூரியனிருந்தால் ஜாதகன் தகப்பன் ராஜ பீடையால் மரணத்தையடைவான்.

(82) சந்திரன் எட்டாம் பாவத்திலாவது இரண்டாம் பாவத்திலாவது இருந்தால் ஜாதகன் தேக நோயுடையவனாவன், மகானாவன்.

(83) பத்தாம் பாவத்தில் செவ்வாய் புதனுடன் கூடியிருந்தால் துர்நாற்றமுள்ள தேகபுழுக்க முண்டாகும்.

(84) லக்கினத்திற்கு பத்தாம் பாவத்தில் அல்லது ஐந்தாம் பாவத்தில் சனி, செவ்வாய், சூரியனிவர்களிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் தரித்திரமும், சகோதர நாசமும் உடையவன்.

(85) சந்திரன் ஐந்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகனுடைய புத்திரன் மரணமடைவான்.

(86) சூரியனுக்கு இரண்டாமிடத்தில் சனி, செவ்வாயிவர்களிருந்தால் ஜாதகனுடைய தகப்பனுக்கு மரணமுண்டாகும்.

(87) லக்கினத்தில் சந்திரனிருந்து இரண்டு பாபர்களுடனும்

கூடி யிருந்தால் சாந்தி செய்தாலன்றி இவனுடைய ஆயுள் நிலைக்காது.

(88) லக்கினத்தில் சந்திரனிருந்து ராகு கிரஸ்தத்தையாவது, பரிவேடத்தையாவது அடைந்தால் ஜாதகன் சத்தியோ மரண மடைவன். சத்தியோ மரணம் என்பது என்னவெனில் குழந்தை பிறந்து ஒரு வருஷத்திற்குள் மரணமடையும். இதை சத்தியோ மரணம் என்று சொல்வது. இதற்குக் காலநிர்ணயம் கிடையாது.

# 9-வது அத்தியாயம்.

## ஒன்பதாம் பாவம்.

—:(*):—

(1) ஒன்பதாம் பாவத்தில் சூரியன் முதல் வரிசையாயுள்ள கிரகங்களால் புத்திரன், தர்மம், தனம், சுகம், வித்துவத் தன்மை, பிரபுத்துவம், ஸ்ரீமான், பூசை செய்யப்படுதல் முதலியவற்றை யடைவன்.

(2) ஒன்பதாம் பாவத்தில் சுபரிருந்தாலும், பார்த்தாலும் சுபமுண்டாகும், மேற்படி பாவத்தில் பாபர்கள் இருந்தாலும், பார்த்தாலும் அசுபத்தையே செய்வார்கள்.

(3) மித்திர, உச்ச, சுயக்ஷேத்திரத்தில் ஒன்பதாம் பாவத்தில் இருப்பவர்கள் பிதுரு, மாதுரு சுகத்தைத் தருவர்.

(4) சத்துரு, நீச்சபாவம் அஸ்தங்கதங்களை யடைந்த ஒன்பதாம் பாவாதிபர்களும், ஒன்பதாம் பாவத்திலிருப்பவர்களும் பாக்கிய நாசத்தைச் செய்வார்கள்.

(5) புத்திர, மித்திர, தன, போகாதிகள், வாக்கு, தேவாராதனையில் சந்தோஷம் முதலியவற்றையும், அதிக குரூரம், பிதுரு, ஸ்திரீ இவர்களிடம் துவேஷமிவற்றையும் ஒன்பதாம் பாவத்தில் உள்ள சூரியன் ஸ்தானத்தை அனுசரித்துக் கொடுப்பார்.

(6) சந்திரனும் ஒன்பதாம் பாவத்தில் சூரியனைப் போலவே கொடுப்பார், கேந்திரத்தில் இருந்தால் ஸ்திரீகளிடம் பிரீதியுடையவன், அதிருஷ்டமுடையவன், பிதுரு காரியங்களைச் செய்பவன், சுசி யுடையவன்.

(7) ஒன்பதாம் பாவத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் சிவப்பு வஸ்திரப் பிரியன், துவேஷமுடையவன், பிராணிகளை இம்சிப்பதில்

பிரியன், சோம்பலுடையவன், ராஜபூஜிதன், தீரன், பிதுரு மாதுரு சுகக்குறைவுடையவன், தர்மிஷ்டனுமாவான்.

(8) ஒன்பதாம் பாவத்தில் புதனிருந்தால் ஜாதகன் அதிக வித்தையும், சுபாச்சாரமும், தர்மமும், தனமும், சிற்பித்தொழிலு முடையவன், மேற்படி புதனே அங்கு சனியு (பாபரு)டன் கூடி யிருந்தால் நிதான பாக்கியமுடையவன், நாஸ்திகனுவன்.

(9) ஒன்பதாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் சுகம், தனம், கியாதி, அறிவு முதலியன உடையவன், நல்லவர்களின் சேர்க்கையுடையவன், உபாயம் தெரிந்தவன், தகப்பன், மனைவி, சுகம், தனம் முதலியன உடையவன்.

(10) ஒன்பதில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் தெய்வபக்தி, அதிதி பக்தி குருப்பிரீதி முதலியன உடையவன்.

(11) சனி ஒன்பதாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் மூர்க்க னுவன், ரொம்ப நெருங்கிய தாபமுடையவன், தனம், தர்மம் முத லிய இல்லாதவன், குறைந்த வயதுடையவன், புத்திரன், புகழ் முதலியன இல்லாதவன்.

(12) ஒன்பதாம் பாவத்திலிருக்கும் சுபர்கள் குருவுடன் கூடி யிருந்தாலும், குருவால் பார்க்கப்பட்டாலும் பாக்கியம் முதலிய சர்வமும் சுபமுமுண்டாகும்.

(13) ஒன்பதாம் பாவத்தில் சுக்கிரனிருந்து பாபருடன் கூடி னுலும், சந்திரனுடனும் கூடியிருந்தாலும் ஜாதகன் குரு பத்னி யைப் புணர்வான்.

(14) ஒன்பதாம் பாவத்தில் குரு இருந்து சூரியனுல் பார்க்கப் பட்டால் ஜாதகன் அரச கோபாத்தால் ஆபத்தும், பூமி நாசமு முடையவன், ஒன்பதாம் பாவத்திலுள்ள குருவை, புதன் பார்த் தால் தனமுடையவனுக ஆவான்.

(15) சந்திரனுலும், சுக்கிரனுலும், குரு பார்க்கப்பட்டால் வாகனம், சம்பத்து, பாக்கியம் முதலியவைகளையும் இஷ்டான்ன சமூர்த்தியான போஜனமும் அடைவான்.

(16) ஒன்பதாம் பாவத்தில் குரு இருந்து சூரியன், செவ்வா யிவர்களால் பார்க்கப்பட்டால் தனம், ஸைன்னியம் முதலியன உடையவனுவான்.

12

(17) ஒன்பதாம் பாவத்தில் குரு இருந்து சூரியன், சந்திரன், இவர்களால் பார்க்கப்பட்டால் காவியம் முதலான அறிந்த பண்டிதனுவன், பசு, யானை முதலிய அடைவான்.

(18) ஒன்பதாம் பாவத்தில் குரு இருந்து சூரியன், சுக்கிரன், இவர்களால் பார்க்கப்பட்டால் வினயமுடையவனுவன்.

(19) ஒன்பதாம் பாவத்தில் குரு இருந்து சூரியன், சனி, யிவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் கிராமத் தலைவனுவன், நல்ல தெளிவுடையவனுவான், தனத்தை அடைவான்.

(20) ஒன்பதாம் பாவத்திலுள்ள குரு, சந்திரன், செவ்வாயிவர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் சேனை, தனம், சுகபோஜனம் முதலியன உடையவன்.

(21) புதன், சந்திரன், இவர்களால் ஒன்பதாம் பாவத்தில் இருக்கப்பட்ட குரு, பார்க்கப்பட்டால் ஜாதகன் மேன்மையான தனத்தை யடைவன், வீடு, சயனசுகம் முதலியன உடையவனுவன்.

(22) சுக்கிரன், சந்திரன், இவர்களால் குரு ஒன்பதாம் பாவத்திலிருந்து பார்க்கப்பட்டால் ஜாதகன் சூரன், தனமுடையவன், புத்திர கருமம் செய்பவன்.

(23) ஒன்பதாம் பாவத்தில் குரு இருந்து புதனுல் பார்க்கப்பட்டால் ஜாதகன் நல்ல ஞானம், வித்தை யிவற்றையடைவன்.

(24) குரு பாக்கிய ஸ்தானமான ஒன்பதாம் பாவத்திலிருந்து எல்லாக் கிரகங்களாலும் பார்க்கபபட்டால் ஜாதகன் தேஜசு, சற்குணம், திரவியம், முதலியன உடையவனுவன்.

(25) சுபர் ஒன்பதாம் பாவத்திலேயே சுய க்ஷேத்திரத்திலிருந்தால் சகல வழிகளிலும் உத்தமமான சற்குணங்களே யுடையவனுவன்.

(26) ஏழாம் பாவத்தில் சனியும், மூன்றும் பாவத்தில் பூர்ண சந்திரனுமிருந்து குருவைப் பார்த்தால் ஜாதகன் அரசர்க்கரசனுவான்.

(27) ஒன்பதாம் பாவத்தில் சூரியன், சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் புத்திரன் நோயுடையவனுவன், மேலுமிவர்களுடன் அங்கு ஒன்பதாம் பாவத்தில் புதனும், செவ்வாயும் கூடியிருந்தால் ஜாதகன் துக்கம், கலகம், குரோதம், பிரசண்டன், அதா

வது வலிவு, வீரம், வேகம், முதலிய உடையவன், ஜன வல்லவனுவன்.

(28) ஒன்பதாம் பாவத்தில் புதனும் செவ்வாயும் கூடியிருந்தால் ஜாதகன் வெகு சத்துருவும், துக்கமும், சோகமுமுடையான்.

(29) ஒன்பதாம் பாவத்தில் சந்திரனும், செவ்வாயும் கூடியிருந்தால் ஜாதகன் சரீரத்தில் புண்ணும், ரிணமும் பீடையும், தாய் நாசமும் உடையவனுவன்.

(30) ஒன்பதாம் பாவத்தில் சந்திரனும் புதனும் கூடியிருந்தால் ஜாதகன் சாஸ்திர சுருதிகளை யறிவான், வாச்சாலகன்.

(31) ஒன்பதாம் பாவத்தில் குருவும் சந்திரனும் கூடியிருந்தால் ஜாதகன் தீரன், உத்தமமானவன், இவ்விருவருடன் சூரியனும் கூடியிருந்தால் ஜாதகனுடைய தகப்பன் கேவலமான தர்மமுடையவன், பாபீ, குலத்திலிருந்து நழுவியவனுவன்.

(32) ஒன்பதாம் பாவத்தில் புதன் செவ்வாயுடன் கூடியிருந்தால் போகமுடையவன், சாஸ்திரமு மறிவான், எப்போதும் பயமுடையவன்.

(33) ஒன்பதாம் பாவத்தில் சூரியன், புதன், செவ்வாயிவர்கள் மூவரும் கூடில் ஜாதகன் பரஸ்திரீகமனத்தால் தனநஷ்டம், சவுக்கியக்குறைவு முதலியன அடைவான்.

(34) ஒன்பதாம் பாவத்தில் புதன், குருவுடன் கூடியிருந்தால் ஜாதகன் வித்துவான், தனமுடையவன், பண்டிதன்.

(35) ஒன்பதாம் பாவத்தில் புதன், சுக்கிரனேடு கூடில் ஜாதகன் தீரமுடையவன், குருவும் கூடில் ஜாதகன் நல்ல அறிவும், சங்கீதமும், தனமும் அடைந்து பண்டிதனுமாவான்.

(36) புதன், சனியுடன் கூடி ஒன்பதாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் வாயு பீடையுடையவன், சத்திய வாக்கியமுடையவன், தனமுடையவன், ரோகமுடையவன், பந்து ஹீனன், தனம், ரத்னம் முதலிய உடையவனுவன், பூஜிக்கத்தகாதவன்,

(37) சுக்கிரன் சனியுடன் கூடி ஒன்பதாம் பாவத்திலிருந்தால் வெகு சிநேகிதருடையவன், ராஜனுக்கிஷ்டமானவன், கீர்த்தியுடையவன், நோயில்லாதவன், காந்தியுடையவன்.

(38) சந்திரன், சூரியன், செவ்வாயிவர்கள் ஒன்பதாம் பாவத்தில் இருந்தால் பிதுரு, மாதுரு, கூடப்பிறந்தவர்களை ரக்ஷணை

செய்பவன். தன் உச்சத்தில் புதனும் கூடியிருந்தால் ராஜப்பிரியன், ராஜதிரவியத்தால் ஜீவிப்பான். ஸ்திரீ கலகமுடையவன், அதனால் தன நஷ்டமுண்டாகும் என்று வேறு சிலர் எண்ணுகின்றனர்.

(39) ஒன்பதாம் பாவத்தில் சனி யிருந்தால் ஜாதகன் அன்னியருடைய வேலையாட்களை ஏவுவான், ஜனத் துவேஷ முடையவன்.

(40) ஒன்பதாம் பாவத்தில் சூரியன், செவ்வாய், புதனிவர்கள் இருந்தால் ஜாதகன் கோபீ, குரூரமுடையவன், கீர்த்தியுடையவன், அன்பாய்ப் பேசுபவன்.

(41) ஒன்பதாம் பாவத்தில் குரு இருந்தால் ஜாதகன் நல்ல ஆதாவும், பிதுரு பிரியமும், தேவப் பிரியமும், நற்குணமும் உடையவன்.

(42) ஒன்பதாம் பாவத்தில் குருவும், சனியும் கூடியிருந்தால் ஜாதகன் ஸ்திரீ துவேஷமுடையவன், கலகம் செய்பவன், சண்டையிடுவன், செய்நன்றி மறப்பன், சத்துருவுடையவன், பிதுரு நாசமுடையவன், சாகஸீ, தன் ஜனங்களிடம் கெட்ட எண்ணம்கொண்டவன், சுயஜனங்களுக்கு நன்மை செய்யாதவன்.

(43) புதனும், சூரியனும் ஒன்பதாம் பாவத்தில் இருந்தால் பயமும், கர்வமும் உடையவன், அரசனுக்கு சமமானவன்.

(44) இவர்களுடன் கூடி ஒன்பதாம் பாவத்தில் சனியுமிருந்தால் ஜாதகன் தெய்வநிந்தை செய்வன், வெளிதேச வாசமுடையவன், பரதாரகமனம் செய்பவன்.

(45) ஒன்பதாம் பாவத்தில் சூரியன், குரு, சுக்கிரனிவர்கள் கூடியிருந்தால் ஜாதகன் சம்பத்துடையவன், விஷயபோகி, மேற்படிக் கிரகங்களுடன் சனி கூடியிருந்தால் ஜாதகன் அனுச்சாரமுடையவன்.

(46) சனி, சுக்கிரன், சூரியன் இவர்கள் கூடியிருந்தால் தரித்திரமுடையவன், அழுக்கடைந்தவன், தேஜசு இல்லாதவன், புகழில்லாதவன், அரசனால் தண்டிக்கப்படுபவன், அதனால் மரணமுடையவன்.

(47) சந்திரன், புதன், செவ்வாயிவர்கள் ஒன்பதாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் பாலியத்தில் தவித்தலுடையவன், ஏக்கமுடையவன், மத்திய வயதில் தன ரத்தினாதிகளுடையவன்.

(48) குரு ஒன்பதாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் இந்திரியங்களைச் ஜெயிப்பவன், தனமும் தேவபக்தியுமுடையவன்.

(49) ஒன்பதாம் பாவத்தில் குருவுடன் சந்திரன், புதன், செவ்வாயிவர்களும் கூடி யிருந்தால் ஜாதகன் பூமி நஷ்டமும், சனியும் கூடி யிருந்தால் மனைவி நஷ்டமும், தாய் நாசமும் உடையவன்.

(50) ஒன்பதாம் பாவத்தில் சந்திரன், புதன், குரு இவர்கள் இருந்தால் ஜாதகன் குருத்துவமும், அரசனுக்கு குருவாகவும், சுக்கிரனும் கூடின் தாய் மனைவி, தகப்பன், மித்திரர் முதலியவரையும் உடையவன். சனி கூடியிருந்தால் நபும்ஸகாச்சாரமுடையவன், பாபச் செய்கையும், சண்டையுமுடையவன்.

(51) சுக்கிரன், சந்திரன், குரு இம்மூவரும் ஒன்பதாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் அரசனுக்குச் சமனேயாவன், சனியுடன் கூடியிருந்தால் நித்திய விரதமும், தனமும், குணமும், வித்துவத்துவமும் உடையவன், அரசன் செய்யும் செய்கை செய்பவன், வெகு ஜன ரக்ஷண முடையவன்.

(52) ஒன்பதாம் பாவத்தில் சந்திரன், செவ்வாய், புதன், சனியிவர்கள் கூடியிருந்தால் ஜாதகன் அரசனிடம் அன்புடையவன், விசேஷ தனமுடையவன், சுக்கிரன் கூடியிருந்தால் சாஸ்திர ஹீனன், வஞ்சகன், அதிக தாமசமுடையவன்.

(53) ஒன்பதாம் பாவத்தில் சனி, புதன், செவ்வாயிவர்கள் இருந்தால் மூடன், விதண்டாவாதி, சுக்கிரன் கூடியிருந்தால் வேலையாள், பாக்கியம், தெளிந்த பண்டிதத்துவம், தர்மம், விசேஷகீர்த்தி முதலியன உடையவன்.

(54) புதனும் குருவும் ஒன்பதாம் பாவத்திலிருந்தால் புருஷர்களில் உத்தமன்.

(55) சூரியன், செவ்வாய், குரு இவர்கள் ஒன்பதாம் பாவத்திலிருந்தால் வீரமுடையவன், உக்ரமான பாரக்கிரம முடையவன், குரு பக்தி யுடையவன், சந்திரன், செவ்வாய், குரு, சுக்கிரனிவர்களிருந்தால் ஜாதகன்வித்துவான், சூரன், தனவான், குணமுடையவன்.

(56) ஒன்பதாம் பாவாதி யிருக்கப்பட்ட ராசிநாதன் பாக்கியகாரகனென்று எண்ணுகின்றனர். ஒன்பதாம் பாவாதி தன் வீட்டிலிருந்தால் பாபியாவன், இவனுக்கு லக்கினதிபதி போதக

ளுவன். சிலர் ஐந்தாமாதி போதகன் என எண்ணுகின்றனர். ஒன்பதாம் பாவத்தில் சுக்கிரன், குரு, புதன், சந்திரனிவர்களிருந் தால் அதிக தனமும், சுகமும், சம்பத்தும் அடைவன்.

(57) இதரக் கிரகங்கள் ஒன்பதாம் பாவத்தில் இருந்தால் ஹானி, பிரிவு, மரணம் முதலியவற்றைச் செய்வார்கள்.

# 10-வது அத்தியாயம்.

## பத்தாம் பாவம்.

——:(*):——

(1) தகப்பன், தாய், சத்துரு, பந்து, சகோதரம், ஸ்திரீ, பரி வாரங்கள் இவர்களுடைய தனத்தினால் ஜீவனம் செய்வதைச் சொல்லப்படுகிறது. பத்தாம் பாவத்தில் உள்ள சூரியாதிக் கிரகங் களால் அறியவும்.

(2) ஜென்ம காலத்தில் எந்த பாவாதிபதி பத்தாம் பாவத்தி லிருக்கிறாரோ அந்த பாவத்தின் பலனைத் தருவர்.

(3) பத்தாம் பாவத்தைப் பார்ப்பவர்களாலும் பத்தாம்பாவத் திலிருப்பவர்களாலும் உச்ச, சொட்சேத்திர, மித்திர, சத்துரு, நீச்ச, அஸ்தங்கத கிரகங்களாலும் ஜாதகன் பூஜை, அர்ச்சனை செய்வது, எண்ணை விற்றல், யத்தினப்பட்டுப் பொருள் தேடுதல், இவ்வகைகளை அறியவும்.

(4) பத்தாம் பாவத்தில் கிரகமில்லாமலிருந்து பத்தாம் பாவ மும் கிரகங்களால் பார்க்கப்படாமலிருந்தால் ஜாதகன் தரித்திரத் தின் காரணமாக பூமியில் எங்கும் அலைந்து திரிவான்.

(5) சந்திரனுக்கும் லக்கினத்திற்கும் பத்தில் பலமுடைய எந்த கிரக மிருக்கிறதோ அந்த கிரகத்திற்குறிய தொழிலால் தனத்தை அடைவான். இதை சூரியன் முதலான கிரகங்களின் காரகாதிகளைக்கொண்டு நிச்சயிக்கவும்.

(6) சூரியன் பத்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் புத்தி, சுகம், தைரியம், கீர்த்தி, புத்திரன், ஸ்திரீ முதலியன அடைவான்.

(7) இந்த சூரியன், சனி, செவ்வாயிவர்களின் ராசியில் இருந்து அவர் பாபரின் பார்வையை அடைந்தால் ஜாதகன் மரித் துவிடுவான்.

(8) சந்திரன் பத்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் செய்கை, ஆச்சாரம், தனம், காமம், கர்மவிவேகம் முதலியன உடையவனுவன்.

(9) செவ்வாய் பத்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகன்பலமும், புஷ்டியும் அடைவான். மேற்படி செவ்வாயைப் பாபர் பார்த்தால் ஜாதகன் எக்காரியங்களிலும் தடங்கலுடையவனுவன்.

(10) சந்திர லக்கினத்திற்குப் பத்தாமிடத்தில் செவ்வாயிருக்கும் ஜாதகன் எக்காரியமும் ஆரம்ப காலத்தில் தனமும், சுசியுமடைவான், ஸ்திரீ போகமுடையவன், தர்மிஷ்டன், சூரன், நன்மனைவியுடையவன், எப்போதும் சுகீ, தைரியமும், சௌரியமும், பிரதாபமும், பிரயத்தினத்திஞல் தனமும் அடைவான், அப்போதும் பாபர் பார்த்தால் சகல காரியங்களிலும் தடங்கலுடையவனுவன், வேறு சிலர் சந்திரன் மாத்திரம் பத்தாம் பாவத்திலிருந்தாலும் இப்பலன்கள் ஏற்படுமென்று எண்ணுகின்றனர்.

(11) பத்தாம் பாவத்தில் புதனிருந்தால் ஜாதகன் அறிவுடையவன், பற்பல அலங்கார முடையவன், விப்பிரன், புத்திர, மித்திர, சம்பத்துடையவன், சகலத்திலும் ஆரம்பத்தில் சந்தோஷ முடையவன், எல்லா உபாயங்களிலும் தெளிவுடையவன், தன, வாகன சுகமுடையவன்.

(12) குரு பத்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் சற்காரியங்களைச் செய்பவன், தாயாதி, சகோதரம் முதலிய ஜனங்களுடையவன், அதிக கியாதியும், அதிக பிரீதியும் உடையவன், வைபோகங்களும், பிரபாவமும் உடையவன்.

(13) சுக்கிரன் பத்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் சங்கீதம், நாட்டியம் முதலியவற்றை யறிவன், சனி பத்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் பட்டிணம் கிராமம் முதலியவற்றிற்குத் தலைவனுகவும், தண்டிக்கும் அதிகாரியாகவும், சேனுதிபதியாகவும், மந்திரியாகவும் ஆவான்,

(14) மேற்படி சனி, பாபரால் பார்க்கப்பட்டால் ஜாதகன் சத்துரு, புத்திரன், சுகம் முதலிய இவற்றிற்கு விரோதமுடையவனுவன்.

(15) பத்தாம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகன் மிலேச்சரால் தனமடைவன், ஈனர் சம்பாதித்த பொருளையடைவன், சிவ பக்தி யுடையவன்.

(16) பத்தாம் பாவத்தில் சந்திரனும் புதனுமிருந்து இவர்களுடன் சுக்கிரனாவது, ராகுவாவது கூடியிருந்தால் ஜாதகன் சண்டாள யோகம் என்னும் யோகமடைவான். இவன் தன் குலகர்மங்களை ஒழித்து வேறு ஒவ்வாத தொழில் செய்வான். மேற்படி சந்திரன் சுபரால் பார்க்கப்படாமல் ராகுவுடன் கூடி பத்தாம் பாவத்தில் சர ராசியிலிருந்தால் ஜாதகன் தனம், அதிருஷ்ட மிவையில்லாதவனாவன். பாபர்கள் கூடியிருந்து ராகுவும் கூடியிருந்தால் ஜாதகன் *விஷமக் கண்ணுடையவன், மிதமான பிரஜைகளுடையவன், சத்துரு நாச முடையவன், சகோதர நாச முடையவன், ஆயினும் கியாதியுடைய அரசனுக்குச் சமபாக சம்பத்துடையவனாவன்.

(17) சந்திரரும் சூரியனும் அங்கு கூடியிருந்தால் சத்துரு நாசத்தையும் அடைவான், யானையல்லது குதிரைகள் மூலம் சண்டையில் ஜயிப்பன், மந்திரியாவன்.

(18) பத்தாம் பாவத்தில் சூரியன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன் அல்லது சனி இவர்களுடன் சந்திரன் கூடியிருந்தாலும், அல்லது பத்தாம் பாவத்தில் செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி யிவர்கள் கூடியிருந்தாலும், ஜாதகன் அரசன், மந்திரி, அல்லது லோககுரு இப்படிப்பட்ட இவர்களில் ஒருவனாவன். வேறு சில ரிஷிகள் ஜீவன பாவத்தை யறியும்போது வஸ்திரம், ஆபரணம், பூமி, தொழில் ஜீவனம், நித்திரை இவைகளையும் பத்தாம் பாவத்திலறியும்படி சில கிரந்தங்களில் சொல்லியிருக்கின்றாகள்.

(19) பத்தாம் பாவாதிபதி துர்ப்பலனாகி பத்தாம் பாவத்திலேயே இருந்தால் ஜாதகன் கெட்ட செய்கையுடையவன், சோம்பலுடையவன், மட்டித்தனமுள்ள செய்கையுடையவன்.

(20) பத்தாம் பாவாதிபதி புதன், குரு இவர்கள் பலிஷ்டர்களாய் பத்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் யாகசித்தி யுடையவன், இவர்கள் பத்தாம் பாவத்திலிருந்து சுபருடனும் கூடியிருந்தால் விசேஷ யாக சித்திகளுடையவனாவன்.

---

* விஷமக்கண் என்பது, சமமில்லாதது, அக்கிரம அதாவது கிரமமில்லாதபடி ஒற்றைக்கண், வக்கிரப்பார்வை, விபரீதபார்வை, துக்கப்பார்வை, அழுகின்ற கண், அபாயமான கண், கெட்ட கண் இவைகளாகும்.

(21) புதனும் குருவும் இருக்கிற ராசிநாதர்கள் துர்ஸ்தானங்களில் இருந்தார்களானல் ஜாதகன் செய்கை, தொழில் எல்லாம் நசித்துவரும். விருத்தியடையாது.

(22) பத்தாம் பாவத்தில் சூரியனவது ராகுவாவது இருந்தால் ஜாதகன் கங்காஸ்நான புண்ணிய சித்தியுடையவன், கேதுவுடன் கூடியிராமல் பத்தாம் பாவாதிபதியும் சுபர்களும் பத்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் யாகம் செய்வன், இவர்களே ராசியில் உச்சத்திலிருந்தாலும், பாபருடன் கூடி பத்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் யாகசித்தியடையமாட்டான். ஷஷ்டாஷ்டம விரயஸ்தானங்களி லிருந்தாலும், பத்தாம் பாவாதிபதி இவ்விதமாயிருந்தாலும், இவர்கள் நீச்சத்திலிருந்தாலும் தப்பாமல் தடங்கலுண்டாகும்.

(23) புதன் பத்தாம் பாவாதிபதியாகி தன் உச்ச ராசியிலிருந்தாலும், ஒன்பதாம் பாவத்திலிருந்தாலும், ராகு, கேதுக்களுடன் கூடாமலிருந்தால் முன்போலவே யாக சித்தியுடையவனவன்.

(24) பத்தாம் பாவாதிபதி உச்சத்திலிருந்து புதனுடன் கூடியிருந்து சுபரின் பார்வையுமடைந்து இருந்தாலும், உச்சத்திலுள்ள புதனுடன் கூடியிருந்தாலும் யாகசித்தியடைவன்.

(25) பத்தாம் பாவாதிபதியுடன் நான்குக் கிரகங்கள் கேந்திரத்திலாவது திரிகோணத்திலாவது இருந்தாலும், பத்தாம் பாவத்திலேயே நான்கு கிரகங்களிருந்தாலும் சன்னியாச யோகமுடையவன்.

(26) லக்கின பாவாதிபதி பத்தாம் பாவத்தில் இருந்து இதரர்களால் பார்க்கப்பட்டாலும், சனி சூரியனைப் பார்த்தாலும், லக்கின பாவாதி பாபர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தீக்ஷையடைவன், சனியின் திரேக்காணத்தில் இருந்து செவ்வாய் சூரியனிருவர்களால் பார்க்கப்பட்டாலும், சந்திரன் பத்தாம் பாவத்திலுள்ளக் கிரக பலனக நீச்ச செய்கையும், தனமின்மையும் அடைவன், பாபர்கள் லக்கினம் முதலான கேந்திரங்களில் இருந்தால் ஜாதகன் சூரன், ஒரு சமயம் மகா மூர்க்கனும் ஆவான், சிலசமயம் அல்லது ஒரு சமயம் சந்திரனைப்போல் குளிர்ந்த அன்புடையவனவன். இவர்கள் சுபர்களாகி திரேக்காணத்தில் சுபத்திரேக்காணத்திலிருந்தால் ஜாதகன் அரசனக அல்லது அரசனுக்குச் சமமாவன், தனமுடையவன், சம்பத்தும் அழகும் உடையவன்,

குலோத்தமனும் ஆவான். சுபரும் பாபரும் கூடியிருந்து கேந்திரத்தில் இருந்தால் அந்த ஜாதகர்கள் சுபவிருத்தி யுடையவர்களாவார்கள். ஆயினும் ஆயுத பயமும், வியாதி பீடையும் எப்போதுமுடையவர்களாவார்கள்.

(27) செவ்வாய் முதலிய ஐந்துக் கிரகங்கள் லக்கினம் முதலான கேந்திரங்களிலிருந்தாலும் தன், உச்சத்தில் இருந்தாலும் முறையே ருசகயோகம், பத்திரயோகம், ஹம்ஸயோகம், மாளவயோகம், சசயோகம் முதலிய பெரிய யோகங்களுண்டாகும்.

(28) சூரியனும் குருவுமாவது, சூரியனும் சுக்கிரனுமாவது பத்தாம் பாவத்தை யடைந்திருந்தால் ஜாதகன் மனிதர்களில் உத்தமர்களிலும் உத்தமமான ஆச்சாரமும், அரசனுக்கு சமமும் உடையவனுவன், அல்லது பெரிய அரசனுவன்.

(29) செவ்வாய், சனி, ராகு, கேது இவர்கள் (பத்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் ரோக முடையவன், தன மில்லாதவன் ஆவான்.

(30) பத்தாம் பாவத்தில் கேது, புதன், குரு இவர்கள் இருந்தால் ஜாதகன் எழுத்தும் கையும், புத்தகமும் கையும் உடையவனுவன்.

(31) சுக்கிரனுடன் குரு கூடி பத்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் மனோகரம், சாலக்கு, சிருங்காரம், சந்தோஷம் முதலிய உடையவனுவன்.

(32) புதன், செவ்வாய், குரு, சுக்கிரன் இவர்கள் பத்தாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் அரசனுக்குச் சம சுகமடைவான்.

(33) ருசக யோகபலன் :—ஞானம், தனம் முதலியன உடையவனுகி பிரசித்தனுவன், தேஜசும், புண்ணியச் செய்கையும் உடையவன், நரேந்திரனுவன், யானை, குதிரை, வெகு ரத்னம் இவற்றை அதிகமாகவுடையவன், தீர்க்காயுளுடையவனுவன், தனமும், போகமும், குணமும் அடைந்து சாஸ்திரமும் கற்றுணர்ந்து, நற்கீர்த்தியும் அடைந்து, சிவந்த தேகமும், எழுபது வயது முடையவனுவான்.

(34) பத்திர யோகப்பலன் :—ஜாதகன் சுகீ, நல்ல ஆச்சார ஒழுக்கங்க ளுடையவன், கூட்டத்தலைவன், சற்குணன், பந்துக்களுக்கு இதத்தையே செய்பவன், சாஸ்திர ஞானீ, எண்பது வயதடைவான்.

(35) **ஹம்ஸ** யோகப்பலன் :—ஜாதகன் சாஸ்திரார்த்த மறிந்தவன், வெகு புகழுடையவன், வெகு யோக்கியதைகளுடையவன், அபார நியாயமுடையவன், சத்திரம் கட்டி அன்னதானம் செய்பவன், வஸ்திரம் அளித்தல், புஷ்பத்தோட்டம் வைத்தல் முதலியன செய்வன், புண்ணிய கர்த்தா, மன்மத ரூபன், நிபுணன், ஜகத்குரு ஆவன், எழுபத்தைந்து வயதடைவன்.

(36) **மாளவி** யோகப்பலன் .—ஜாதகன் தனம், கீர்த்தி, மகா போகம், பிரபு, சக்தியுடையவன், எழுபது வயதடைவன்.

(37) **சச** யோகப்பலன் :—ஜாதகன் கறுப்பு நிறமுடையவன், திடமான சரீரமுடையவன், பலவான், உபாயந் தெரிந்தவன், அரசனுவன், அல்லது மந்திரியாவன், குரூர முடையவன், எழுபது வயதடைவான்.

குறிப்பு :—எந்த யோகத்திலும் பலவானுன புதனுடைய பார்வையை யடைந்து செய்யும் அதியோகாதி யோகங்களிலும் சுய தெசையில் யோக காரகர் தங்கள் பலன்களைக் கொடுப்பார்கள், இவ்வைந்து யோகங்களும் பஞ்ச மகாபுருஷ யோகங்களாகும்.

(38) லக்கினப் பாவத்தை யடைந்திருக்கப்பட்ட சுக்கிரன், புதன், குரு, சந்திரன் இவர்கள் வெகு ஆயுள், கீர்த்தி, நல்லறிவு, தனம் இவைகளையும், சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது இவர்கள் பத்தாம் பாவத்திலிருந்தாலும், நீச்சத்திலிருந்தாலும், பிதுருதுவேஷம், அங்கக் குறைவு, தரித்திரம், குணமின்மை இவைகளையும் தருவார்கள் என்று பிருகு, அத்திரி, பராசரர் முதலிய மகான்கள் அருளிச்செய்திருக்கிறார்கள்.

# 11-வது அத்தியாயம்.

## பதிஞேராம் பாவம்.

—:(*):—

(1) தனம், கியாதி, நல்ல தீரம், தீர்க்காயுள் இவற்றை பதிஞேராம் பாவத்திலுள்ள சூரியாதி முதலிய நவக்கிரகங்களால் அறியவும்.

(2) உச்ச, மித்திர, சொட்சேத்திர கிரகங்களாலு மறியவும். பதிஞேராம் பாவத்தில் சுபர்களிருந்தால் ஜாதகன் தீர்க்காயுள், தனம், புத்தி இவற்றையடைவான். குரூரக் கிரகங்கள் தன் உச்ச,

மித்திர, அதிமித்திர, சம க்ஷேத்திரங்களிலிருந்தால் ஜாதகன் சேர்த்து வைத்த தனம், வித்துவத்தன்மை, துவேஷம், துக்கம், நல்ல வேலையாள் முதலியன உடையவனாவன்.

(3) சூரியன் பதினோராம் பாவத்திலிருந்தால் ஜாதகன் பூஜிக்கப்படுபவன், பிரீதிக்குறைவுடையவன்.

(4) சந்திரன் பதினோராம் பாவத்திலிருந்தால் வெகு புத்திரரும், போகமும், வெகு ஆயுளும் உண்டு. ஜாதகன் ஜிதேந்திரியன், வெகு வேலையாட்களுடையவன், ஸ்ரீமான் ஆவன்.

(5) செவ்வாய் பதினோராம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் பலிஷ்டன், சோகமில்லாதவன், நற்காரியங்களில் உச்சாகமுடையவன். மனைவியுடன் வேறு ஸ்திரீயுமுடையவன், ஜாதகன் சூரியனைப் போல் காந்தியுடையவன்.

(6) புதன் பதினோராம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் தனமுடையவன், வாகன முடையவன், போக முடையவன், நல்ல தெளிந்த அறிவுடையவன், வமிசவிருத்தியுடையவன், பிரபு, சதாச்சாரமுடையவன்.

(7) குரு பதினோராவது பாவத்தில் இருந்தால் ஜாதகன் வெகு ஆயுளுடையவன், சுசியுடையவன், அறிவுடையவன், வெகு வாகனங்களுடையவன், கல்வியில்லாதவனாக ஆவன், அல்லது சந்ததியில்லாதவனாவன்.

(8) சுக்கிரன் பதினோராம் பாவத்திலிருந்தால் நல்ல சுரூபமும், அழகும், நல்ல வேலையாட்களும், வெகு ஆயுளும், போகமும், சுகமும் உடையவன், சோகமில்லாதவன், அறிவாளி.

(9) சனி பதினோராம் பாவத்திலிருந்தால் ஜாதகன் தீர்க்காயுளுடையவன், நிலையான புகழும் காந்தியுமுடையவன், புத்திரன், மித்திரன், தனம், ரோகமின்மை, வெகு அறிவு முதலியன உடையவன்.

(10) பதினோராம் பாவத்தில் ராகு இருந்தால் ஜாதகன் ஆச்சார வழிகளறிவன், சூரன், தனவான், சற்ஜனப் பிரியன்.

(11) ராகு கேந்திர திரிகோணங்களிலிருந்தால் ஜாதகன் ராஜ்ஜிய லாபமடைவன், (அது பதினோராம் பாவாதிபதி திசை வந்தால் அப்போது அடைவான்.)

(12) பதினோராம் பாவாதிபதி சத்துரு நீச்ச ஸ்தானங்களை அடைந்திருந்தால் குறைவும், கல்வியும், நல்ல அறிவுமுடையவன்.

(13) லக்கின பாவாதிபதியும் பதினோராம் பாவாதிபதியும் கூடியிருந்தாலும், மூன்றும் பாவத்தை பார்த்தாலும், அப்போது மூன்றும் பாவாதிபதியும் பலஹீனனாக இருந்தாலும் ஜாதகன் சகோதரன் தனத்தை அபகரிப்பான்.

(14) பதினோராம் பாவாதிபதி சந்திரனாகி குரு, சுக்கிரன், புதன் இவர்களால் பார்க்கப்பட்டாலும், கூடியிருந்தாலும் ஜாதகன் நரவாஹனம் முதலிய உடையவனாவன், ஆயுள் உள்ளவரையில் ஐஸ்வரியத்தை அனுபவிப்பவன், இவர்கள் சத்துரு, நீச்ச பாவங்களில்இருந்தாலும், அஸ்தங்கத மடைந்தாலும் நிஷ்பலமாய் யோக மின்றியிருப்பன்.

(15) பதினோராம் பாவாதி தன் உச்சத்தில் அல்லது சொட்க்ஷேத்திரத்தில் அல்லது மித்திரராசியில் இருந்தால் பலன்கள் கிரமமாக உச்சத்தில் பூர்ண பலமும், சொட்க்ஷேத்திரத்தில் அரைப்பலனும், மித்திர ராசியில் கால் பலனும் அடைவன், சத்துரு, நீச்ச ஸ்தானங்களில் இருந்தால் (நிஷ்பலனாக) பலமில்லாமலும் போய்விடும்.

(16) பதினோராம் பாவாதிபதி லக்கின பாவத்தில் இருந்து லக்கின பாவாதிபதியுடன் கூடியிருந்தாலும், லக்கின பாவாதிபதியால் பார்க்கப்பட்டிருந்தாலும், தீர்க்காயுளும், தேகபுஷ்டியும், நரவாகனமும் அடைவன்.

(17) பதினோராம் பாவாதிபதி இரண்டாம் பாவத்திலிருந்து இரண்டாம் பாவாதியுடன் கூடியிருந்தாலும், இரண்டாம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டாலும், மித்திர ராசியில் அந்த பாவாதிபதியிருந்தாலும் ஜாதகன் தனலாபமடைவன்.

(18) பதினோராம் பாவத்தில் ஏழாம் பாவாதிபதியிருந்து சுபருடன் கூடியிருந்தாலும், சுபரால் பார்க்கப்பட்டாலும் அத்தனை ஸ்திரீகளை (மனைவிகளை) ஜாதகன் அடைவான், பாபர் பார்த்தால் அத்தனை ஸ்திரீகளும் மரிப்பார்கள்.

(19) பதினோராம் பாவாதிபதியாகிய சூரியன் சந்திரனுடன் கூடியிருந்தாலும், சந்திரனால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் அரசன்.

(20) பதினோராம் பாவாதியாகிய செவ்வாய் பதினோராம் பாவத்திலிருந்தால் ஜாதகன் அரசனால் ஜீவிப்பான். புதன் பதினோ

ராம் பாவாதிபதியானல் ஜாதகன் கணிதவித்தையாலும், புத்திரனுலும் ஜீவன மடைவான்.

(21) குரு பதினேராம் பாவாதிபதியாகி பதினேராம் பாவத்திலிருந்தால் ஜாதகன் பிராம்மணன், வித்தை, புத்தி இவற்றுல் பிழைப்பான்.

(22) சுக்கிரன் பதினேராம் பாவத்திலேயே யிருந்தால் ஜாதகன் ஸ்திரீகளாலும், யானை, குதிரை, எருமை இவற்றுலும் ஜீவிப்பான். வேறு சிலர் ராஜ ஸ்திரீயால் ஜீவிப்பான் என எண்ணுகின்றனர்.

(23) சனி பதினேராம் பாவாதிபதியாகி பதினேராம் பாவத்திலிருந்தால் ஜாதகன் சூத்திரத் தொழிலாலும், மேற்படி சனி விருச்சிக ராசியில் இருந்தால் நீச்சத்தொழிலுடையவனுகி அதனுலும் ஜீவிப்பான்.

(24) சனி நான்காம் பாவத்தில் பதினேரும் பாவாதிபதியுடன் கூடியிருந்தால் ஜாதகன் சகோதர நாசமும், தான்னிய நாசமும் அடைவன்.

(25) பதினேராம் பாவாதிபதி சுபருடன்கூடி நான்காம் பாவத்தில் தன் உச்ச, மித்திர ராசிகளில் இருந்தால் ஜாதகன் கல்வி, விநயம், சம்பத்து சிவசூஷணை, முதலியன உடையவன், குணமுடையவன், மிக்க தெளிவுடையவன், சுகீ, சகோதர சுகமுடையவன்.

(26) பதினேராம் பாவாதிபதி எவராகினும், தன் உச்ச மித்திர க்ஷேத்திரத்திலிருந்தால் அந்த பாவாதிபதி மூலம் தனம் அடைவான்.

(27) பதினேரும் பாவாதிபதி எந்த சத்துரு பாவத்தில் இருக்கிருரோ அந்த சத்துரு பாவத்தின் தனத்தை ஜாதகன் அபகரிப்பான். லக்கினுதிபதி சத்துரு ராசியில் இருந்தால் ஜாதகன் தனத்தை சத்துருக்களடைவார்கள்.

(28) லக்கின பாவாதிபதி பதினேராம் பாவத்தில் தன் உச்ச ராசியில் இருந்து, பாபதிருஷ்டியில்லாதிருந்தால் தேககாந்தியும், விசேஷ சுகமும், ஆயுள்மட்டும் உடையவனுயிருப்பான்.

(29) பதினேரும் பாவத்திலல்லது பன்னிரண்டாம் பாவத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் இந்திரனுக்கு துல்லியனுவன்.

(30) பதினேரும் பாவத்தில் இரண்டாம் பாவாதிபதி யிருந்தாலும், தன்னுச்ச ராசியில் இருந்தாலும், பதினேராம் பாவாதிபதியுடன் கூடியிருந்தாலும், பதினேராம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் தனலாபமடைவன்.

(31) பதினேராம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்தில் இருந்து சுபருடன் கூடியிருந்தாலும், சுபரால் பார்க்கப்பட்டாலும் தகப்பன் சொத்தைவிட அதிக திரவியத்தை ஜாதகன் அடைவன்.

(32) புத்திர பாவாதிபதி பதினேராம் பாவத்தில் இருந்தாலும், தன் உச்சத்திலிருந்தாலும், மித்திர ராசியிலிருந்தாலும் ஜாதகன் களத்திர புத்திர ஸௌபாக்கியாதிகளுடையவனுவன்.

(33) எந்த ஒரு பாவாதிபதியாயினும் பதினேராம் பாவத்தை யடைந்திருந்தால் அந்த பாவாதிபதி அந்தப் பாவத்தின் பலனைக் கொடுப்பார். லக்கினுதிபதிக்கும் பார்த்துக்கொள்ளவும்.

(34) ஆறு, எட்டு, பன்னிரண்டுக்குடைவர்கள் பதினேராம் பாவத்தில் இருந்தாலும், பார்த்தாலும் அவரவர் திசை புக்தி காலங்களில் லக்கினுதிபதி அப்பலனைக் கொடுப்பார்.

(35) மூன்ரும் பாவாதிபதி பதினேராம் பாவத்தில் வலுத்து இருந்தாலும், பதினேரும் பாவத்தைப் பார்த்தாலும் சகோதர ஸ்தான பலனையும், திரவியத்தையும் லக்கினுதிபதி தருவார்.

(36) பதினேராம் பாவத்தில் சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது இவர்களிருந்தால் ஜாதகனுக்கு, வித்தை, தனம், நல்ல நிர்மலமான அறிவு, குணம், ரூபம், வெகு ஆயுள் இவற்றைத் தருவார்கள்.

(37) குரு, சந்திரன், புதன், சுக்கிரன் இவர்கள் பதினேராம் பாவத்திலிருந்தால் ஜாதகருக்கு நல்ல புத்திரன், குணம், வித்தை, தனம், கீர்த்தி முதலியவற்றைத் தருவார்கள்.

# 12-வது அத்தியாயம்

## பன்னிரண்டாம் பாவம்.

——:(*)——:

(1) **தீர்க்க புத்தி, அங்கவீனம், குருடு அல்லது அக்கியானம், நீச்சச்செய்கை, மூர்க்கத்தன்மை, திரவியம் முதலானவற்றை இந்**

தப் பாவத்தின் உச்ச, மித்திர, சொட்க்ஷேத்திர கிரகங்களால அறியவும்.

(2) பன்னிரண்டாம் பாவத்தில் சுபக்கிரகங்களிருந்தால் ஜாதகன் தகுந்த செலவு, திட்டமானபடி செலவு செய்வான்.

(3) சூரியன் பன்னிரண்டாம் பாவத்திலிருந்தால் ஜாதகன் முடம், ஒற்றைக்கண், சோம்பல் இவைகளையுடையவன், மலடியின் கணவனுவன், தகப்பனுடன் விரோதமாகி யிருப்பான்.

(4) சந்திரன் பன்னிரண்டாமிடத்திலிருந்தால் ஜாதகன் குரூரம், க்ஷுத்ர உபாசனை, தூர்த்தத்துவம் அதாவது பழிக்கப்படுதல், கண்நோய், வெகு மூர்க்கம், பந்துக்களால் விடப்படுதல் இவைகளை அடைவான். வேறு சிலர் சந்திரன் லக்கினத்திற்குப் பன்னிரண்டாமிடத்திலிருந்தால் ஜாதகன் வெகு அறிவும், நாணயமும், ஒழுக்கமும் உடையவன் என்கின்றனர்.

(5) செவ்வாய் பன்னிரண்டாம் பாவத்தில் இருந்தால் ஜாதகன் நீதியுடையவன், வெகு சாஸ்திரமறிந்தவன், எப்போதும் தரித்திர பீடையுடையவன், ஆபத்துக்களைத் தெரிவிப்பான், நீச்சன், எப்போதும் கள் குடிப்பவன், சுய ஜனங்களால் கட்டுப்படுதலை யடைவான்.

## முற்றிற்று.

---

## கடினமான பதங்களின் விளக்கமும், குறிப்புகளும்

——:(*):——

(1) 17-வது பக்கம், 1-வது அயிட்டம், மூன்றும் பாவம் சகோதர பாவம் என்று எல்லோருக்கும் நன்குத் தெரிந்த விஷயமானதால் அதை இங்கு கிரந்தகர்த்தர் சொல்லவில்லை. சகோதர விஷயமும் மூன்றும் பாவத்தால் அறியவும்.

(2) 21-வது பக்கம், 1-வது அயிட்டம், நான்காவது பாவத்தினுல் தாய் விஷயமும் அறியவும்.

(3) 29-வது பக்கம், 82-வது அயிட்டம், திருடமில்லாத என்றால் திடமில்லாத, வலிவில்லாத என்று அர்த்தம்.

(4) 39-வது பக்கம், 165-வது அயிட்டம், சேது என்பது பாளம் அல்லது வாராவதி ஆகும்.

(5) 39-வது பக்கம், 168-வது அயிட்டம், தேகராசி என்பது லக்கின ராசியாகும்.

(6) 42-வது பக்கம், 1-வது அயிட்டம், ஐந்தாவது பாவத்தினல் புத்திர, புத்திரி விஷயமும் அறியவும்.

(7) 47-வது பக்கம், 45-வது அயிட்டம், தத்தன் என்றால் தத்து பிள்ளை ஆகும். கிரீதன் என்றால் விலைக்கு வாங்கிய பிள்ளை ஆகும்.

(8) 47-வது பக்கம், 47-வது அயிட்டம், கூடோத்பன்னன் என்றால் ரகசியமாய் உண்டான பிள்ளை ஆகும்.

(9) 48-வது பக்கம், 52-வது அயிட்டம், கானீனன் என்றால் தாய்க்குக் கலியாணமாவதற்கு முந்தி பிறந்த பிள்ளை ஆகும்.

(10) 50-வது பக்கம், 71-வது அயிட்டம், ஔரஸ புத்திரன் என்றால் தனக்கே பிறந்த பிள்ளை.

(11) 55-வது பக்கம், 105 அயிட்டம், க்ஷேத்திரஜ புத்திரன் என்பது தன் மனைவிக்குப் பிறந்தபிள்ளை ஆகும்.

(12) 59-வது பக்கம், 15-வது அயிட்டம், திர்யக் ஜந்துக்கள் என்பது மனிதன், நாற்கால் பிராணி, இவைகள் அல்லாத பறவை, பாம்பு, புழு முதலியன.

(13) 64-வது பக்கம், 70-வது அயிட்டம்- ஆறும் பாவத்தில் சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது இவர்கள் இருந்தால் முறையே ஆரோக்கியம், சுகம், நல்ல ரூபம் (நிஷ்கபடமான, அழுக்கற்ற, மாசற்ற) தேஜசு, தீர்க்காயுள் இவைகள் உண்டாகும். புதன், குரு, சுக்கிரன், சந்திரன் முதலியவர்கள் ஆறும் பாவத்தில் இருந்தால் புத்தியின்மை, மரணம், அதிக நிஷ்டூரம், வெட்கமின்மை இவைகள் பலனாக உண்டாகும்.

ஜாதக ஜம்புநாதீயம் முற்றிற்று.

---

Printed at "SIRONMANI" PRESS, No. 10, Sundara Mudaly St. 3rd Lane, Sowcarpet Post, Madras.

## C. G. ராஜன், B. A. (*Mathematics*) அவர்களால் எழுதப்பட்ட புத்தகங்கள்

# ஜாதக கணிதம்

முதல் பாகம் என்னும்

## ஜோதிட கிரக சட்பலம் ஆயுள்கணிதம்

(மூன்றும் பதிப்பு).

இதில் தசவர்க்கம், கிரக சட்பலம், கிரகங்களின் வலிவின் தாரதம்மியம், பாவச் சக்கிரம், துவாதச பாவ பலம், உச்ச பலம், திக்குப் பலம், பட்ச பலம்,கிரக யுத்த பலம், ஹோரா பலம், அயன பலம், கிரக திருஷ்டி பலம் முதலிய 24வித பலங்கள், ஆயுள் இவைகளை வெகு சுலபமாகக் கணிக்க அநேக வாக்கியங்களும் (Tables), குளிகாதி ஐவர் ஸ்புட கணனமும், பிராண ஸ்புடம், தேக ஸ்புடம், மிருத்யு ஸ்புடம் உதாரணங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கிரகங்களின் வலிவை அனுசரித்து பலாபலன் அறிவதற்கும், ஆயுள் கணிதத்தில் அரணம் செய்வதற்கும், பிருஹத் ஜாதகம், ஸ்ரீபதி ஜாதக கர்ம பத்ததி, கேசவ ஜாதக கர்ம பத்ததி, பலதீபிகை இவைகளைச் சுலபமாயும், நன்றாயும் அறிவதற்கும் இப்புத்தகம் மிகவும் உபயோகமாகும். இதை யாவரும் பிறருடைய உதவி யின்றித் தாமே படித்துத் தெரிந்துகொள்ளலாம். இந்த மூன்றும் பதிப்பில் சேஷ்டா பலம் கணிக்கத் தேவையானப் புதிய விஷயமாகிய கிரக உவா, உவாந்தம், வக்கிர ஆரம்பம், வக்கிர நிவர்த்தி அக்காலத்தில் கிரக ஸ்புடம் ஆகிய இவைகளை 1891-ம் ஹூ முதல் 1941-ம் ஹூ வரையில் இருபத்தேழு பக்கங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது கெவர்ன்மெண்ட் டெக்ஸ்ட் புக் கமிட்டியாரால் (Text Book Committee) லைப்ரரி (Library) உபயோகத்திற்காக அங்கீகாரஞ் செய்யப்பட்டது. இது சிரோன்மணி சுத்த திருக்கணித பஞ்சாங்க கணிதரும் பிருஹத்ஜாதகத்தின் பதிப்பாசிரியரும், நவக் கிரக ஸ்புட கணனமாகிய இராஜ ஜோதிடகணிதம், ஜாதக கணிதம் இரண்டாம் பாகம் என்ற ஜாதக பலாபலன்கள் நிர்ணயம் முதலிய புத்தகத்தின் ஆசிரியருமாகிய C. G. ராஜன் B. A. (Mathematics) அவர்களால் எழுதப்பட்டது. கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. 346 பக்கம் உடையது. விலை ரூ. 2—8 0

தபால் செலவு அணா 7 பிரத்தியேகமானது.

குறிப்பு:—ஜாதக கணித சாகரம், ஜாதக சாகரம் என்ற வேறு பெயருடைய புஸ்தகங்கள் சி. ஜி. ராஜன் இவர் குமாரர் சி. சுப்பிரமணியம் இவர்களால் எழுதப்பட்டனவுமல்ல, அச்சிடப்பட்டனவுமல்ல என்றதை அறியவும். சி. ஜி. ராஜன், C.சுப்பிரமணியம் இவர்கள் எழுதிய அல்லது பார்வையிடப்பட்ட புத்தகங்களில் "சி. ஜி. ராஜன்" C. சுப்பிரமணியம் என்ற பெயரை வெளிப்படையாகப் போட்டிருக்கிறதா என்று கவனித்து வாங்கவும்.

# ஜாதக கணிதம்

இரண்டாம்பாகம் என்னும்

## ஜாதகப் பலாபலன்கள் நிர்ணயம்

இதில் கிரக சட்பலம், துவாதச பாவ பலம், ஜாதக கணிதத்தின் முதல் பாகத்தின் முன்னுரையில் குறித்துள்ள உச்ச பலம், திக்குப் பலம், பட்ச பலம், கிரக யுத்த பலம், ஹோரா பலம், அயன பலம், கிரக திருஷ்டிப் பலம் முதலிய 24 வித பலங்கள் முதலிய கிரக பாவ வலிவுகளை அநுசரித்துப் பலன்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும் ஜாதக கணிதம் பிரகாரம் கிரக சட்பலம், பாவ பலம் முதலியவைகளைக் கணிக்கச் சந்தர்ப்பப்படாதபோது சாதாரண வழி பிரகாரம் கிரகங்களின் பலத்தையூகித்துப் பலாபலன் நிர்ணயஞ்செய்யும் மார்க்கத்தையும் கொடுத்திருக்கிறது. மிகவும் புராதீனமான சிறந்த கிரந்தங்களில் கொடுக்கப்பட்டுள்ள விஷயங்களில் மிகவும் அவசியமாயும், சிறந்ததாயும் உள்ள விஷயங்களையும், விதிகளையும் இப்புத்தகத்தில் கொடுத்திருக்கின்றது. சில நாடிக் கிரந்தங்களில் கொடுக்கப்பட்டுள்ள விதிகளையும் இந்தப் புத்தகத்தில் கொடுத்திருக்கின்றது. இது ஜாதகப் பலாபலன் சொல்லுவதற்கு மிகவும் உபயோகமானது. இது சிரோன்மணி சுத்த திருக் கணித பஞ்சாங்க கணிதரும், நவக்கிரக ஸ்புட கணனமாகிய இராஜ ஜோதிட கணிதம் என்ற புத்தகத்தின் ஆசிரியரும், பிருஹத் ஜாதகத்தின் பதிப்பாசிரியருமாகிய C. G. ராஜன் B. A., (*Mathematics*) அவர்களால் எழுதப்பட்டது. கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. 416-பக்கம் உடையது. இதன் விலை ரூ. **2—12—0**

தபால் செலவு அணா-7 பிரத்தியேகமானது.

## ஜாதக கணிதம் மூன்றும் பாகம்

என்னும்

# ஜாதக ராஜ மனோரஞ்சிதம்.

மலர் 1.

(Astrological Dogmas employed in Nadi Granthas.)

இதில் மேஷம் முதல் மீனம் வரையிலுமுள்ள ஒவ்வொரு லக்கினத்திற்கும் நூற்றறுபத்தைந்து முதல் இருநூற்றறுபத்து நான்கு வரையிலுமுள்ள விதிகள் அதாவது மொத்தத்தில் இரண்டாயிரத்து ஐந்நூற்று பதினொன்று வித கிரக அமைப்பு விதிகளும் அவைகளால் உண்டாக்கக்கூடிய பலாபலன்களும் விவரமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் ஜாதகருடைய சர்வ பலன்களும், அவருடைய தாய், தகப்பன், அவருடைய சகோதர சகோதரி, அவருடைய தகப்பனுடைய சகோதர சகோதரி, அவருடைய அம்மான், அவருடைய மாற்றாந்தாய், அவருடைய மாற்றாந் தாயின் புத்திர புத்திரிகள், அவருடைய மாமனார் ஆகிய இவர்க

ளுடைய பலன்களும் அந்தந்த ஆதிபத்திய காரக கிரக நிலைகளை யும் கிரக பார்வையும், கிரக சம்மந்தத்தையும் அனுசரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பலாபலன்கள் விருத்த வசிஷ்டர், பராசர், நாரதர், காசிபர், ஜெயமுனி, கர்கர், பிருகு, சத்தியாச்சாரி மனு, விஷ்ணு, ஈஸ்வரர், யவனர், மயன் இவர்கள் கொள்கைபடி கொடுக்கப்பட்டிருக்கின்றன. C. G. ராஜன் B.A., (*Mathematics*) அவர்களால் எழுதப்பட்டது. 546 பக்கம் உடையது. இதன் விலை ரூ. 3—4—0 தபால் செலவு அணா-9 பிரத்தியேகமானது.

## ஜாதக கணிதம் நான்காம் பாகம்

என்னும்

# ஜாதக ராஜ மனோரஞ்சிதம்

மலர் 2.

(Astrological Dogmas employed in Nadi Granthas.)

இதில் மேஷம் முதல் மீனம் வரையிலுமுள்ள ஒவ்வொரு லக்கினத்திற்கும் தொண்ணூறு முதல் நூற்றைம்பத்தெட்டு வரையிலுமுள்ள விதிகள் அதாவது மொத்தத்தில் ஆயிரத்து ஐந்நூற்றைம்பது வித கிரக அமைப்பு விதிகளும், அவைகளால் உண்டாகக்கூடிய பலாபலன்களும் விவரமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் ஜாதகருடைய சர்வ பலன்களும், அவருடைய தாய், தகப்பன், அவருடைய சகோதர சகோதரி, அவருடைய தகப்பனுடைய சகோதர சகோதரி அவருடைய அம்மான், அவருடைய மாற்றாந்தாய், அவருடைய மாற்றாந்தாயின் புத்திர புத்திரிகள், அவருடைய மாமனர் ஆகிய இவர்களுடைய பலன்களும், அந்தந்த ஆதிபத்திய காரக கிரக நிலைகளையும், கிரக பார்வையையும், கிரக சம்மந்தத்தையும் அனுசரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பலாபலன்கள் விருத்த வசிஷ்டர், பராசர், நாரதர், காசிபர், ஜெயமுனி, கர்கர், பிருகு, சத்தியாச்சாரி, மனு, விஷ்ணு, ஈஸ்வரர், யவனர், மயன் இவர்கள் கொள்கைபடி கொடுக்கப்பட்டிருக்கின்றன. C. G. ராஜன் B.A., (*Mathematics.*) அவர்களால் எழுதப்பட்டது. 312 பக்கம் உடையது. இதன் விலை ரூ. 2—4—0 தபால் செலவு அணா-7 பிரத்தியேகமானது.

## ஜாதக சிரோன்மணி

என்னும் வராஹமிஹிரருடைய

# பிருஹத் ஜாதகம்

இது தமிழில் சுலபமான வசன நடையில் எழுதப்பட்டது. இதில் விசேஷ வியாக்கியானங்களும், கஷ்டமானவிடங்களில் உதாரணங்களும், வாக்கியங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆயுர்தாய அத்தியாயமாகிய ஏழாவது அத்தியாயம் மிகவும் தெளிவாக உதாரணங்களுடன் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆயுளைச் சுலப

மாகக் கிரகங்களின் வலிவை அனுசரித்து நிர்ணயிக்கும் விதி பிரத்தியேகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இராஜ யோகம், கிரக யோகம், நாபச யோகம், சங்கிய யோகம் முதலிய யோக அத்தியாயங்கள் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் இதர கிரந்தங்களிலிருந்து விஷயங்கள் எடுத்து தேவையானவிடத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இது கவர்ன்மெண்ட்டு டெக்ஸ்ட் புக் கமிட்டியாரால் (Text Book Committee) லைப்ரரி (Library) உபயோகத்திற்காக அங்கீகாரஞ் செய்யப்பட்டது. இது சிரோன்மணி சுத்த திருக்கணித பஞ்சாங்க கணிதரும், ஜாதக கணிதம் என்ற புத்தகத்தின் ஆசிரியரும், நவக் கிரக ஸ்புட கணனமாகிய இராஜ ஜோதிட கணிதம் என்ற புத்தகத்தின் ஆசிரியருமாகிய C. G. ராஜன் B.A., (*Mathematics*) அவர்களால் எழுதப்பட்டது. கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. 318 பக்கம் உடையது.

இதன் விலை ரூ. **2—0—0**

தபால் செலவு அணா-7 பிரத்தியேகமானது.

(தமிழில்)

# நவக்கிரக ஸ்புட கணனம்

என்னும்

# சித்தாந்த இராஜ சிரோன்மணி

(கிரக கரணம்)

**C. G.** ராஜன் B.A., அவர்களால் செய்யப்பட்டது.

இந்தப் புத்தகத்தின் உதவியால் கலியுகம் பிறப்பதற்கு முந்தி 98-வது வருஷம் முதல் கலியுகம் 6202-வரைக்கும் உள்ள காலங்களில் எந்தகாலத்திற்காகிலும் கிரகஸ்புடங்கள் சுலபமாகவும், துல்லியமாகவும் கணிக்கலாம். கிரகஸ்புடங்களைக் கணிக்க அனேக வாக்கியங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கணித மார்க்கங்களை விளக்கும் பொருட்டு ஒவ்வொரு கிரகஸ்புடத்தைச் செய்யும் வழியை உதாரணத்தால் விளக்கிக்காட்டியிருக்கிறது. கணிதத்தைச் சுலபமாக்க வேண்டிய மார்க்கங்களையும் அனுஷ்டித்திருக்கிறது. நமது பழைய வானசாஸ்திர மார்க்கங்களால் துல்லியமான ஸ்புடம் அடைய முடியாமல் இருப்பதால் துல்லியமான ஸ்புடங்கள் அடைய வேண்டியதற்காகச் செய்ய வேண்டிய மார்க்கங்களையும் இந்த புஸ்தகத்தில் அனுஷ்டித்து இருக்கிறது. மேலே சொல்லிய கிரக ஸ்புட வாக்கியங்களும் அன்றி அடியிற் கண்ட விஷயங்களும் இந்த புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன:—அவை (1) நட்சத்திர ஹோரா மணி 8-வாக்கியங்களுடன், (2) கிரகணம் சம்பவிக்குமா இல்லையா என்பதைத் தீர்மானஞ் செய்தல், (3) தற்காலத்தில் அனுஷ்டானத்தில் உள்ள பலவிதமான மணி மினிட்டுகள், (4) அயனம்சம், (5) லகுஜா கணிதம், (6) அங்க கணிதம், (7) தசாம்ச கணிதம், (8) கிராந்தி கணிதம் முதலிய கணிதங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது

சிரோன்மணி சுத்த திருக் கணித பஞ்சாங்க கணிதரான C. G. ராஜன் B. A., அவர்களால் செய்யப்பட்டது. 564-பக்கங்கள் அடங்கியது. ராயல் சயிசில் கலிகோ பைண்டு செய்தது. அழகிய கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. கொஞ்சம் பிரதிகளே தயாராகி இருக்கின்றன.

தமிஷில் விலை ரூ. **5—0—0** இங்கிலீஷில் விலை ரூ. **5—0—0**

தபால் செலவு அணா 0-12-0 பிரத்தியேகமானது.

## "லக்கின ஸ்புட, பாவ ஸ்புட கணிதம்"

## (Tables of Bhavas,

என்ற புத்தகம் வெளியாகி இருக்கிறது. இது இந்தியா, சிலோன், பர்மா, சிங்கப்பூர் முதலிய ஸ்ட்ரெயிட்ஸ் செட்டில் மெண்டு, பெடரேட்டு மலேயா ஸ்டேட்ஸ், மொருசீஷ், தென் ஆப்பிரிகா முதலிய இடங்களுக்கு சைடீரியல் டயம் என்ற நட்சத்திர ஹோராமணி நிமிஷத்திலிருந்து லக்கின ஸ்புடம் பாவ ஸ்புடம் கணிக்க மிகவும் உபயோகமானது. அக்ஷாம்சம் பாகை 0 முதல் 36 பாகை வரையிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது C. G. ராஜன் B. A., (*Mathematics*) அவர்களால் செய்யப்பட்டது.

இங்கிலீஷ் **1—4—0** தமிழில் **1—8—0**

## ஜாதக ராஜ "பாவ இருவாக்ஷி"

## ஆயுள், ஜீவன, களத்திர பாவங்கள்

மலர் 1.

இது பெரும்பாலும் நாடிக் கிரந்தங்களில் உபயோகப்படுத்தப்பட்ட விதிகளின் திரட்டு முதலியன ஆகும். 102 பக்கம் உள்ளது. கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. இது C. G. ராஜன் B.A. (*Mathematics*) அவர்களால் ஆக்கப்பட்டது.

விலை ரூ. **0—10—0** தபால் செலவு பிரத்தியேகம்.

## ஜாதக ராஜ "பாவ இருவாக்ஷி"

## ஆயுள், ஜீவன, களத்திர பாவங்கள்

மலர் 1.

**பாகம் நெ. 2 களத்திர பாவம் என்ற ஏழாம் பாவம்.**

இது பெரும்பாலும் நாடிக் கிரந்தங்களிலும் புராதீனமான சிறந்த கிரந்தங்களிலும் கொடுக்கப்பட்டுள்ள விதிகளின் திரட்டு முதலியன ஆகும். இந்த நாடிகளும் கிரந்தங்களும் சுக்கிர நாடி, கேரள நாடி, துருவ நாடி, சத்திய சம்ஹித நாடி, யோக நாடி, சூரிய நாடி, சந்திர நாடி, குஜ நாடி, புத நாடி, குரு நாடி, சனி நாடி என்ற சர்வ சங்கிரக நாடி, சாம்பசிவ நாடி, கார்க்கிய நாடி

ஜம்புநாதீயம், கர்மயோக பலாத்யாயம், லக்கினாதிபதி நாடி, பாவ நாடி, காலார்ணவம், தேவகேரளம் என்ற சந்திர கலா நாடி, சுகர் வாக்கியம் என்ற சுகர் நாடி, பிருஹத் பராசர ஹோரை, நாரதீயம், பார்க்கவ நாடி, லக்ஷ்மி நரசிம்ம சம்வாதம் முதலியவைகளாகும். இது C. G. ராஜன் B. A. (*Mathematics*) அவர்களால் ஆக்கப்பட்டது. 82 பக்கம் உள்ளது, கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது.

விலை ரூ. **0—10—0** தபால் செலவு பிரத்தியேகம்.

# தெசா புக்தி சிந்தாமணி

இப்புத்தகத்தில் பல அருமையான ஜோதிட கிரந்தங்களிலிருந்து சாராம்சத்தை எடுத்து ஒன்றாகச் சேர்த்து ஒழுங்காக அமைத்து எழுதி இருக்கின்றது. ஜாதக பலாபலன்களைச் சொல்ல வேண்டுமானால் அப்பலன்கள் நடைபெறும் காலம் முக்கியமானது. இக்காலத்தை தெசா புக்தி அந்திரம் என்ற கிரக பலன்கள் நடக்கும் காலத்தைக் குறிக்கின்ற ஜோதிடப் புத்தகங்களால் அறிய வேண்டுமே ஒழிய வேறே வழி ஒன்றும் கிடையாது. இப்படிப் பட்ட புத்தகங்களில் இப்புத்தகம் மிகவும் அருமையானது. இப் புத்தகம் பலாபலனைச் சொல்லத் துணிகின்ற ஒவ்வொரு ஜோதிடரிடத்திலும் இருக்க வேண்டியது அவசியம். மற்றப் புத்தகங்களைப் போல் இராமல், இப்புத்தகத்தில் தெசா புக்தி பலன்களைக் கிரகங்கள் இராசியிலும், பாவச் சக்கிரத்திலும் இருக்கும் நிலையையும், அவைகளுடன் சம்மந்தப்பட்ட கிரகங்களையும், அவைகளைப் பார்க்கும் கிரகங்களையும் அனுசரித்து, விபரமாகவும், விஸ்தாரமாகவும் சொல்லி இருக்கின்றது. இது மிகவும் ஜோதிட அனுபோகமும், பயிற்சியுமுள்ள சேந்தமங்கலம், கோமடம், ஜோதிடர், ஸ்ரீநிவாச அய்யங்காரால் சில ஜோதிடர்களின் வேண்டுகோளுக்கிணங்க எழுதப்பட்டு, C. G. ராஜன் B.A., (*Mathematics*) அவர்களால் பார்வையிடப்பட்டது. அழகிய கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. 212 பக்கம் உடையது. இதன் விலை ரூ. **1—8—0**

தபால் செலவு அணா 7 பிரத்தியேகமானது.

# ஜாதக தெசாரிஷ்ட நிவாரணி

இதில் தெசா புக்தி, அந்திர காலங்களில் சம்பவிக்கும் வியாதி, கஷ்டம் முதலிய கெட்ட பலன்களை நிவர்த்திக்கச் செய்ய வேண்டிய நவக் கிரக சாந்திகளின் விபரத்தை விஸ்தாரமாகச் சொல்லி இருக்கிறது. இது ஜோதிடர்களுக்கும் மற்றவர்களுக்கும் மிகவும் அவசியமானது. இது சேந்தமங்கலம், கோமடம், ஜோதிடர் ஸ்ரீநிவாஸ அய்யங்காரால் எழுதப்பட்டு C. G. ராஜன் B.A., (*Mathematics*) அவர்களால் பார்வையிடப்பட்டு, கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. 86 பக்கம் உடையது, தபால் செலவு பிரத்தியேகமானது. இதன் விலை அணா **0—6—0**

இந்த புத்தகம் தனியாய் வாங்குபவர்கள் 8-அணா ஸ்டாம்பு அனுப்பினால் புக்போஸ்டில் அனுப்பப்படும்.

ஜாதக

## சர்வார்த்த சிந்தாமணி.

இந்த புத்தகம் வெளியாகி இருக்கிறது. இப்புத்தகத்தில் அநேக அபூர்வமான விஷயங்களை ஒன்றாகத் திரட்டி ஜோதிடர்கள் பல பாகங்களை சுலபமாக அறியும்படியாய் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இது C. G. ராஜன், B. A. (Mathematics) அவர்களாலும், அவர் குமாரன் C. சுப்பிரமணியம் அவர்களாலும் மொழி பெயர்க்கப்பட்டது 292 இதன் விலை ரூ. 2—4—0

தபால் செலவு பிரத்தியேகம்.

## ஜாதக ராஜ "பாவ இருவாக்ஷி"
## ஆயுள், ஜீவன, களத்திர பாவங்கள்

மலர் 1.

கூடிய சீக்கிரத்தில் வெளிவரும்.

குறிப்பு:—

சிலர் C. G. ராஜன்பெயரைச் சொல்லி அதனால் பிரகாசிக்கவேணும் என்று கெட்ட எண்ணங்கொண்டு இருக்கின்றார்கள். அவர்கள் C. G. ராஜனுக்குத்தெரியாமல் தாங்கள் சி. ஜி. ராஜன்அவர்களிடம் ஜோதிடத்தில் பழகினவர்கள் என்று தெரிவித்துக் கொண்டால் அதை நம்பவேண்டாம். மேலும் அச்சிட்டு வெளியாகிவந்துவிட்ட சி.ஜி. ராஜனுடைய ஜோதிடபுத்தகங்கள் விஷபமாக அவைகள்இப்போது செலவாகிவிட்டன, கிடைக்காது என்று தெரிவித்தாலும் அதையும் நம்பவேண்டாம், அவைகள் எப்போதும் கீழ்க்கண்ட விலாசத்தில் தவக்கமின்றி கிடைக்கும் என்பதையும் தெரிந்து கொள்ளும்படி இதனால் கோரப்படுகின்றது.

C. G. ராஜன் B.A. (Mathematics) அவர்களுக்கும் ஆனந்த போதினி பத்திரிராதிபர் என்ற ஆனந்த போதினி கம்பனியின் சொந்தக்காரருக்கும் புத்தகம் விஷயமாய் மனஸ்தாபம் ஏற்பட்டுவிட்டபடியால் சி. ஜி. ராஜன் எழுதிய புத்தகங்கள் ஒன்றும் ஆனந்த போதினி கம்பனிகாரருக்கு C. விஸ்வநாதம் கம்பனியிலிருந்து இனிமேல் சப்ளை செய்யப்படமாட்டாது என்ற விஷயம் அறியவும்.

ஒ. பி. லக்ஷிமி நரசிம்மாச்சாரியாரிடம் சி. ஜி. ராஜன் B.A. அவர்களுடைய புத்தகம் கிடைக்கும் என்று முந்தி போட்டிருந்தது. இவர்கள் இருவருக்குள் புத்தகம் விஷயமாக மனஸ்தாபம் ஏற்பட்டுவிட்டபடியால் சி. ஜி. ராஜனுடைய புத்தகங்கள் ஒ. பி. லக்ஷிமிநரசிம்மாச்சாரியாருக்கு இனி சப்ளைசெய்யப்படமாட்டாது.

---

கிடைக்குமிடம் :—(1) சி. விஸ்வநாதம் அண்டு கோ.,
நெ. 7, வெங்கடேச மேஸ்திரி தெரு,
சௌகார்பேட்டை போஸ்ட், மதராஸ்.

(2) சி. சுப்பிரமணியம்
நெ. 70, பேடல்ஸ் ரோட், பெரம்பூர், மதராஸ்.